ஒளிவிளக்கு

முனைவர் க.த.திருநாவுக்கரசு

M.A., (Tamil), M.A., (History), M.Litt., Dip.Ing., Phd.,

வெளியீடு

மணியகம்

3/30 . இரண்டாவது பிரதான சாலை.
கோட்டூர்த்தோட்டம். கோட்டூர்புரம்.
சென்னை 600085.
9444453737

ஒளி விளக்கு

முனைவர்
க. த. திருநாவுக்கரசு

வெளியீடு
மணியகம்
3/30, இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை–600 085
9444453737

நூல் விவர அட்டவணை

தலைப்பு	:	ஒளி விளக்கு
பொருள்	:	திறனாய்வு – ஆராய்ச்சி
ஆசிரியர்	:	முனைவர் க.த.திருநாவுக்கரசு
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	இரண்டாம் பதிப்பு –அக்டோபர் 2024 முதற்பதிப்பு – 20.11.1931 மறுபதிப்பு –1979 பாரிநிலையம், சென்னை
நூலின் அளவு	:	1/8 டெமி
பக்கங்கள்	:	viii + 184 = 192
தாள்	:	80 GSM Maplitho
எழுத்துரு	:	Tau–Marutham – Pt.11
அச்சிட்டோர்	:	அரசு ஆர்ட்ஸ் 78, சீனிவாசபெருமாள் சன்னதி முதல் தெரு, இராயப்பேட்டை, சென்னை –600 014 044 – 28351101, 28588056 E–mail : arasuarts@gmail.com www.arasuarts.com
வெளியீடு	:	மணியகம் பதிப்பகம் 3/30, இரண்டாவது பிரதான சாலை, கோட்டூர் தோட்டம் கோட்டூர்புரம் சென்னை – 600 085 9444453737, tambalavanan@gmail.com
உரிமை	:	பதிப்பகத்திற்கே
விலை	:	இலவச வெளியீடு
எண்ணிக்கை	:	25 புத்தகங்கள்
ISBN	:	978–93–48345–93–6

முதல் பதிப்பின் பதிப்புரை

டாக்டர் க. த. திருநாவுக்கரசு அவர்கள், ஆழமாகச் சிந்தித்து, தாம் எடுத்துக்காட்டும் முடிவுகளை அழுத்தமாகவும் தெளிவாகவும் வெளியிட்டு, தமிழிலக்கியத்திற்குச் செறிவு சேர்ப்பதில் வல்லமையும், அதற்கேற்ற நல்ல புலமையும் மனவூக்கமும் உடையவர்.

அவர்தம் திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பே இந்த ஒளிவிளக்கு. ஒளி செய்யும் விளக்குப் போலவே, பல மயக்க இருட்படலங்களை அகற்றித் திருக்குறளின் உலகளாவிய பெருமையைப் பரப்புவன இக்கட்டுரைகள்

எங்கள் நிலையத்தின் வழி, ஒளிவிளக்கு தமிழ்நாட்டில் ஒளிபரப்புவதற்கு இசைவளித்த ஆசிரியர் அவர்கட்கு எங்கள் நன்றி. தமிழ் இலக்கிய உலகம் வரவேற்றுப் போற்றுமென்று நம்புகின்றோம்.

பாரி நிலையத்தார்

முதல் பதிப்பின் முன்னுரை

திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டுவிழா நாடெங்கும், பத்து ஆண்டுகளுக்கு முன்பு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அப்பொழுது பல்வேறு கருத்தரங்குகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பினைத் திருக்குறள் ஆராய்ச்சியாளன் எனும் முறையில் பெற்றேன். இந்நூலினுள் இடம்பெற்றுள்ள 'திருவள்ளுவர் ஆண்டு' 'திருக்குறளும் சங்க இலக்கியமும்", 'முப்பாலுள் முதுமொழிகள்','பெண்ணின் பெருமை". 'உரைகள் வேண்டுமா?', 'தேசிய இலக்கியம்', 'ஒளிவிளக்கு' எனும் ஏழு எழுத்துரைகளும், 'திருக்குறள் கருத்தரங்குகளில்' அரங்கேற்றம் செய்யப்பட்டன. பின்னர், இவற்றுள் சில, மலர்களிலும், ஆய்வேடுகளிலும் வெளியிடப்பட்டன. திருக்குறளின் தனிச்சிறப்புகள்', 'காமத்துப்பாலின் கருத்தோவியங்கள்' எனும் இரு கட்டுரைகளும் சென்னைப் பல்கலைக் கழகத்துக் கீழ்த்திசை ஆய்வேட்டில் வெளிவந்தன. இவ்வாய்வுரைகளை நூல்வடிவில் வெளியிட இசைவு அளித்த, அவ்வவ் இதழ்களின் பதிப்பாசிரியர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஒன்பது வகையான கோணங்களில் வள்ளுவர் வழங்கிய தமிழ் மறையை, உலகிற்கு அறிமுகம் செய்துவைக்க இந்த ஒன்பது ஆய்வுரைகளும் முயலுகின்றன. வள்ளுவத்தை நான் புரிந்துகொண்ட முறையில், தமிழ் கூறும் நல்லுலகமும் உணர்ந்து போற்ற வேண்டும் என்னும் ஆர்வத்தினால், இவற்றைத் தொகுத்து நூலாக வெளிபிடுவதற்குத் துணிந்தேன்

இந்நூலினை வெளியிட முன்வந்த பாரிநிலையம் உரிமையாளர் உயர்திரு க.அ. செல்லப்பனார் அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன். நல்ல முறையில் நூலாக வெளிவர உதவிய அண்ணன் திரு.புலியூர்க் கேசிகன் அவர்களுக்கும், செம்மையாக அச்சிட்டுதவிய மாருதி அச்சகத்தினருக்கும் என் அன்பும் நன்றியும் என்றும் உரியனவாகும்.

சென்னை
28–12–1979

க.த.திருகாவுக்கரசு.

உள்ளடக்கம்

1. திருக்குறளின் தனிச்சிறப்புகள் 1

2. திருக்குறளும் சங்க இலக்கியமும் 16

3. திருவள்ளுவர் ஆண்டு 41

4. முப்பாலுள் முதுமொழிகள் 48

5. பெண்ணின் பெருமை 61

6. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள் 68

7. உரைகள் வேண்டுமா? 97

8. தேசிய இலக்கியம் 119

9. ஒளிவிளக்கு 128

10. நூலாசிரியரின் நூல்கள் 156

11. தமிழில் வெளியிட்ட கட்டுரைகள் 160

12. வாழ்க்கைக் குறிப்பு 177

1. திருக்குறளின் தனிச்சிறப்புகள்

உலகம் தோன்றியநாள்முதல் இன்றுவரை 23 நாகரிகங்கள் இவ்வுலகில் மலர்ந்துள்ளதாக வரலாற்றுப் பேரறிஞர் தாயின்பி கூறுகிறார். அவற்றுள் 21 நாகரிகங்கள் வாடி வதங்கி, உலர்ந்து, உதிர்ந்து இருக்கும் இடந்தெரியாமல் *பொய்யாய்ப் பழங்கதையாய்ப்' போய்விட்டன. சீன நாகரிகமும் இந்திய நாகரிகமுமே இன்றும் அழிந்தொழியாமல் தொன்றுதொட்டு நின்று நிலவிவருகின்றன.

தமிழர் நாகரிகத்தின் தொன்மையும் சிறப்பும்

இந்திய நாடு பழம்பெரும் நாடு. உலகம் வியந்து போற்றும் அருங்கலைகள் பலவற்றின் தாயகமாகவும், மெய்ப் பொருளை ஆராய்ந்தறிய முயலும் கடவுள் நெறிகள் பலவற்றின் பிறப்பிடமாகவும் இது சிறப்புற்று விளங்குகின்றது. வடஇந்தியா அயலாரின் படையெடுப்புகளால் அல்லலுற்ற காலத்தில் எல்லாம், 'இந்தியப் பண்பாட்டினை' அழிந்தொழியாதவாறு தென்னாடு போற்றிக் காத்து வந்திருக்கிறது.

தென்னாட்டில் தொன்மைச் சிறப்போடு விளங்குவது தமிழ்ப் பண்பாடு. இப்பண்பாடு தொன்றுதொட்டு இன்று வரை உயிர்த் துடிப்போடு நின்று நிலவி வருகிறது. உலகம் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும், சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் தமிழ்ப் பண்பாடு தன்னிகரற்று விளங்குவதற்குரிய காரணங்கள் பல. அவற்றுள் முதன்மையானது 'திருக்குறள்' எனும் வாழ்க்கைக்கு

இலக்கணங்கூறும் அறநூல் தமிழில் தோன்றியுள்ளமையாகும். தமிழ் இலக்கியத்துள் தலைசிறந்த படைப்பாகத் திருக்குறள் விளங்குகிறது. தமிழ் இனத்தின் சிந்தனை முதிர்ச்சியுற்ற காலத்தில், தமிழ்ச் சிந்தனைப் பூங்காவில் மலர்ந்த வண்ணமலரே திருக்குறளாகும்.

மன்பதைப் பாவலனின் மாண்பு

திருக்குறளை இயற்றிய பெரியார் இம்மன்பதைப் பாவலர்! அவர் எழுப்பியுள்ள வினாக்கள் உலகை நோக்கிய வினாக்கள். அவர் இறுத்த விடைகள் உலகை அளாவிய விடைகள். அவர்தம் எண்ணங்கள் ஞாலங் கருதிய எண்ணங்கள். அவருடைய அறவுரைகள் அனைத்துலகையும் வாழ்விக்க வழிகாட்டும் வான்பொருள்கள். அவர் கொண்ட பரிவு வையகப் பரிவு. அவருடைய நோக்கு உலகு அளாவிய தனிப்பெரும் நோக்கு. இதனால்தான் டாக்டர் ஜி. யூ. போப்பு, அவரை 'அனைத்துலக மனிதனைப் பாடும் பாவலர்' (The Bard of the Universal Man) என்று பாராட்டியுள்ளார்.

திருவள்ளுவரின் நூல், அவருடைய தெளிந்த காட்சியையும், நிறைந்த அனுபவத்தையும், ஆழ்ந்த கருத்தறி திறனையும், இனிய சொல் வன்மையையும், உண்மைகளை வெளியிடும்தூய்மைகுன்றாத் திறத்தையும் தெளிவுறுத்துகிறது. திருக்குறள் காட்டும் ஒழுக்கநெறிகள் கற்பனையில் தோன்றியனவல்ல. நடைமுறையில் கடைப்பிடிக்க முடியாத அளவு அருமையுடையனவுமல்ல. இவ்வாறு ஒப்புயர்வற்று விளங்கும் வள்ளுவரின் வாய்மொழியினை உலகத்தின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு காலங்களில், பல்வேறு அறிஞர்களால் இயற்றப்பட்டுள்ள அறநூற்களோடும், பொருள் நூற்களோடும். இன்பவியல் நூற்களோடும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, திருக்குறளின் சிறப்பிற்குரிய காரணங்கள் தெளிவாகப் புலனாகின்றன. அவற்றைத் 'திருக்குறளின் தனிச் சிறப்புகள் என நாம் போற்றலாம்.

வடமொழியில் தோன்றிய அறநூல்களும் நீதிநூல்களும் மிகப்பல. அவற்றுள் பர்த்ருஹரியின் 'நீதி சதகமும்' மனுவின் 'தரும சாத்திரமும்', போதாயணரின் 'தரும சாத்திரமும் சிறப்புமிக்க அறநூல்களாகும். சாணக்கியரின் அருத்த சாத்திரமும், காமாந்தகரின் பொருள் நூலும்', சுக்கிராருத்த மீன் 'சுக்கிர நீதியும் சிறப்புமிகு பொருள் நூல்களாகும். வாத்சாயனரின் 'காம சாத்திரமும் இங்கு ஒப்புநோக்கத் தக்கனவாகும். பௌத்த சமயத்தின் 'தம்மபதமும்' சமண சமயத்தினரின் ஆகமங்களும் திருக்குறளைப் போன்ற அறநூல்களாகும்.

மேலை நாடுகளினுடைய நாகரிகத்தின் அடித்தளமாக விளங்குவது கிரேக்கரின் சிந்தனையாகும். மாண்புமிகு கிரேக்கத்தின் புகழ்மிக்க மெய்யுணர்வாளர்களான பிளேட்டோவின் 'அரசியல் சிந்தனைகளும்', அரிஸ்டாட்டிலின் 'நிக்கோமகியன் அறவியலும்'. 'அரசியலும்' நம்முடைய கருத்தைக் கவருகின்றன. ஆடம்பர ஆரவாரமிக்க ரோமாபுரியின் பேரரசன் மார்க்கசு அரேலியசின் 'ஆத்ம சிந்தனையும்', 'ரோமானிய ஸ்டாய்க்குகளின் (Stoics) துன்பத்தின் சாயல் படிந்த அறவியல் நோக்கங்களும், திருக்குறளின் கொள்கைகள் பலவற்றிற்கு விளக்கவுரையாக அமைந்துள்ளன.

கிறித்துவச் சமயத்தின் திருமறையும், இசுலாமியச் சமயத்தின் திருக்குர்ரானும், இந்திய வைதிகச் சமயத்தின் புனித நூலான கீதையும், சீனாவின் அறவோரான கன்பூசியசின் 'முதுமொழியும்', 'நடுவழிக் கோட்பாடும்' நம் திருக்குறளோடு – ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கன.

ஜெர்மனியாரின் ஒப்புயர்வற்ற அறவியல் மெய்யறிவாளரான காண்ட்டின் கொள்கைகளும், கோட்பாடுகளும் வள்ளுவருடைய வாய்மொழிக்கு விளக்கம் தருகின்ற முறையில் காணப்படுகின்றன. இத்தாலிய நாட்டு மக்கவெல்லியின் 'அரசிளங் குமரன்' திருக்குறளின் போக்கிற்கு நேர்மாறானது. இத்தகைய அரிய பெரிய நூல்களின்

கருத்துகளோடு திருக்குறளின் கருத்துகளை ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, திருக்குறளிற்குரிய தனித்தன்மைகளும், சிறப்பு இயல்புகளும் ஒளிச் சுடர்களாக மிளிர்கின்றன. அவற்றை நாம் ஒன்பது வகையாகப் பாகுபடுத்தலாம்.

அறத்திற்கே முதன்மை

மனித வாழ்க்கை எவ்வாறு இருக்கவேண்டும் என்று ஆராயத் தொடங்கிக் குறிக்கோளை விளக்குவது மக்கள் வாழ்க்கை உயர்வதற்கு வழிகாட்டும் அறநூல்களின் முறையாகும். பொதுவாக அறநூல்கள் இத்தகைய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவாகும். திருக்குறளும் இவ்வகையைச் சேர்ந்த நூலேயாகும்.

'முப்பால்" எனப்படும் அறம், பொருள், இன்பமாகிய மூன்றும் மனித வாழ்க்கையின் மூவேறு நிலைகளாகும். அவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து நிற்பன. அவை தனிப்பட்ட – ஒட்டுறவு, அற்ற–பிரிவுகள் அல்ல. வாழ்க்கை நெறியின் உடலாகப் பொருளையும், உயிராக அறத்தையும் உணர்வாக இன்பத்தையும் வள்ளுவர் கொண்டுள்ளார்.

அவற்றைத் தனித்தனியே பிரித்துவிட்டால் வாழ்க்கை நெறி சிதைந்துவிடும். அவை மூன்றும் இணைந்தும் இழைந்தும் இருக்கவேண்டும். அவற்றிற்கு அறமே அடிப்படையாக அமையவேண்டும். அப்பொழுதுதான், மனித வாழ்க்கை மாண்புற முடியும் என்பதைத் திருவள்ளுவர் தம் நூலில் தெளிவுறுத்தியுள்ளார். பிறநாட்டு அறிஞர்கள் பலர் அறம், பொருள், இன்பத்தைப் பற்றித் தனித்தனியே ஆராய்ந்துள்ளனர். வடமொழியாளரான பர்த்ருஹரி ஒருவரே மூன்றையும் ஒன்றாக இணைத்துப் பார்த்துள்ளார். ஆனால் அவர்கள் எல்லாம் கொடுக்காத முதன்மையான இடத்தை வள்ளுவர் அறத்திற்குக் கொடுத்துள்ளார்.

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்துவழிப் படுஉம் தோற்றம் போல (புறநா. 31 : 1 : 2)

என்பது பண்டைத் தமிழர் கோட்பாடாகும். இதைத் திருக்குறள் எடுத்தியம்புவது அதற்குரிய தனிச் சிறப்பாகும்

காலத்தையும் இடத்தையும் கடந்த கருத்துக் கருவூலம்

திருவள்ளுவருடைய புகழும் பெருமையும், காலத்தையும் இடத்தையும் கடந்து ஒளிர்வதற்குரிய காரணம் அவருடைய கொள்கைகளும், கோட்பாடுகளுமாகும். அவை குறிப்பிட்ட ஓரிடத்தில் வாழும் மக்களுக்காகக் குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழும் மக்களுக்காக எடுத்துரைக்கப்படவில்லை, திருக்குறளில் 'தமிழ், தமிழர், தமிழ்நாடு' என்னும் சொற்களைக் காண்பதரிது. எனவே, அது உலகளாவிய விழுமிய நோக்குடையதாகும்.

திருக்குறள் எல்லாக் காலத்திற்கும், எல்லா நாட்டுக்கும் உரிய பொதுவான உண்மைகளையே பெரும்பாலும் தொகுத்துச் சொல்லுகிறது. அது தனிமனிதனுடைய வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும் கொள்ளத்தக்கன இவை, தள்ளத்தக்கன இவை என்பதை நன்கு வரையறுத்துக் கூறுகிறது. அறநூல்களின் இயல்பாக இதனைக் கூறுவர். ஆனால், ஒவ்வொரு நாட்டிலும் தோன்றிய அறநூல்கள் தாம் எழுந்த இடத்துக்கும், காலத்துக்கும் ஏற்பனவற்றை விரிவாகச் சொல்லும். நம் திருக்குறளோ அவ்வாறு செய்யாமல், மனித வாழ்வின் அடிப்படையான நன்மையைக் கருத்தில் கொண்டு, என்றும் எங்கும் நன்மை பயப்பனவற்றை எடுத்துக் காட்டி 'இவற்றைச் செய்க' என்றும், எங்கும் தீமை பயப்பனவற்றைச் சுட்டிக்காட்டி, 'இவற்றைச் செய்யற்க' என்றும் அறிவுறுத்துகிறது. இக்காரணத்தினால்தான் திருக்குறள் எக்காலத்திற்கும் பயன்படும் பொது நூலாகவும். எந்த நாட்டுக்கும் பயன்படும் பொதுமறையாகவும் திகழ்கிறது. இவ்வரிய சிறப்பினைப் பண்டைத் தமிழறிஞர்களும்,

வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவால் லாம்அளந்தார் ஓர்ந்து (திருவ.மாலை. 6)

என்றும்.

என்றும் புலராது யாணர்காள் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்

(திருவ. மாலை.3)

என்றும் பாராட்டியுள்ளனர்.

திருக்குறளின் கருத்திலும் உரையிலும் காணப்படும் கால தேசச் சுவடுகள் மிகமிகக் குறைவாகும். பிற அறநூல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது, அவை மிகக் குறைவானவையாகவும், புறக்கணிக்கத் தக்கனவாகவும் உள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

சமய நடுநிலைப் பண்பு

"எல்லாச் சமயத்தவரும் 'இது எம் நூல்.இது எம் நூல் என்று கூறுகிற, கூற விரும்புகிற நூல் உலகில் வேறு இல்லை, திருக்குறள் ஒன்றே.அதுமட்டுமன்று.'கடவுள் உண்டு' என்பவர் மட்டுமன்றி, 'கடவுள் இல்லை' என்பவர்கூட உவந்து ஏற்கும் அருளமைதி சான்ற பெருந்திருநூலாக இது அமைகின்றது."

இதனை
சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருள்இது என்ற
வள்ளுவன் (கல்லாடம் : 14)

என்று கல்லாடனாரும்,

"அவர் இனம், சாதி, சமயம், வகுப்பு எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர்; அவர் அறிவுறுத்துவன மனித இனத்திற்குப் பொதுவான ஒழுக்கமும் அறிவுமாகும்" என்று பேராசிரியர் எம். விண்ட்டர்நீட்சும் பாராட்டியுள்ளமை இங்குக் கருதத் தக்கனவாகும்.

எல்லாவற்றிலும் தூய்மை

மனிதன் வாழ்க்கையில் அடையவேண்டிய குறிக்கோள் தான் பெரிது. ஆனால், அதை அடைவதற்குரிய வழியைப் பற்றிக் கவலை இல்லை" என்பதே பொருளியல் நூலார் பலருடைய கொள்கையாகும். இதற்குச் சான்றாகச் சாணக்கியரின் அர்த்த சாத்திரத்திலிருந்தும், மனுவின் தருமசாத்திரத்திலிருந்தும், மக்கவெல்லியின் 'அரசிளங்குமரன்' எனும் நூலிலிருந்தும், அரிஸ்டாட்டில் நூல்களிலிருந்தும் எடுத்துக் காட்டுகள் பலவற்றை நாம் காட்டலாம்.

திருக்குறள், மனிதன் ஒவ்வொருவனும் அடைய வேண்டிய குறிக்கோள் மட்டும் நன்மை பயப்பதாக இருந்தால் போதாது; அதை அடைவதற்கு அவன் மேற்கொள்ளும் செயல்முறைகளும் தூய்மையானவையாகவும் சிறந்தனவாகவும் இருத்தல் வேண்டும் என்பதை வற்புறுத்தும் ஒப்புயர்வற்ற நூலாகும். முடிவினைப் போல வழியும் அப்பழுக்கு அற்றதாய் இருக்கவேண்டும் என்பது வள்ளுவரின் மிகச் சிறந்த கொள்கையாகும். திருவள்ளுவர் 'ஒருவன் செய்யும் செயல்கள் தூய்மையாக இருக்கவேண்டும்; அப்பொழுதுதான் அவன் அச் செயலால் அடையும் பயன் புகழ் பயப்பதாக அமையும்' என்னும் கருத்தினை, 'வினைத்தூய்மை' எனும் அதிகாரத்தில் வலியுறுத்துகிறார். அவ்வதிகாரத்தில் கூறப்படும் கருத்துகளுள்,

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை (குறள் 656)

என்னும் குறட்பா அவருடைய இலட்சிய நோக்கினை நன்கு தெரிவிக்கிறது.

முடிவினைப்போல வழியும் தூய்மையுடையதாக இருக்க வேண்டும் என்ற கருத்தை, வள்ளுவர் தம் நூலில் ஒல்லும் வகையெல்லாம் ஓயாது எடுத்துரைக்கின்றார். 'பசுவிற்கு நீர் வேண்டும் என்று அறத்தைக் கருதி இரந்து கேட்டாலும் அந்த

இரத்தலைவிட நாவிற்கு இழிவானது மற்றொன்று மில்லை' என்கிறார் மற்றோரிடத்தில்.

ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல் (குறள் 1066)

மனித வாழ்க்கை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை ஆராயத் தொடங்கி, மனிதனுடைய வாழ்வின் குறிக்கோள் எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட முயலுகிறது திருக்குறள். "அறத்திற் சிறந்தது எது? சமுதாய அமைப்பிற் சிறந்தது எது? இன்பத்தித் சிறந்தது எது. என்பதை ஆராய்ந்தறிய இந்நூல் மனிதனைத் தூண்டுகிறது. அவற்றை– ஆராய்ந்தறிவதன் மூலம், மனிதன் மேற்கொள்ளும் செயல்கள் அவன் அடைய விரும்பும் பயனைப்போல மாசு மறுவற்றதாக இருக்கவேண்டும் என்னும் உணர்வினைப் பெற வேண்டும் என்பதே வள்ளுவரின் உள்ளக் கிடக்கையாகும். இத்தகைய ஒப்பற்ற ஓர் அறத்தினை உலகில் வேறு எந்த நாட்டு அறவியல் அறிஞர்களோ,பொருள்நூல்புலவர்களோ எடுத்தியம்பவில்லை. அண்ணல் காந்தி அடிகள் ஒருவரே தமது தனிவாழ்விலும், பொதுவாழ்விலும் இவ்வறத்தைப் பொன்னேபோல் போற்றிக் கடைப்பிடித்த சான்றோராவர்.

அரசன் தெய்விகப் பிறப்புரிமை அற்றவன்

பண்டைக்காலத்தில் 'அரசியல்' பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் அனைவரும் அரசனைத் 'தெய்விகப் பிறப்புரிமை' (Divine Right) உடையவனாகவே கருதிப் போற்றியுள்ளனர். எவ்வகையிலாகிலும் அரசன் தெய்விகப் பிறப்புரிமை உடையவன் என்பதற்குரிய குறிப்போ, தெய்விக ஆற்றல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றான் என்பதற்குரிய சான்றுகளோ திருக்குறளில் காணப்படவில்லை என்பது இங்குக் கருதத்தக்கது. ஓர் எளிய குடிமகனைப் போன்று. அரசனும் அறநெறிக் கொள்கைகளுக்கு இணங்க

ஆட்சிபுரிய வேண்டும். அறநெறியிலிருந்து சிறிதளவு பிறழ்ந்தாலும், மன்னவன் தாழ்ந்த நிலையினை அடைந்து (பகைவரில்லாமலும்) தானே கெடுவான்.

எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும் (குறள் 548)

என்று குறள் குறிப்பிடுகிறது.

ஒரேயொரு குறளில் மட்டும் அரசன் 'இறை' எனும் சொல்லால் குறிக்கப்படுகிறான். நீதிமுறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், மக்களுக்கு இறை என்று தனியே கருதி மதிக்கப்படுவான் என்னும் பொருள்பட.

முறைசெய்து காபபாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (குறள் 388)

என்று கூறப்பட்டுள்ளது.

'இறை' என்னும் சொல்லிற்குப் பரிமேலழகர் 'பிறப்பால் மகனே ஆயினும், செயலால் மக்கட்குக் கடவுள் என்று வேறு வைக்கப்படும்' எனக் குறிப்பிடுகிறார். மணக்குடவர் 'இறை' என்னும் சொல்லிற்கு, 'மனிதர்க்கு நாயகன்' (தலைவன்) என்றே பொருள் கொள்ளுகிறார்.

பரிமேலழகர் உரையில்கூட, அரசன் பிறப்பால் – அரச குடியில் பிறந்தவன் என்ற ஒரே காரணத்தால்– தெய்விகத் தன்மை உடையவன் என்று கூறப்படவில்லை. அவர் 'பிறப்பான் மகனே ஆயினும்' என்ற அடை கொடுத்திருப்பதிலிருந்தே, இவ்வுண்மையை நாம் நன்குணரலாம். எனவே அறநெறி பிறழாது செங்கோலோச்சும் மன்னவன், தன்னுடைய சீரிய பண்புகளாலேயே இறைவன் என்று கருதப்படுவானேயொழிய, 'அவன் வகிக்கின்ற பதவியினால் அன்று' என்பதே இக்குறளின் உட்கிடையாகும். இவ்வகையில் திருக்குறள், தான் தோன்றிய காலத்தில் சிறப்புற்று விளங்கிய உலகப் பேரறிஞர்களின் கருத்துகளிலிருந்து வேறுபட்ட முற்போக்குக் கொள்கையுடையதாக விளங்குகிறது.

ஒழுக்கமே உயிரினும் சிறந்தது

மனிதன் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய சீரிய பண்பு ஒழுக்கம் என்பதனை,

ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்
என்றும், (குறள் 131)

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் (குறள் 138)[1]

என்றும் திருக்குறள் ஒழுக்கத்தின் சிறப்பையும், பயனையும் எடுத்துரைக்கின்றது.

ஒழுக்கமே மனிதனுடைய உயர்ந்த இலட்சியமாக இருக்கவேண்டும் என்பதை மிகுந்த துணிச்சலோடு வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒவ்வொருவனும் தனக்குத்தானே செய்ய வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை என்ன? என்பனவற்றைப் பற்றியெல்லாம் சிறந்த பண்பாட்டோடும் மதிநுட்பத்தோடும் வள்ளுவர் பேசுகிறார். 'உலக இலக்கியத்தில் இத்தகைய மாண்புமிக்க மெய்யறிவு வேறு எந்நூலிலும் இவ்வாறு ஒளிரவில்லை எனச் சொல்லலாம்' என்னும் ஆல்பர்ட் சுவைட்சரின் துணிவுரை இக் கருத்தினை அரண் செய்கிறது.

மறக்கும் நெறி

ஒருவன் தனக்கு ஒரு துன்பம் செய்தால், உடனே அவனைப் பழிக்குப்பழி வாங்க முயலுவது மனித இயற்கை 'அடிக்கு அடி', 'கொலைக்குக் கொலை', 'கண்ணுக்குக் கண் என்பன ஒறுக்கும் (பழிக்குப் பழிவாங்கும்) நெறியில் கோட்பாடுகளாகும். இத்தகைய அறத்தினை அறிவுறுத்தும் அறநூல்களும் உலகில் பல தோன்றியுள்ளன.

---

1 Albert Schweitzer: Indian Thought and its Development, P. 199.

பிறர் தனக்குச் செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுவதே. பண்பாடுடைய மனிதனின் கடமையாகும் என்ற கருத்தினை அறவோர்கள் சிலர் எடுத்துரைத்துள்ளனர்.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ் (குறள் 156)

சிறப்பாக இயேசுபெருமான் "வலக்கன்னத்தில் ஒருவள் உன்னை அறைந்தால் மறுகன்னத்தையும் அவனுக்குக் காட்டு பழிவாங்க நினைக்காதே" என்று அருளிய அறவுரையை இதற்குச் சான்றாக அறிஞர்கள் குறிப்பிடுவர். இதனைப் பொறுக்கும் நெறி என நாம் சுட்டலாம்.

ஒருவன் தனக்குச் செய்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுவதே கடினம், ஒருவாறு பொறுத்துக்கொண்டாலும், அத்துன்பம் இழைத்தவனைப் பற்றி தம் உள்ளத்தில் ஆழப்படுத்துவிட்ட எண்ணம், அவனைக் காணும்பொழுது தம்முடைய உள்ளத்தில் வெறுப்புணர்ச்சியைக் கிளர்ந்து எழச் செய்யும்; வாய்ப்புக் கிடைக்கின்றபொழுதுஅவனுக்குத் தீமை செய்யுமாறு நம்மை அவ்வெண்ணம் உத்திச் செயற்படுத்தும். இதனால் பொறுக்கும் நெறி' பயனற்றுப் போய் விடுகிறது.

மனித இயற்கையை நன்குணர்ந்த வள்ளுவர் ஒரு படி மேலே சென்று, ஒருவன் செய்த தீமையை மறந்து அவனே தான் செய்த தவற்றிற்கு நாணுமாறு அவனுக்கு நன்மை செய்வதே சாலச் சிறந்தது என்று குறிப்பிடுகிறர். அப்பொழுது, உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சிக்கே இடம் இல்லாமல் போய்விடும் என்று புதியதொரு வழியினை அவர் காட்டுகிறர். இதனை மறக்கும் நெறி' எனலாம்.

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. (குறள். 152)

இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர்காண
நன்னயம் செய்து விடல் (குறள். 314)

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. (குறள் 987)

இவ்வாறு மனிதனுடைய மனவியல்பினை அறிந்து. மறக்கும் நெறியை"ப் போதிக்கும் அறநூல் உலகில் வேறொன்றும் இல்லை என்பது பல்கலைச்செல்வர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களுடைய துணிபாகும்.

ஒருவனுக்கு ஒருத்தி

உலகில் பல்வேறு காலங்களில் தோன்றியுள்ள அற நூல்கள் எல்லாம் பெண்ணுக்குத்தான் 'கற்பொழுக்கத்தை" கற்பித்துள்ளன. ஆண்மகன் எத்துணைச் சிறந்தவனாயினும் 'ஒருத்தியோடுதான் வாழவேண்டும்' என்னும் நியதி வரையறுக்கப்படவில்லை. 'இந்த 'இப்பிறவிக்கு' இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்? என்ற உயர்ந்த குறிக்கோளோடு யாரோ சிலர் வாழ்ந்ததாகத்தான் நாம் கேள்விப்படுகிறோம்.

ஆனால், திருக்குறளே 'ஒருவனுக்கு ஒருத்தி"என்னும் உயர்ந்த கொள்கையை உடன்பாட்டு முகத்தான் அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கிறது. 'பிறனில் விழையாமை' என்னும் அதிகாரத்தை அறத்துப்பாலிலும், 'வரைவின் மகளிர்' என்னும் அதிகாரத்தைப் பொருட்பாலிலும் அமைத்ததன் மூலம், திருவள்ளுவர் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் உயர்ந்த கோட்பாட்டினை உலகிற்கு அறிவுறுத்தியுள்ளார்.

"பொருள் காரணமாக மகளிர் சிலர் ஒழுக்கத்தை விற்பது கூடாது. ஒழுக்கமற்ற அந்தப் பொருட்பெண்டிரை ஆடவர் நாடுவதும் கூடாது" என்று பொருட்பாலில் வன்மையாகக் கடிந்துள்ளார் திருவள்ளுவர். 'வரைவின் மகளிர்' என்னும் அதிகாரம் திருவள்ளுவரின் முற்போக்குக் கருத்தை வெளிப்படுத்துகிறது. "சங்கக்காலத்துப் பாட்டுகளில்

இடம்பெற்று வந்த பரத்தையர்க்குத், திருக்குறளில் நல்ல இடம் இல்லை; வேண்டா என்று கடிந்து கூறப்படும் இடமே வாய்த்தது..... திருக்குறளின் காமத்துப்பாலில் பெண்ணைப் போலவே ஆணும் நெறிதிறம்பாத நல்லோனாகக் காட்சி அளிக்கின்றான்; இவ்வாறு காதல் நெறியைத் தூய்மைப்படுத்திக் கற்பை ஆண் – பெண் இருபாலார்க்கும் உரிமையாக்கிய தனிச்சிறப்பு உடையது திருவள்ளுவரின் காமத்துப்பால்"[2] என்னும் டாக்டர் மு.வ. அவர்களின் கருத்து இங்கு நினைவுகூர்தற்குரியதாகும்.

இவ்வாறு 'ஒருவனுக்கு ஒருத்தி' எனும் உயர்ந்த இலட்சியத்தை உலகிற்கு உணர்த்தும் திருக்குறள் தன்னிகரற்ற அற நூலாக விளங்குகிறது.

திருக்குறள் காட்டும் இலட்சியக் குடிமகன்

ஒவ்வொரு நாட்டிலும் அறவோர்கள் தோன்றியுள்ளனர். தங்கள் நாட்டிற்கும் தாங்கள் வாழும் காலத்திற்கும் உகந்த நிலையில் 'இலட்சியக் குடிமகன்' எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைக் கற்பனை செய்து அவர்கள் பார்த்துள்ளனர். அவர்கள் அனைவரும் அச் 'சிறந்த மனிதன்' எத்தகைய பண்புகளை உடையவனாக இருக்கவேண்டும் என்பதைப்பற்றி விரிவாக விளக்கியும் உள்ளனர்.

கிரேக்கநாட்டைச்சேர்ந்தபிளேட்டோ,தாம்நிறுவவிரும்பிய 'குடியாட்சியில்' வாழக்கூடிய இலட்சியக் குடிமகன் 'சிறந்த சிந்தனையாளனாக' (Contemplative Man) இருக்க வேண்டும் என்று கருதினார். அரிஸ்டாட்டில் காணவிரும்பிய இலட்சியக் குடிமகன் 'பெருந்தகையாளன்' (Magnanimous man) என்று போற்றப்பட்டான். சீனாவின் சிறப்புமிக்க மெய்யறிவாளன் கன்பூசியஸ் காணவிரும்பிய இலட்சியக் குடிமகன்

---

2 மு.வரதராசனார் : திருக்குறளில் காதல். திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு –பக், 193 – 197

'அறநெறியாளனாகிய சுங் சூ" (Chun – Tsu) என்பவனாவான். நீட்சே என்ற ஜெருமானியர் காணவிரும்பிய 'இலட்சியக் குடிமகன்' பேராற்றலும் பெருந்திறனும் வாய்ந்த 'பெருமகன்' (Superman) என்று பாராட்டப் பெற்றான். வள்ளுவர் கண்ட இலட்சியக் குடிமகன் 'சான்றோனாக க் காட்சியளிக்கின்றான்.

பிளேட்டோவின் இலட்சியக் குடிமகன் இவ்வுலகை மறந்து கற்பனை உலகில் உழன்று கொண்டிருப்பவன் என்றும், அரிஸ்டாட்டிலின் இலட்சிய மனிதன் அன்பு, இரக்கம், கனிவு ஆகிய பண்புகளற்ற கல்நெஞ்சன் என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறைகூறுவர். கன்பூசியசின் இலட்சியக் குடிமகன் சிந்திக்கும் திறனற்று, வழக்காற்று அறநெறியைக் (Customary Morality)கண்மூடிப் பின்பற்றும் குறைபாடுடையவன் என்று சித்திரிக்கப்படுகிறான்.

நீட்சேவின் 'பெருமகன்', 'இரக்கம் எனும் ஒரு பொருளிலா அரக்கன்' என்று கூறுவர். அத்தகைய இலட்சியக் குடிமகனாகத்தான் விளங்கவேண்டும் என்று ஹிட்லர் இளமையில் விரும்பிய விருப்பமே, பிற்காலத்தில் அவனைக் கொடுங்கோலனாக– அரக்கனாக மாற்றியது என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

இந்திலையில், திருக்குறள் காட்டும் இலட்சியக் குடிமகனாகிய 'சான்றோன்' வள்ளுவரின் கற்பனையில் தோன்றியவன் அன்று. அறநெறியில் நின்றொழுகிப் பண்பாட்டின் முழுநிறைவாக விளங்கும் மனிதனே சான்றோன். அத்தகைய சான்றோர்கள் பலர் திருக்குறள் தோன்றிய காலத்திய தமிழகத்தில் வாழ்ந்தனர். இதற்கு,

> ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
> சான்றோர் பலர்யான் வாழும் ஊரே (புறம். 191)

என்று சங்கக்காலச் சான்றோர் ஒருவர் சான்று பகருகின்றார்.

சான்றோன் 'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை' எனப்படும் பண்புகளின் நிலைக்களனாவான். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் இனிய பண்பாளன் அவன்; மனச்சான்றினை மதித்துப் போற்றும் மண்ணுலக மனிதன்; அவனுடைய கால்கள் இம்மண்ணுலகிலேயே ஆழப்பதிந்துள்ளன. அவன் மன்னுயிர் ஓம்பி அருளாள்பவன்; 'எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருளின் மெய்ப் பொருள் காணும்' மெய்யுணர்வாளன். அவன் வாழ்வின் இரண்டு எல்லைகளுக்கும் போகாமல், அறநெறியில் நின்றொழுகும் அன்பின் திருவுருவம் என்பதை நாம் மறத்தலாகாது.

திருக்குறளின் தனிச்சிறப்புகளாக நாம் கண்ட அனைத்தும் திருவள்ளுவரின் தனிப்பண்பின் முத்திரை இடப்பெற்றன வாகும். திருக்குறளின் பெருமை பேரளவில் திருவள்ளுவரின் ஆளுமையின் ஆற்றலாலும் சிந்தனையின் சீர்த்தியாலும் அமைந்ததாகும்.

2. திருக்குறளும் சங்க இலக்கியமும்

தமிழ் மொழியில் இன்று கிடைக்கும் இலக்கியங்களில் தொன்மைச் சிறப்பு வாய்த்தவை சங்க இலக்கியங்களாகும். தொல்காப்பியம், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பனவாகும். அவை காலத்தால் முற்பட்டவை மட்டுமன்று; உணர்த்துகின்ற கருத்துகளாலும், அக்கருத்துகளை எடுத்தியம்பும் முறைகளாலும், மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வகையாலும், கவர்ச்சிமிகு கலையழகால் சுற்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவதாலும் அவை சிறப்புமிக்க செந்தமிழ் இலக்கியங்களாகும்.

அவற்றுள், தன்னிகரற்ற தனிப்பெருஞ் சிறப்புவாய்த்த இலக்கியமாய்த் திருக்குறள் விளங்குகிறது. மனித இனம் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் வான்பொருளாய் வாழ்வியல் இலக்கியமாய்த் திருக்குறள் திகழுகின்றது.

அவ்விழுமிய நூலின் கருத்துகளும் தொடர்களும் எடுத்தாளப் பெறாத இலக்கியங்களே நம்மொழியில் இல்லை எனலாம். இதனைப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர் வெ . சுப்பிரமணிய ஆச்சாரியார்,

> "உலகத்தே எறும்பு முதல் யானையீறாக உள்ள எல்லா உடலிலும் உயிர் நுழைந்திருத்தல் போலத் திருக்குறள் எல்லா நூல்களிலும் நுழைந்துள்ளது. அகரம் மற்றைய எழுத்துகளை இயக்குவது போன்று

திருக்குறள் மற்றைய நூல்களை இயக்குகின்றது. அகர ஒலி இல்லாத எழுத்துகளில்லை. குறட் கருத்திலாத நூல்களில்லை. அகரம் தூய்மையான ஒலியை உடையது: குறளும் தூய்மையான கருத்துகளையுடையது; அகரம் எழுத்துகளுள் முதன்மையானது; குறள் நூல்களுள் முதன்மையானது. குறிலினது விகாரமே தெடிலாதல் போலக் குறளினது விகாரமே பிரிந்துகிடக்கும் நூற்களாயின. இவற்றை நோக்கியே அகரத்தை முதலாக உடைய செய்யுள் குறளுக்கு முதற் குறளாக அமைந்துள்ளது. குறளாசிரியர் எவரையும் போற்றிப் புகழவில்லை. ஆனால், குறளைப் போற்றிப் புகழாத நூல்களில்லை."

என்று நவின்றுள்ளமையால் நாம் நன்குணரலாம்.

தமிழ்க்குழவி வள்ளுவர் தந்த முப்பாலை உண்டு மழலை மாறாத இளங்குழந்தையாய் – கன்னித் தமிழாய்– முழு வளர்ச்சியைப் பெற்றுத் தமிழ்கூறும் நல்லுலகத்தில் தனியரசு நடத்துவதை,

.....முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய் (த.தூ.25)

என்று தமிழ்விடு தூது ஆசிரியர் அறிவித்துள்ளார். திருக்குறள் தமிழ் இலக்கியங்களுக்கு ஊட்டச்சத்தை அளிக்கும் வற்றாத அறிவு ஊற்றாய் விளங்குவதையே தமிழ் விடு தூதின் ஆசிரியர் இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்.

குறள் மணம்

தமிழ் இலக்கியப் பூங்காவில், காலந்தொறும் பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களாகிய இலக்கியங்களில் குறள் மணம் வீசாத நறுமலர்களே இல்லை என நாம் உறுதியாகக் கூறலாம். திருக்குறள் தனிச்சிறப்பு வாய்ந்ததொரு நீதி இலக்கியம். அந்நூல் அனைவரும் கற்று, மனத்தே நிலையாக

வைப்பதற்கு ஏற்றவகையில் இழுமென் மொழியால் விழுமிய பயப்பதாகவும் சுருங்கச் சொல்லி விளங்க' வைப்பதாகவும் இயற்றப் பெற்றுள்ளமை அதற்குரிய தனிச்சிறப்பாகும். அதனால்தான் 'முன்னோர் மொழிபொருளை பொன்னேபோல் போற்றும்' பைந்தமிழ்ப் பாவலர்கள் தங்கள் இலக்கியப் படைப்புகளில் இயன்ற இடங்களில் எல்லாம் திருக்குறளின் சொற்களையும், தொடர்களையும், கருத்துகளையும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் அமைத்து அழகு செய்துள்ளனர்.

இம்முறையைச் சங்கக் காலப் புலவர்களே கடைப்பிடித்துள்ளனர். அறம், பொருள். இன்பம் என்ற மூவகைப் பேறுகளை 'முப்பாலாக'த் திருக்குறள் மொழிந்தபோதிலும், அதனைச் சங்கக் காலச் சான்றோர்கள் 'அறம்' என்ற பெயரால் சுட்டியமை இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். ஆலத்தூர் கிழார் என்ற புலவர்.

நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி யில்லென
அறம் பாடிற்றே (புறம். 34)

என்று அறிவித்துள்ளமையால் இதனை நாம் அறிகிறோம். இவ் வாறு சிறப்பாகப் போற்றப்படும் திருக்குறளின் கருத்துகள் சங்க இலக்கியங்களில் இலைமறை காய்போல் இங்குமங்கும் இடம் பெற்றிருப்பதில் வியப்பில்லை. அவை அனைத்தையும் இக்கட்டுரையில் காட்ட இயலாமையால், அவற்றுள் மிகச் சிறந்தவற்றை மட்டும் இங்குச் சுட்டிக் காட்ட முயலுகிறேன்.

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் பொருளை அடிப்படையாகக் கொண்டு அகப்பொருள் இலக்கியம், புறப்பொருள் இலக்கியம் என்று அவற்றைப் பாகுபடுத்திக்

கூறுவது மரபாகும். அம்மரபிற்கு இணங்க, நாம் அகப்பொருள் இலக்கியங்களுள் திருக்குறள் பெற்றுள்ள சீரையும் சிறப்பையும் முதலில் காண்போம்.

அகப்பொருள் இலக்கியங்களில் குறள் மணம்

சங்க இலக்கியங்களுள் ஐங்குறுநூறு, குறுந்தொகை நற்றிணை, அகநானூறு, கலித்தொகை என்னும் ஐந்தும் காதலர் வாழ்க்கையைச் சொல்லோவியமாகத் தீட்டிக்காட்டும் அகப்பொருள் இலக்கியங்களாகும். அவை இன்ப வாழ்க்கையின் எழிலோவியங்களாக விளங்குகின்றன. எனினும், அறத்தைப் பற்றிய அறிவுரைகளும், பொருளைப் பற்றிய பொன்மொழிகளும் சிறப்புமிக்க முறையில் உவமைகளாகவும், அறிவுரைகளாகவும், நயமிகு மூதுரைகளாகவும் அவற்றுள் அழகுற அமைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு அகப்பொருள் இலக்கியங்கட்குப் பொலிவூட்டும் கருத்துகளுள் பல திருக்குறளின் கருத்துகளாகவும், செஞ்சொல் கவியின்பம் பயக்கும் தமிழ்மறையின் சொற்களாகவும், தொடர்மொழிகளாகவும் ஒளிர்கின்றன. சங்கக்காலச் சான்றோர்கள், தங்கள் பாடல்களின் மூலம் உலகிற்கு உணர்த்த விரும்பிய உண்மைகளைக் கருத்துக் களஞ்சியமாகிய திருக்குறளில் இருந்து எடுத்தாண்டுள்ளனர். குறட்பாக்களை, அப்படியே, தம் பாடல்களில் சிலர் பயன்படுத்தியுள்ளனர். மற்றும் சிலர், குறட்பாக்களைச் சிறிது மாற்றியும் திரித்தும் புதுமெருகு கொடுத்துக் கையாண்டுள்ளனர். வேறு சிவர் திருக்குறளின் விழுமிய கருந்துகளைத் தம்முடைய அறிவாற்றலுக்கேற்ற வகையில் எளிமைப்படுத்திப் புதிய வடிவில் உவமைகளாகவும், மூதுரைகளாகவும் வழங்கியுள்ளனர்.

ஐங்குறு நூறு

சங்க இலக்கியங்களுள் வடிவால் மிகவும் சிறிய பாக்களை உடையது ஐங்குறு நூறு. மருதம், நெய்தல். குறிஞ்சி, பாலை,

முல்லை என்னும் ஐந்திணைகளுள் ஒவ்வொன்றுக்கும் நூறு நூறு பாக்களை இந்நூல் கொண்டிருக்கிறது. இதில் உள்ள பாக்கள். மூன்று அடிச்சிறுமையும் ஐந்துஅடிப்பெருமையும் உடைய குறுகிய வடிவுடையனவாகும். இந்நூவின் ஐந்து பகுதிகளை ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர்.

முதல்பகுதிமருதத்திணைப்பற்றியது.அதைஓரம்போகியார் என்னும் புலவர் பாடியுள்ளார். அவருடைய பாக்களில் குறளின் கருந்துகள் பல இடம் பெற்றுள்ளன. முதல் பத்துப் பாடல்களே 'வேட்கைப் பத்து' என்பர். அதில் தோழி வாயிலாகச் சேரவரசன் ஆதனுடைய நாடு நலம்பல பெற்றுச் சிறக்க வேண்டும் என்ற தம் விழையினை அவர் எடுத்துரைக்கின்றார். அவற்றுள் காணப்பெறும் பல கருத்துகள், திருக்குறளின் எழுபத்து நான்காவது அதிகாரமாகிய 'நாடு' என்பதனுள் திருவள்ளுவர் தெரிவித்துள்ள கருத்துகளாக உள்ளன.

பசி இல்லாகுக பிணிசேண் நீங்குக! (ஐங்குறு.5)
வேந்து பகை தணிக (ஐங்குறு.6)

என்னும் கருத்துகளை,

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு (குறள் 734)

என்னும் குறட்பாவில் நாம் ஒருங்கே காணலாம்.

நெல் பல பொலிக! பொன் பெரிது சிறக்க (ஐங்குறு. 1)
விளைக வயலே ! வருக இரவலர்! (" 2)
பால் பல ஊறுக! பகடு பல சிறக்க (" 3)
பகைவர் புல் ஆர்க ' பார்ப்பார் ஓதுக (" 4)
அறம் நனி சிறக்க! அல்லது கெடுக! (" 7)

என்பன போன்ற கருத்துகள்,

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு (குறள் 731)

என்னும் குறட்பாவிற்குத் தரப்படும் விளக்கவுரையாக அமைத்துள்ளன.

இதைப் போன்றே, காமத்துப்பாலில் காணப்பெறும் கருத்துகள் சில, ஐங்குறுநூற்றில் இடம் பெற்றுள்ளன. தலைனுடைய அழகிய மார்பினைக் காணுகின்ற மகளிர். அதனுடைய அழகில் ஈடுபட்டுத் தலைவனத் தழுவி இன்புற விரும்புகின்றனர். இவ்வாறு மகளிர் பலர் கண்டு மகிழும் தலைவனுடைய மார்பைத் தழுவமாட்டேன்' என்று தலைவி கூறுகிறாள். இக்கருத்தினை,

பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு (குறள் 1311)

என்று வன்ளுவர் இயம்புகிறார். பரத்தையரிடத்துச் செல்லு தலைக் கண்டிக்கும் வள்ளுவர், தாம் படைத்த தலைவனை மகளிர் பலர் விரும்புவதாகச் சித்திரிப்பதன் மூலம், அவனுடைய ஒழுகலாற்றின் தூய்மையைப் புலப்படுத்துகிறார்.

ஐங்குறு நூற்றுப் பாடல் ஒன்றில் தலைவன் பரத்தை யரிடத்துச் சென்று வந்ததனால், அவனைத் தழுவமாட்டேன் என்று தலைவி அறிவிக்கிறாள்,

எந்நலந் தொலைவ தாயினும்
துன்னலம் பெரும்பிறர்த் தோய்ந்த மார்பே (ஐங்குறு. 63)

வள்ளுவர் இலட்சிய நோக்கில் நயமுறக் காட்டிய கருத்தை. ஓரம்போகியார் உலகியலில், நிகழ்வியல் பாங்கிற் கேற்ற வகையில் இங்கு எடுத்துரைத்துள்ளார்.

குறுந்தொகை

இது நானூறு பாடல்களைக் கொண்ட அகப்பொருள் நூல். பாடல்கள் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் உடையவை. இந்நூல். "நல்ல குறுந்தொகை" என்று பெரியோர்களால் பாராட்டப்பெறும் சிறப்புடையது.

'மலர் மென்மையானது; அழகுடையது; நறுமணம் மிக்கது. அம்மலரினும் காமம் மென்மைத் தன்மையுடையது' என்பது வள்ளுவர் கருத்து,

மலரினும் மெல்லிது காமம் (குறள் 1289)

இக் கருத்து,

ஐதே காமம் (குறுந்.217)

என்று குறுந்தொகைப் பாடலில் குறிப்பிடப்படுகிறது.'ஐதே' என்பதற்கு நுண்மையானது. மென்மையானது என்ப பொருள்களாகும்.

வள்ளுவர் 'பழைமை' என்னும் அதிகாரத்தில், நண்பன் ஒருவன் துன்பம் தரக்கூடிய செயலைச் செய்துவிடுவானானால், அறியாமையால் மட்டும் செய்துவிட்டான் என்று நினைக்கக் கூடாது; நட்பின் உரிமை பாராட்டிச் செய்ததாகவும் உணர வேண்டும் என்ற கருத்தமைய,

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின் (குறள் 805)

எனக் குறிப்பிடுகிறார்.

இதை, அறிவுடை நம்பி என்னும் அரசப்புலவர், 'தலைவனுக்கு, அறியாது தீங்கு செய்து விட்டோமோ' என்று தலைவி ஒருத்தி எண்ணி ஏங்கும் பொழுது.

பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன்
கொல்லோ (குறுந். 230)

என்று ஐயுறுவதாகப் பாடியுள்ளார்.

மற்றும்,

கேடில் விழுச் செல்வம் (குறள் 400)

என்னும் திருக்குறளின் தொடர், 'கேடில் விழுப் பொருள்* என்று குறுந்தொகை (216) யிலும் கையாளப்பட்டுள்ளதை நாம் காணுகின்றோம்.

மேலும்,

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர் (குறள். 1121)

என்ற குறளை அடியொற்றி,

வாலெயி லூறிய வசைஇல் தீநீர் (குறுந்.267)

என்று குறுந்தொகைப் பாடலின் அடியொன்று அமைந்து இருப்பதையும் இங்கு நாம் குறிப்பிடலாம்.

நிலத்தொடு நீரியைந் தன்னாரகத்து (குறள் 1323) எனும் குறட்பா, காதலரின் உள்ளங்கள் அன்பினால் ஒன்றாகக் கலந்து விட்ட நிலையைச் சுட்டுகிறது. மழை பெய்வதற்குமுன், நீர் ஓரிடத்திலும், நிலம் வேறோரிடத்திலும் இருந்தன. சூரிய வெப்பத்தால் நீர் ஆவியாகி மேலே சென்று, ஈரக் காற்றால் குளிர்ந்து மேகமாகி, மழையாகப் பெய்கிறது. அம்மழை நீர் முன்பின் தனக்குத் தெரியாத புதிய இடமாகிய நிலத்தில் விழுகிறது. நிலத்தில் விழுந்ததும், அந்நீர், நிலத்தின் வண்ணத்தையும் மணத்தையும் பெறும் வகையில் அதனோடு கலந்து விடுகிறது. பிறகு நீரையும், நிலத்தின் – மண்ணின் – மணத்தையும் வண்ணத்தையும் எளிதில் பிரிக்க இயலாது. இதைப் போன்றதே காதலர் உள்ளம். இக்குறள் கருத்தைச் செம்மண் நிலத்தில் பெய்த மழை நீரைப் போல, காதலர் உள்ளம் கலந்தது எனக் குறுத்தொகை கூறுகிறது.

செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே (குறுந்.. 40)

நற்றிணை

இந்நூல் அன்பின் ஐந்திணையினுடைய சீரையும் சிறப்பையும், செந்தமிழின் இனிய நலத்தோடு குழைத்துத் தரும் நயமிகு பாடல்கள் நானூற்றைக் கொண்டதாகும். பாண்டியன் மாறன் வழுதி இந்நூலைத் தொகுப்பித்தவனாவான். இதில் ஒன்பதடி முதல் பன்னிரண்டு அடிகள் வரையிலுள்ள பாடல்கள் உள்ளன.

இந்நூலில் திருக்குறளின் கருத்துகள் பல அப்படியே சொல் பிறழாமல் எடுத்தாளப் பெற்றுள்ளன.

நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு (குறள் 20)

என்பது குறட்பா. 'உலகமும் உயிர்களும் நிலைத்து நிற்பதற்கு நீர் இன்றியமையாது வேண்டப்படுவது' என்னும் கருத்தமைந்த 'நீரின்று அமையாது உலகு' என்னும் தொடரைத் தலைவிக்குத் தலைவன் மிகவும் இன்றியமையாதவன் என்பதை விளக்குவதற்கு உவமையாக,

நீரின்று அமையா உலகம் போலத்
தம்மின்று அமையா நந்நயந் தருளி (நற்றிணை 1)

எனப் புலவரொருவர் குறிப்பிடுகின்றார்.

'நட்பு ஆராய்தல்' என்னும் அதிகாரத்தில், அரசர் முதலியோர் எவ்வாறு ஒருவரை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும் என்பதைச் சொல்லுமிடத்து.

நாடாது நட்டலின் கேடில்லை; நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு (குறள் 791)

என வள்ளுவர் அறிவிக்கிறார். இதற்குக் கபிலர்,

.....பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே (நற்றிணை 32)

என்று சிறியதொரு விளக்கம் தந்துள்ளார்.

பழகினவரிடத்தில் கண்ணின் வழியாக அன்பைச் செலுத்துதலாகிய 'கண்ணோட்டம்' பற்றிப் பேசுகின்றபொழுது, வள்ளுவர், 'எல்லோரும் விரும்பும் முறையில் நாகரிக வாழ்வு வாழவேண்டும் என்று நினைப்பவர், தம்மால் பிறருக்குத் தீமை உண்டாகிறது என்று ஒருவர் எண்ணி நஞ்சை அளித்தாலும், அதை உண்டு அமைதியாக இருப்பர்' எனக் கூறுகிறார்.

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் (குறள் 580)

என்பது வள்ளுவர் வாய்மொழி. இதனை,

முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிரா கரிகர்

எனப் பெயர்தெரியாப் புலவர் ஒருவர், நற்றிணைப் பாடலில் எடுத்தாண்டுள்ளார்.

இவை அல்லாமல், பின்வரும் குறட்பாக்களின் கருத்துகளும் சொற்களும் நற்றிணையில் பயன்படுத்தப்பட்டுள்ளமை அவ்வக்குறளின் கீழே இங்குக் காணலாம்:

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை எடுத்து (குறள் 776)

அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா (நற்றிணை 97)

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து (குறள். 1102)

அருந்துய ரவலந் தீர்க்கு
மருந்துபிறி தில்லையா னுற்ற நோய்க்கே (நற்றிணை 140)

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான் (குறள் 1062)

ஐதே கம்மவிவ் வுலகுபடைத் தோனே (நற்றிணை 240)

மாலையோ வல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது (குறள் 1221)

உயிர்செலத் துணைதரும் மாலை
செயிர்தீர் மாரியொடு ஒருங்குதலை வரினே (நற்றிணை 864)

ஆள்வினை யுடைமை (குறள். அதி.62)

ஆள்வினைக்கு அசுறியாயின் இன்றொடு (நற்றிணை 205)

அகநானூறு

அகப்பொருள் கருத்துகளை அழகுற எடுத்துரைக்கும் இந்நூலிற்கு அகம் என்னும் பெயரையே, இதன் சிறப்பினை உணர்த்தும் வகையில் ஆன்றோர்கள் வழங்கியுள்ளனர். இதற்கு 'நெடுத்தொகை' என்னும் மற்றொரு பெயரும் வழங்கி வருகின்றது. நானூறு பாடல்களைக் கொண்ட இந்நூலில், சற்றேறக்குறைய நாற்பது பாடல்களில் திருக்குறளின் கருத்துகளும், தொடர்மொழிகளும் எடுத்தாளப்பட்டுள்ளன.

'அறத்தாறு' என்னும் தொடர் "அறநெறி' என்னும் பொருளில்

அறத்தாறு இதுவென வேண்டா (குறள் 37)

என வள்ளுவரால் வழங்கப்பட்டுள்ளது.

இதே பொருளில்,

..... அறத்தாறு
அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி (அகம்.5)

எனப் பாலை பாடிய பெருங்கடுங்கோ அகநானூற்றில் வழங்கியுள்ளார்.

காமத்துப்பாலில் 'புணர்ச்சி மகிழ்தல்' என்னும் அதிகாரத்தில், தலைவன். "தாம் விரும்பும் காதலியின் மென்மையான தோள்களைத் தழுவித் துயிலும் துயில்போல், தாமரைக் கண்ணனுடைய உலகம் இனிமையுடையதாகுமோ?" எனும் வினாவினை எழுப்புகின்றான்.

தாழ்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு (குறள் 1103)

இக்கருத்தினைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ,

செய்யுறு விளங்கிழைப் பொலிந்த தோள்சேர்பு
எய்திய கனைதுயில் ஏற்றொரும் திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கின்
மிகுதிகண் டன்றோ இலனே (அகம். 379)

எனத் தலைவன் மூலம் எடுத்துரைக்கின்றார்.

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே உண்டாகியுள்ள நட்புமுறை, 'உடம்போடு உயிர்க்கு உள்ள தொடர்புகள் எத்தன்மையானவையோ, அத்தன்மையானவை' என்னும் கருத்தில், வள்ளுவர்.

உடம்போடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையோடு எம்மிடை நட்பு (குறள் 1122)

என்னும் குறட்பாவை அமைத்துள்ளார். இக் கருத்தினை நக்கீரர்

உயிர்கலந் தொன்றிய தொன்றுபடு நட்பின்
செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர் போல
தையல்! நின்வயின் பிரியலம் யாம் (அகம். 202)

என விளக்கியுள்ளார்.

தலைவனோடு கூடும்போது உயிர்க்கு வாழ்வு போன்றும், பிரியும்போது உயிர்க்குச் சாவுபோன்றும் தலைவி உணருகின்றாள்.

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை! சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து (குறள் 1124)

என்பது வள்ளுவர் வாய்மொழி. இக்குறட்பாவின் பொருளைத் தெளிவுறுத்தும் வகையில்

.....யாக்கைக்கு
உயிர் இயைந்தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவு அரியோளே (அகம். 339)

என்னும் அகநானூற்றுப் பாடலின் பகுதி அமைந்துள்ளதைக் காண்க.

மனைவியின் நற்பண்பே இல்வாழ்க்கைக்கு மங்கலம் எனக் கூறுவர். அவ்வில் வாழ்க்கைக்கு நல்ல மக்களைப் பெறுதல் அணிகலம் போன்றது என்பது நிருவள்ளுவரின் கருத்து.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள் 60)

இத் கருத்திற்கு இலக்கியமாக விளங்கும் ஓர் அன்னையை,

கடவுட் கற்பொடு குடிக்கு விளக்காகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
கன்ன ராட்டி (அகம்.184)

என மருதனிளநாகனார் அறிமுகப்படுத்துகிறார்.

தலைவனைப் பிரித்து உயிர்வாழ விரும்பாத தலைவி ஒருத்தி, தலைவனிடம், "நீ என்னைவிட்டுப் பிரிந்து செல்லவில்லை என்றால் எனக்குச் சொல்! ஆனால். பிரிந்து விரைந்து வருவேன் என்னும் சொல்லை, நீ திரும்பி வரும்வரையில் உயிரோடு வாழக் கூடியவர்களுக்குச் சொல்லுக" என அறிவிக்கின்றாள்.

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை (குறள் 1151)

என்னும் குறட்பாவின் கருத்தை, மருதனிள நாகனார் என்னும் புலவர் பல சொற்களால் தெளிவாக விளக்கியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

திருந்து இழை நெகிழ்ந்து பெருந்தோள் சாஅய்
அரிமதர் மழைக்கண் கலுழச் செல்வீர்!
வருவீர் ஆகுதல் உரைமின் மன்னோ
.....
நின்றாங்குப் பெயரும் காணும்
சென்றோர் மன்னென இருக்கிற் போர்க்கே (அகம். 387)

கலித்தொகை

இந்நூல் 'சுற்றோர் ஏத்தும் கலி' யெனப் பெரியோர்களால் போற்றப்பெறும் சிறப்புடையது. கலிப்பாவினால் இயற்றப்பெற்ற இந்நூல் நூற்றைம்பது செய்யுள்களைக் கொண்டிலங்குகிறது. அகப்பொருள் இலக்கியங்களுள் அகநானூற்றில் வரலாற்றுச் செய்திகள் மிகுதியாக இடம் பெற்றிருப்பதைப் போன்று கலித்தொகையில் அறம் பொருள். இன்பம் பற்றிய கருத்துகளும், புராணக் கதைக் குறிப்புகளும் பேரளவில் காணப் பெறுகின்றன.

இல்லறத்தை நல்லறமாக நடத்தும் இல்லத்தரசி தெய்வத்தையும் தொழும் நினைவில்லாதவளாய்த் தன்னை மணந்த தலைவன் வழியொழுகும் பண்புடையவளாவாள்; அவள் மழையைப் பெய்விக்கும் ஆற்றல் உடையவளாக விளங்குகிறாள் என்பது வள்ளுவரின் நம்பிக்கை.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (குறள். 55)

இந்நம்பிக்கை சங்கக் காலத் தமிழ் மக்களிடத்து ஆழவேரூன்றி யிருந்ததைப் பின் வரும் கலித்தொகைப் பாடற்பகுதிகள் அறிவிக்கின்றன :

வறனோடின் வையத்து வான்தரும் கற்பினாள் (கலி.பா.16)

அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையனே (கலி.குறிஞ்.3)

குறவர் மடமகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுதெழலாற் றம்மையரும்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல் (கலி. குறிஞ். 3)

காதலன் பிரிவைத் தாங்கமாட்டாத தலைவி, தான் படுகின்ற துன்பத்தை எப்பொழுதும் நினைந்து, உடல் மெலிந்து துன்புறுகிறாள். அவள் "காமமும், நாணும், பிரிவு வேதனையைத் தாங்கமுடியாத என்னுடைய உடம்பினுள்ளே உயிரையே காவடித் தண்டாகக் கொண்டு இருபக்கமும். தொங்குகின்றன" எனக் கூறிப் பெருமூச்சு விடுகின்றாள்.

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பி னகத்து (குறள் 1163)

இக் கருத்தினைச் சிறிது விரித்து,

நலிதரும் காமமுங் கௌவையும் என்றிவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கியாங் கென்னை
கலியும் விழுமம் இரண்டு (கலி 142)

என்று நயமுற நல்லந்துவனார் எடுத்துரைக்கின்றார்.

இவற்றைப் போன்றே, வேறுபல குறட்பாக்களின் கருத்துகளும் கலித்தொகையின் பாடல்கள் பலவற்றில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சிறப்புமிக்க சிலவற்றைக் காணலாம்.

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் (குறள்–549)

குடிபுறங் காத்தோம்புஞ்
செங்கோலான் வியன்றானை
விடுவழி விடுவழி சென்றாங்கவர்

தொடுவழி தொடுவழி
நீங்கின்றாற் பசப்பே (கலி. 130)

துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து (குறள் 1218)

தெற்றெனக் கண்ணுள்ளே
தோன்ற இமையெடுத்துப்
பற்றுவென் என்றியான்
விழிக்குங்கால் மற்றுமென்
நெஞ்சத்துள் ளோடி
யொளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யும் அறனி லவன் (கலி. 144)

ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதென் நெஞ்சு (குறள் 1284)

ஊடுவென் என்பேன்மன்
அந்நிலையே அவற்காணின்
கூடுவென் என்னும்
இக்கொள்கை இல் நெஞ்சே (.கலி 67)

என்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு (குறள் 392)

கல்லாது முதிர்ந்தவன்
கண்ணில்லா நெஞ்சம் போல் (கலி. 130)

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி (குறள் 118)

ஆர்வுற்றார் நெஞ்சம் அழிய விடுவானோ
ஓர்வுற் றொருதிறம் ஒல்காத நேர்கோல்
அறம்புரி நெஞ்சத் தவன் (கலி. 42)

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில் (குறள். 428)

எஞ்சா தெல்லா கொடுமை நுவலாதி
அஞ்சுவ தஞ்சா அறனிலி யல்லன்என்
நெஞ்சம் பிணிக்கொண் டவன் (கலி. 42)

அகப்பொருள் இலக்கியங்களுள் கலித்தொகையில் மட்டுமே காமத்துப் பாலிலுள்ள குறட்பாக்களின் கருத்துகளும் தொடர்மொழிகளும் அல்லாமல். அறத்துப்பால். பொருட்பால் ஆகிய பகுதிகளிலுள்ள குறட்பாக்களின் கருத்துகள் பேரளவில் சிறப்பாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன. சற்றேறக்குறைய எழுபது இடங்களில் திருக்குறளின் கருத்துகள் கலித்தொகையில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் கால்பகுதி கபிலரால் இயற்றப் பெற்றதாகக் கருதப்பெறும் 'குறிஞ்சிக் கலி'யில் காணப்பெறுகின்றன.

புறப்பொருள் இலக்கியங்களில் குறள் மணம்

ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து வாழும் வாழ்க்கையில் பெற்ற அனுபவத்தைப் புறத்தார்க்குப் புலனாகுமாறு எடுத்துரைப்பனவெல்லாம் புறப்பொருளெனப் போற்றப் பெறும். அறம், பொருள் ஆகியவற்றின் பல்வேறு கூறுகளும் இதனுள் அடங்கும். எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் பற்றியன இரண்டு. ஒன்று புறநானூறு; மற்றொன்று பதிற்றுப்பத்து. இவை இரண்டும் அல்லாமல், பாட்டு வகையால் தொகுக்கப்பெற்ற "பரிபாடல்" என்றொரு நூலும் இருக்கிறது.அத்தொகை நூலில் தெய்வங்களைப்பற்றிய பாடல்களே பெரிதும் இடம் பெற்று இருப்பதால், அதையும் நாம் புறப்பொருள் பற்றியதாகவே கொள்ளலாம்.

புறநானூறு

பண்டைத் தமிழக வரலாற்று நிகழ்ச்சிகளின் களஞ்சியமாக விளங்குவது புறநானூறு. சங்கக் காலத் தமிழகத்து அரசர்களின்

வீரமும் கொடைத்திறனும் இந்நூலில் இனிது எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. மேலும், அக்காலத்திய மக்களுடைய வாழ்க்கை முறை, நாகரிகம், பண்பாடு, வாணிகம் போன்ற பிற செய்திகளும் கற்பவர் உள்ளத்தைக் கவரும் வகையில் இந்நூலில் பாடப் பெற்றுள்ளன. அவை அனைத்தும் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைந்துள்ளன. நானூறு பாடல்களைக் கொண்ட இந்நூலுள், திருக்குறளின் கருத்துகளும், தொடர் மொழிகளும் பொன்னே போல் பல இடங்களில் போற்றப்பட்டுள்ளன.

மனித வாழ்க்கையில் அறமே முதன்மையானது. மனிதன் அறநெறியில் நின்று பொருளை ஈட்டவேண்டும். அதை அறவழியில் செலவழித்து இன்பம் துய்க்கவேண்டும் அவ்வாறு அறநெறியில் ஒழுகுவதால் உண்டாகும் இன்பமே சிறந்தது; போற்றத்தக்கது என்பது வள்ளுவரின் கொள்கையாகும்.

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்(கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு (குறள் 31)

அறத்தான் வருவதே யின்பம்மற் றெல்லாம்
புறத்த புகழு மில (குறள். 39)

இவ்விரு குறட்பாக்களின் கருத்தையும் சுருக்கி, இரண்டு தொடர்களில் கோவூர் கிழார்,

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல (புறம்.31)

எனச் சிறப்பித்துள்ளமை இங்குக் கருதத் தக்கதாகும்.

ஒருவர் நமக்குச் செய்த உதவியை மறவாமல், நன்றி யுணர்வோடு அவர்களைப் போற்றி நாம் வாழவேண்டும் என்று வள்ளுவர் அறிவுறுத்தும் குறட்பாவை அறியாதார், தமிழ் கூறும் நல்லுலகில் இல்லை எனலாம்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (குறள். 110)

என்னும் குறட்பாவின் கருத்தினை ஆலத்தூர் கிழார் என்னும் புலவர் பெருமான்.

நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ! (புறம். 36)

என விரித்துரைக்கின்றார்.

பிள்ளையைப் பெற்றவுடன் ஒரு தாய் அடையும் மகிழ்ச்சியைவிட அப்பிள்ளையைச் சான்றோன் என உலகம் போற்றுகின்ற பொழுது அவள் பெரும் மகிழ்ச்சியுறுவாள் என வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (குறள் 69)

இதைப் புறநானூறு,

ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே (புறம். 278)

என எடுத்துரைக்கின்றது.

குழந்தைகளின் மழலைமொழியின் சிறப்பை வள்ளுவர்.

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர் (குறள் 66)

எனப் பாராட்டுகிறார். இக்கருத்தினை ஔவையார்,

யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்கு
அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை (புறம். 92)

என விரித்துரைத்துள்ளார்.

இதைப்போன்று.

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற (குறள். 495)

என்னும் குறட்பாவின் கருந்தை,

போற்றுமின் மறவீர் சாற்றாது நும்மை
ஊர்க்குறு மாக்கள் ஆடக் கலக்கும்
தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கும்
ஈர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை
நுண்பல் கருமை நினையாது
இளையனென் நிகழிற் பெறவரி தாடே (புறம்.104)

என ஔவையார் தெளிவுறுத்தியுள்ளார்.

தன்னை நாடி வருகின்ற புலவர், பாணர் முதலியோரின் வரிசையறிந்து, அரசன் அவர்களைப் போற்றிப் பரிசு அளிக்க வேண்டும் என்பதை,

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர் (குறள் 528)

என வள்ளுவர் அறிவித்துள்ளார்.

இக் கருத்தைக் கபிலர் எனும் புலவர்,
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் தோன்றல்
அதுற் கறிந்தளை யாயிற்
பொதுநோக் கொழிமதி புல்வர் மாட்டே (புறம். 121)

என விரிவாக விளக்கியுள்ளார்.

பதிற்றுப்பத்து

இந்நூல் புறப்பொருள் பற்றிய நூறு பாடல்களைக் கொண்டது. சேரவேந்தர்கள் பதின்மரைப் பத்துப் புலவர்கள் பத்துப் பாடல்களால் போற்றிப் பாடியமையால் இந்நூல் பதிற்றுப்பத்து என்னும் பெயர் பெற்றது. இந்நூலின் முதற்

பத்தும், பத்தாம் பத்தும் கிடைக்கவில்லை. இந்நூலில் உள்ள ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் துறை, வண்ணம், தூக்கு பெயர் என்பனவற்றை அறிவிக்கும் பழைய குறிப்புகள் உள்ளன.

வீரர்களை "வில்லேருழவர்" (குறள் 871) என வள்ளுவர் குறிப்பிட்டுள்ளமை, நாம் யாவரும் அறிந்த செய்தியாகும். இவரைப்படையேர்உழவர்(பதிற்.14)எனவும்"வில்லேர்உழவர்" (பதிற் (40) எனவும் பதிற்றுப்பத்தில் வழங்கப்பட்டுள்ளமையும் காணுகின்றோம்.

பிரிந்து சென்ற தலைவனை வழிமேல் விழிவைத்துத் திரும்பி வருவானா" எனும் ஆவலோடு பல நாள்கள் எதிர்பார்த்து ஒளியிழந்த கண்ணோடு துன்புறுகிறாள். அவன் பிரிந்து சென்ற நாள்களைக் கணக்கிடுவதற்கு நாள்தோறும் சுவரில் நகத்தினால் கோடிட்டுக் கோடிட்டு அவளுடைய கைவிரல்களும் தேய்ந்துவிட்டன எனும் கருத்தை,

வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல் (குறள் 1261)

என வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

பதிற்றுப்பத்து இத்தகைய தலைவரை,

நெடும ணிஞ்சி நீணகர் வரைப்பி
னோவுறழ் நெடுஞ்சுவர் நாள்பல வெழுதிச்
செவ்விரல் சிறந்த வவ்வரிக் குடைச்சூல்
அணங்கெழி லரிவையர் (பதிற்று. 68)

என நம் கண்முன்னால் கொண்டுவந்து நிறுத்துகிறது.

'பிரிந்து சென்ற தலைவரைக் கனவில் காண்பதனால்தான் நான் இன்னும் உயிருடன் வாழுகின்றேன்' எனத் தலைவி யொருத்தி,

நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலி னுண்டென் னுயிர் (குறள் 1213)

எனக் கூறுவதாக வள்ளுவர், ஒரு குறட்பாவை அமைத்துள்ளார். இக்குறளின் கருத்தினைப் பெருங்குன்றூர் கிழார்.

கனவிலும் பிரியா வுறையுளோடு...
மீனொடு புரையுங் கற்பின்
வாணுதல் அரிவை. (பதிற். 89)

என எடுத்தியம்பியுள்ளார்.

பரிபாடல்

இசைப்பாவாகிய பரிபாட்டினால் பாடப்பெற்ற இந்நூல் முழுவதும் கிடைக்கவில்லை. கிடைத்துள்ள இருபத்திரண்டு பாடல்களுள் திருமாலைப்பற்றி ஆறும், முருகனைப்பற்றி எட்டும், வையை ஆற்றைப்பற்றி எட்டும் பாடப்பெற்றனவாக உள்ளன. இந்நூலில், நான்கு இடங்களில் திருக்குறளின் சுருத்துகள் இடம் பெற்றுள்ளன.

அரசருக்கு ஒற்றர்கள் கண்களைப் போன்று மிக இன்றியமையாது தேவைப்படுபவராவர். இதை வள்ளுவர்,

ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண் (குறள் 581)

எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாண்டிய மன்னனுக்குக் 'கண்' போன்றிருந்த அதிகாரிகளை,

கடனறி காரியக் கண்ணுவ ரோடு (பரி . 19:23)

எனப் பரிபாடல் சுட்டுகிறது.

நல்ல குடியில் பிறந்தவன், தன்னை நாடிவந்து 'பொருள் இல்லை, வறுமையால்வாடுகிறோம்' என்று இரவலர் கூறுகின்ற

பொழுது, தன்னுடைய வறுமைத் துன்பத்தை அவர்களிடத்துக் கூறாது, தன்னால் இயன்ற உதவியைச் செய்வான் என்பது வள்ளுவருடைய கருத்து.

இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள (குறள் 223)

இதை,

இல்லது நோக்கி இனிவரவு கூறாமுன்
அல்லது வெஃகி வினை செய்வார் (பரி. 10:87; 88)

எனக் கரும்பிள்ளைப் பூதனார் விளக்குகிறார்.

"நாணாகிய நாளினைக் கோத்த நிறையென்னும் கதவினைக் காமவேட்கையாகிய கோடரி முறிக்கின்றது. அதனால், இனி அவை நிற்றலும் இல்லை: யான் அவற்றைப் பொறுத்தலும் இல்லை" எனத் தலைவி காம நோயால் வருந்துகிறாள்.'

காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னும்
நாணுந்தாள் வீழ்த்த கதவு (குறள் 1251)

மதுரை மாநகரத்து மகளிரும் இந்நிலையை அடைத்தனர் என்பதை.

காமக் கணிச்சியாற் கையறவு வட்டித்துச்
சேமத் திரைவீழ்த்துச் சென்றமளி சேர்குவோர் (பரி . 10:34, 35)

எனப் பரிபாடல் கூறுகிறது. இவற்றைப் போன்று. இன்னும் சில காட்டுகளை நாம் பரிபாடலிலிருந்து காட்டலாம்.

பத்துப்பாட்டு

சங்க இலக்கியங்களுள் பத்து நீண்ட நெடும் பாட்டுகளைக் கொண்ட தொகைநூல் பத்துப்பாட்டு என்பதாகும். இதில்

செம்பாதி 'ஆற்றுப்படை' என்னும் துறையில் அமைந்த பாடல்களாகும். எஞ்சியவற்றுள் ஒன்று காஞ்சித்திணையில் அமைந்தது. மற்றவை முல்லை, குறிஞ்சி, பாலைத் திணைகளை உரிப்பொருளாகக் கொண்டனவாகும். பிற்காலப் பொருள் தொடர்நிலைச் செய்யுள்களாகிய காப்பியங்களுக்கு, இப்பாடல்கள் முன்னோடிகளாக அமைந்துள்ளன. இத்தொகையின் ஆறாவது பாட்டாகிய "மதுரைக் காஞ்சியை' வீரகாப்பிய மரபில் தோன்றிய 'குறுங்காவியம்' என நாம் கூறலாம்.நெடுநல்வாடை' என்ற ஏழாவது பாட்டு உலக இலக்கியச் செல்வத்தின் முதல்வரிசையை அணிசெய்யத்தக்க சிறப்புமிக்கதாகும்.

இந்நூலினுள் இடம்பெற்றுள்ள குறட்பாக்களுள் மூன்றினை நாம் இங்குக் காணலாம்:

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர் (குறள் 528)

வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த (சிறுபாண். 217–218)

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள். 231)
.....
ஈதல் உள்ளமோ டிசைவேட் குவையே (மதுரைக்– 204–205)

வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம் (குறள். 85)

விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருத்தகை
நின்னோ டுண்டலும் புரையதென் றாங்கு
(குறிஞ்சி. 206–207)

இவ்வாறு சங்க நூல்களின் குறட்பாக்களையும், அவற்றில் தொடர்மொழிகளையும் தம் பாக்களில் எடுத்தாண்ட புலவர் பெருமக்கள், பல்வேறு காலத்தில் பல்லேறு இடங்களில் வாழ்ந்தவராவர். அவர்களுடைய உள்ளங்களையெல்லாம் திருக்குறள் கவர்ந்திருக்கிறது என்பதற்கு மேற்கண்ட எடுத்துக் காட்டுகளே போதிய சான்றுகளாகும். இவற்றிலிருந்து சங்கக் காலத்தில் திருக்குறள் சிறப்புமிக்கதோர் அறநூலாகப் பெருவாழ்வு பெற்றிருந்தமை புலனாகின்றது.

3. திருவள்ளுவர் ஆண்டு

மறுமலர்ச்சியுற்றிருக்கும் தமிழகத்தில் நம் பொய்யில் புலவர் புதுவாழ்வு பெற்றும்! புதுப்பொலிவுடன் திகழ்கிறார்.

தமிழன் திருக்குலத்தில் தமிழ்த்தாய் திருவயிற்றில்
தமிழ்த் திருவள்ளுவனார்–கிளியே
தமிழாய்ப் பிறந்தாரடி!

என்று கவிஞர் ஒருவர் பாடியதைப் போன்று . தமிழனுடைய பொலிவிற்கும் வலுவிற்கும், ஏற்றத்திற்கும் எழிலுக்கும் வழிகண்ட வள்ளுப் பெருந்தகை. என்றுமுள தென்தமிழிற்குத்' தன்னுடைய முப்பாலின்மூலம் பொன்றாப் புகழைத் தேடித் தந்துள்ளார். வள்ளுவர் தந்த வான்மறையை நாம் பெற்றிராவிட்டால், உலக அரங்கில்,

தமிழன் என்றொரு இளமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு

என்று நாம் பெருமையாகப் பேசுவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விட்டிருக்கும். நல்ல காலமாகத் தமிழகம் உலகிற்கு வள்ளுவனை அளித்தது! அதன் மூலம் வான்புகழைப் பெற்றது.

இன்று (சனவரி 14, 1970) நாம் கொண்டாடும் வள்ளுவரின் ஈராயிரம் ஆண்டுத் திருவிழா தமிழினத்தின் தேசியத் திருவிழா, சாதியாலும் சமயத்தாலும் அரசியல் கொள்கைகளாலும் சிதறிக்கிடக்கும் நான்குகோடித் தமிழ் மக்களை ஒன்றுபட்ட உள்ளத்தினராய். 'நாம் யார்? நம்முடைய பண்பாடு யாது நம்முடைய மரபு எழியாது' என்று சிந்திக்கத் தூண்டுவது இத்திருவிழா.

இச்சமயத்தில் ஒன்றுபட்ட தமிழகத்தை, எழுச்சியுற்ற தமிழகத்தை உருவாக்க முயலும் நாம், திருவள்ளுவரின் பெயரால் நமக்கென ஓர் ஆண்டுக் கணக்கினை நூற்றாண்டினை– சகாப்தத்தை வகுத்துக்கொண்டு அன்றாட வாழ்க்கையில் அதைப் பயன்படுத்த முனைந்துள்ளோம். இத்திருவள்ளுவரின் ஆண்டுக் கணக்கு நமக்குத் தேவையா? அதனால் பயன் என்ன?" எனச் சிலர் கேட்கின்றனர்.

கால வரன்முறையின் அடிப்படை

நம்முடைய நாட்டிலே பொதுவாக ஒரு குறை இருந்து வருகிறது. தனி மனிதனுடைய பிறந்தநாள், நாழிகை. திங்கள், ஆண்டு ஆகியவற்றை ஆர்வத்தோடு குறித்து வைத்துப் போற்றித் தமிழர்கள் வாழுகின்றனர். ஆனால் தொன்றுதொட்டு இன்றுவரை, நாட்டின் வரலாற்றுக்குத் தேவையான காலக் கணக்கீட்டைப்பற்றிக் கவலைப்படாதவர்களாகவே இருந்து வருகின்றோம். இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் 'காலவரையறை' அறுதியிட்டுக் கூறத்தக்க வகையில் கணிக்கப்படவில்லை. சிறப்பாகத் தமிழகத்தின் வரலாற்றில் 'காலத்தைக் கணிப்பதில் குழப்பமான சூழ்நிலையே இருந்து வருகிறது. கால வரையறை என்பது முறையான வரலாற்றை வரைவதற்குத் தேவைப்படும் இன்றியமையாத கருவி.

முதலில் அதை வரையறுத்துக் கொண்டால்தான், ஒரு நாட்டின் அரசியல் வரலாற்றையோ, சமுதாய வரலாற்றையோ, சமய வரலாற்றையோ தெளிவாகவும் உறுதியாகவும் நாம் எழுத இயலும். இதனால்தான் காலவரையறையை வரலாற்றின் கண்கள் எனச் சிறப்பித்துக் கூறுவர். நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு முதன் முதலாகத் தமிழருடைய வரலாற்றை எழுதிய பேராசிரியர் பி.தி.சீனிவாச ஐயங்கார், கால வரன்முறைப்படுத்தித் தமிழருடைய வரலாற்றை எழுதுவதற்குப் பெரிதும் இடர்ப்பாடுற்றார். அவர்தம் ஆராய்ச்சியின் மூலம் ஓர் உண்மையைக் கண்டறிந்தார். காலவரையறை வரலாற்றின்

கண்களெனக் கொள்ளப்படுமானால், இந்திய வரலாறு என்னும் நங்கை – என்றுமே கண்ணில்லாக் குருடியாகத் தானிருக்க முடியும் என்று மனம் நொந்து அவர் கூறினார். அந்நிலையே தமிழக வரலாற்றிற்கு இன்றுவரை இருந்து வருகிறது.

சகாப்தங்கள் தேவையா?

'காலவரையறை'யைச் செய்வதில் என்ன கடினம்? என்று எளிதில் யாரும் கேட்டுவிடலாம். ஆனால் அதற்கு விடையளிப்பதோ சுடினம். ஒரு நாட்டின் வரலாற்றைத் தெளிவாக எழுதுவதற்குக் காலவரையறை முதன்மையானது. அக்காலக் கணக்கை மதிப்பீடு செய்வதற்கு நமக்கென ஒரு 'சகாப்தம்' இருக்குமானால், அதை அடிப்படையாகக் கொண்டு ஓர் அரசனுடைய காலத்தை எளிதில் கணக்கிட்டு – உரைக்கலாம். இன்று மேற்கு நாட்டினர், கிறித்துவின் – தோற்றத்தையும் மறைவையும் அடிப்படையாகக் கொண்டு கிறித்துவ சகாப்தத்தைக் கணித்துள்ளனர். உலகம் முழுவதிலும் அதைப் பின்பற்றி வருகின்றனர். கிறித்துவ – சகாப்தத்தை நாமும் பின்பற்றுகிறோம். அதன் உதவியால் – ஓரளவிற்கு எளிதாகக் குறிப்பிட்ட இக்கால நிகழ்ச்சி ஒன்றைக் கால வரன்முறைப்படுத்தி நாம் கூறுகிறோம்.

கி. பி. 1947இல் இந்தியா சுதந்திரம் அடைந்தது.

கி. பி. 1948இல் அண்ணல் காந்தியடிகள் மறைந்தார்.

கி. பி. 1950இல் இந்தியா குடியரசு நாடாகியது.

எனநாம் தெளிவாக வருங்காலச் சத்ததியினருக்குப் புரியும் வகையில், சொல்ல இயலுகிறது. "கிறித்துவ சகாப்தத்தை நாம் அடிப்படையாகப் பயன்படுத்துவதுதான் இதற்குக் காரணமாகும். இத்தகைய ஒரு பொதுவான காலக் கணக்கீடு நம்மிடையே பழங்காலத்தில் இல்லாமையால், பழைய வரலாற்றை அறிந்து கொள்ளுவதில்,எடுத்துரைப்பதில் இடர்ப்பாடுகள் இருந்து வருகின்றன.

இவ்வாறானால், 'நம்முடைய முன்னோர்கள் எப்படித்தான் தங்கள் காலத்தை மதிப்பிட்டுக் குறித்து வந்தனர்? அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லையா?' என்பன போன்ற ஐயங்கள் தமக்கு உண்டாகும். நம்முடைய முன்னோர்கள் தமிழர்கள் – தங்களுக்கென்று ஒரு 'சகாப்தத்தைப்' பயன்படுத்தவில்லை. குறிப்பிட்ட ஓர் அரசன் ஆட்சிக்குவந்த நாள் முதல் அவ்வரசன் ஆட்சியாண்டைக் கணக்கிட்டு. இந்த ஆண்டில் இந்நிகழ்ச்சி நடந்தது என்று குறிப்பிட்டனர். அவ்வரசன் இறந்தபிறகு, அந்தக் கணக்கு முடிந்துவிட்டது. புதியதோர் அரசன் ஆட்சிக்கு வந்ததும் அவன் முடிசூட்டிக் கொண்டநாள் முதல் புதிய ஆண்டுக்கணக்குத் தொடங்கியது. இதைக் கல்வெட்டுகளில் நாம் காணலாம். புகழ்மிக்க சோழப் பேரரசன் இராசராசன் ஆட்சிக்கு வந்த இருபத்து ஆறாவது ஆண்டின், இருபதாவது நாளில், தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் 'இராசராசேச்சுரர்' என்னும், சிவபெருமானுக்குப் பல அறக்கட்டளைகள் வழங்கினான். இச்செய்தியை,

> கோ ராஜகேசரி வர்மரான ஸ்ரீராஜராஜதேவர்க்கு
> யாண்டு இருபத்தாறாவது நாள் இருபது உடையார்...

என்று அவனுடைய கல்வெட்டுக் கூறுகிறது. இதைப் போன்றே ஒவ்வோர் அரசனுடைய கல்வெட்டும் அமைந்திருக்கும்.

விசயநகர மன்னர்களின் ஆட்சிக் காலத்திற்குச் சிறிது முன்புதான் (1336) தமிழகத்தில் கலியுகக் கணக்கும். சாலிவாகன சகாப்தக் கணக்கும் வழக்கத்திற்கு வந்தன. புராண மரபுப்படி வடமொழியாளர் இவ்வுலகம் தோன்றிய நாள்முதல் இன்றுவரை கழிந்த காலத்தைக் கிரேதா யுகம். திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று வரன்முறைப்படுத்தியுள்ளனர். இப்பொழுது கலியுகம் 5072–ஆம் ஆண்டு நடப்பதாகப் பஞ்சாங்கம் கூறும். சாலிவாகன சகாப்தம் என்பன ஆந்திர நாட்டில் அரசு புரிந்த சாலிவாகனன்" என்ற அரசனின்

ஆட்சியிலிருந்து கணக்கிடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இன்று சாலிவாகன சகாப்தம் 1892 எனச் சொல்லுகின் றனர்.

இனி, வட இந்தியாவின் சக ஆண்டு என்னும் சகாப்தம் கனிஷ்கர் ஆட்சிக்கு வந்த கி. பி. 78ஆம் ஆண்டு முதல் கணக் கிடப்படுகிறது. கம்பராமாயணம் அரங்கேற்றம் செய்யப் பட்ட காலத்தை 'எண்ணிய சகாப்தம் எண்ணூற்று ஏழின் மேல்' என்று ஒரு பழம் பாடல் குறிப்பிடுகிறது. "சகாப்தம்' என்ற வடமொழிச் சொல்லே சக ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும் காலத்தைத்தான் முதலில் குறித்தது. இப்பொழுது, அதை, நாம் நூற்றாண்டுக் காலக் கணக்கு (Era) என்னும் பொருளில் கையாளுகிறோம். இச்சகாப்தத்தை நம்முடைய இந்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டு, அதையே மத்திய அரசின் ஆண்டுக் கணக்காக நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இதைக் கிறித்துவ சகாப்தத்திற்கு மாற்றாக, நாம் பின்பற்றலாம். ஆயினும் இம்முறையும் நம்முடையது இல்லை எனக் கருத இடமிருக்கிறது.

இந்நிலையில் தமிழ் ஆண்டுகள் அறுபது என்னும் கணக்கு வழக்கில் இருந்துவருகிறது. 'அதை நாம் பயன்படுத்திக் கொண்டால் போதாதா?' எனக் கேட்கலாம். இது தமிழ் முறை அன்று. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வராகமிகிரர் என்பவர்தாம், முதன்முதல் இதைப்பற்றிக் குறிப்பிடுகிறார், இந்த வழக்குத் தமிழ்நாட்டிற்கு கி. பி. பத்தாம் நூற்றாண்டு அளவில் வழக்கிற்கு வந்தது. அதற்கு முன்பு அது தமிழ்நாட்டில் வழங்கப்படவில்லை. முதலாவது அதில் வரும் ஆண்டுகளின் பெயர்கள் ஒன்றுகூடத் தமிழில் இல்லை. இரண்டாவது அது தமிழ்நாட்டில் 'பிரபவ' ஆண்டில் தொடங்குவதாகக் கணக்கிடப்படுகிறது. வடநாட்டில் 'விசய' ஆண்டிலிருந்து கணக்கிடப்படுகிறது;

மூன்றாவதாக அது அறுபது ஆண்டுகள் முடிந்தவுடன் ஒரு வட்டம் நிறைவுறுகிறது. மறுபடியும் அது புதிதாகத் தொடங்குகிறது. இப்பொழுது அறிஞர் அண்ணாவிற்கு 60

ஆண்டு முடிவடைந்துவிட்டது; அவர் சௌமிய ஆண்டில் பிறந்தவர் என்றால் இன்றைக்கு நாம் எளிதில் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர் என்று சொல்லிவிடலாம். ஆனால் கி.பி.2500இல் வாழுகின்றவர்கள் அறிஞர் அண்ணாவைப் பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது, அவர் "சௌமிய ஆண்டில் பிறந்தார்" என்று சொன்னால், 'எந்தச் சௌமிய ஆண்டு?" எனக் குறிப்பிடுவதில் குழப்பம் உண்டாகும் அல்லவா? அறுபதாண்டுகளுக்கு ஒரு முறை சௌமிய ஆண்டு வருகிறது, எனவே, அவர்கள் இருபதாம் நூற்றண்டில் வாழ்ந்த அறிஞர் அண்ணா, இருபதாம் நூற்றண்டின் முதலில் வந்த சௌமிய ஆண்டில் தோன்றினார் எனச் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான், தெளிவாக இருக்கும். இதற்கு, அவர்கள் கிறித்தவ நூற்றாண்டுக் கணக்கின் உதவியைப் பெற்றாக வேண்டும். இத்தகைய இடர்ப்பாட்டைப் போக்குவதற்கே தமிழனுக்கு ஒரு தனி நூற்றாண்டுக் கணக்கு வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

தமிழனுக்கு ஒரு சகாப்தம் வேண்டாமா?

தென்பாண்டிநாட்டிலும்கேரளாவிலும்வழங்கும்கொல்லம் ஆண்டுக்கணக்கை நாம் பின்பற்றினால் என்ன எனச் சிலர் கேட்கின்றனர். கி.பி.825 அளவில் சைவப்பெரியாரென்று நாம் போற்றும் சேரமான் பெருமான் நாயனார் கயிலாயம் சென்றதை– முஸ்லிமாக மதம் மாறி மெக்காவிற்குச் சென்றதாகக் கொண்டு கணக்கிடப்படுவதாக ஒரு சாராரும், அவர் புதிதாகக் கொல்லம் என்ற தலைநகரை அமைத்துக்கொண்ட ஆண்டிலிருந்து கணக்கிடப்படுவதாக மற்றொரு சாராரும் கூறுகின்றனர். இது சமயச்சார்புடையதாக இருப்பதோடு, கேரள நாட்டிற்கே உரிய தனிச்சகாப்தமாகவும் இருந்து வருகிறது. எனவே தமிழனுக்கென்று ஒரு தனிச்சகாப்தம் வேண்டும் அல்லவா?

இசுலாமியர் ஆட்சிக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட 'பசலி' என்ற சகாப்தம், இன்றும் நிலவருவாய்க் கணக்கில்

கையாளப்படுகிறது. இன்று பசலி 1379 நடப்பதாகச் சொல்லுவர். இது முஸ்லீம்கள் ஆண்டுக் கணக்காகிய ஹிஜ்ரியோடு நெருங்கிய தொடர்பு உடையது. எனவே, சமயச் சார்பற்ற ஓர் ஆண்டுக்கணக்கு நமக்கு வேண்டும் எனச் சொல்லுவதில் தவறு இல்லை அல்லவா?

இதைப்பற்றித் தமிழ் அறிஞர்கள் பலர் சிந்தித்திருக்கின்றனர். இந்நூற்றண்டில் சிறப்புற்று விளங்கிய மறைமலை அடிகள் திருவள்ளுவரின் காலத்தைத் தக்க சான்றுகளைக் கொண்டு ஆராய்ந்து, கிறிஸ்துவின் மறைவிற்கு 31 ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் மறைந்திருக்க வேண்டும் என்று முடிவு செய்தார். அதை அடிப்படையாகக் கொண்டு திருவள்ளுவர் நூற்றண்டுக்கணக்காக 1935ல் சனவரி 18–ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் அதை அவர் அறிவித்தார். அன்று முதல் இன்று வரை அதைத் தமிழன் என்னும் உணர்வு உடைய தமிழர்கள் ஏற்றுப் போற்றி வருகின்றனர்.

சாதி, சமயத் தொடர்பில்லாத வகையில் தமிழனுக்குத் தனிச்சிறப்பைத் தேடித்தந்த திருவள்ளுவரின் பிறப்பினை அடிப்படையாகக் கொண்டு திருவள்ளுவராண்டு கணிக்கப்பட்டது. இக்கணக்குப்படி, இன்றைக்குத் (1970) திருவள்ளுவராண்டு 2000 முடிவு அடைந்துவிட்டது. இக்காலக்கணக்கை, நாம் எல்லாரும் பயன்படுத்துவதன்மூலம், தமக்கு உலகப்பெரும் புகழைத் தேடித்தந்த திருவள்ளுவருக்கு நாம் நன்றி செலுத்துவதோடு, நம்முடைய வரலாற்றைக் காலவரன் முறைப்படி வரைவதற்கு வருங்காலத் தமிழ்ச் சமுதாயத்திற்கு வழிகாட்டியவர்களுமாவோம். வள்ளுவர் ஈராயிரம் ஆண்டினைக் கொண்டாடும் இந்நாளில், நம்முடைய பஞ்சாங்கம் முதல், அரசாங்கம் வரையில் திருவள்ளுவர் ஆண்டினைப் (தி.ஆ) பயன்படுத்த முன்வர வேண்டுமென. விழைகிறோம்!

4. முப்பாலுள் முதுமொழிகள்

நாட்டு மக்களின் நாவிலே நடமாடும் நயமொழிகளே பழமொழிகளாகும். மக்களிடையே பழகிய பழுத்த பழைய மொழிகளே பழமொழிகளாகப் போற்றப்படுகின்றன. அவை அறிவுரை, அனுபவ மொழிகள். ஏளனப் பேச்சுகள், நகைச் சுவைபூட்டும் நயமிகு சொற்களெனப் பலவகைப்படும்.

பழமொழிக்குப் பல பெயர்கள்

நம்முடைய முன்னோர், "முதுமொழி, மூதுரை, முதுசொல், முன்சொல். பழஞ்சொல், தொன்மொழி, வாய்மொழி. தொன்றுபடு கிளவி, மொழிமை" என்னும் பல்வேறு பெயர்களால் அதைச் சுட்டியுள்ளனர்.

தொல்காப்பியனார் காலத்தில் பழமொழிகள் பல வழக்கில் இருந்தமை, பழமொழிக்கு அவர் பின்வருமாறு இலக்கணம் வகுந்துள்ளமையால் புலனாகின்றது.

நுண்மையும் சுருக்கமு மொளி யுடைமையும்
எண்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏதுநுதலிய முதுமொழி யென்ப (தொல்–பொருள்–1433)

பழமொழியை, 'முதுமொழி" என்று அவர் சுட்டுகிறார். இந்நூற்பாவிலிருந்து எளிமை, தெளிவு, நுட்பம், சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் ஆகிய பண்புகளையுடைத்தாய்க் கருதிய பொருளைத் தெளிவுறுத்துவதற்குக் காரணமாக அமையும் தொடரே, 'பழமொழி' என்பது தெளிவாகிறது.

வாய்மொழி இலக்கியம்

"இப்பழமொழியைப் பல்லோர் கூறிய பழமொழி' என்றும் (அகம். 66). தொன்றுபடு பழமொழி என்றும் (அகம்.101), பண்டைத் தமிழ்ச் சான்றோர் போற்றியுள்ளனர். மக்கள் வாழ்க்கையின் பல்வேறு துறைகளைப்பற்றி, அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த பெரியோர்கள் கண்ட உண்மைகளைத் திட்பநுட்பமாகக் கேட்போர் உள்ளத்தில் பதியுமாறு. சுருங்கச் சொல்லி விளங்கவைப்பன பழமொழிகள்,

பழமொழிகள் மக்களின் உதடுகளில் உலவி வருவன. அவை, இடத்திற்கும், காலத்திற்கும், பயன்படுத்தும் மக்களின். மனவளத்திற்கும் ஏற்ப மாற்றமுறும் இயல்பின. பெரிதும் அவை 'வாய்மொழி' வழி வாழ்வு பெறுவன. இதனால், அவற்றை மிதவை இலக்கியம்' (Floating literature) எனவும். எழுதா இலக்கியம்' எனவும், 'வாய்மொழி இலக்கியம்' எனவும் போற்றுவது மரபு. அவற்றைப் பலர் வழங்குகின்றபொழுது, அவற்றில் இயல்பாகத் திரிபுகள் உண்டாகின்றன. கேட்போருடைய தேவைக்கும் ஆர்வத்திற்குமேற்ப அவை திரிகின்றன. அவற்றைப் படைத்த ஆசிரியன் யார்?' என நாம் சொல்ல இயலாது. பழமொழிகளைப் பல நேரங்களில் பலர் பயன்படுத்துவதால் அவரவருடைய விருப்புவெறுப்புகளுக்கு ஏற்றாற் போல அவை மாற்றமுறுகின்றன. இதனால் பலருடைய கூட்டு முயற்சியால் படைக்கப்பட்டவை பழமொழிகள் என்று கொள்ளுவதே பொருந்துவதாகும்.

மூதுரையும் பழமொழியும்

பேச்சு மொழியில் வழங்கிவரும் பழமொழிகளுக்கு அழியாப் பெருவாழ்வினை அளிப்பவர் கவிஞர்கள். அவற்றைத் திருத்தியும் மாற்றியும் செம்மைப்படுத்தியும் தம்முடைய இலக்கியத்துள் ஒரு முறை அவர்கள் பயன்படுத்தி விடுவார்களானால், அவற்றிற்கு இலக்கியப் பொலிவும்

வலிவும் உண்டாகிவிடுகின்றன. இத்தகைய படைப்புகளுள் ஒன்றே 'மூதுரை' எனும் இலக்கிய வகையாகும். நாட்டில் நெடுங்காலமாக வழங்கிவரும் பழமொழிகளுள், மக்களின் அன்றாட ஒழுகலாற்றிற்கு உதவக்கூடியனவற்றைத் தேர்ந்தெடுத்துச் செம்மைப்படுத்தி நல்ல நடையில் மூதுரை இலக்கியமாகப் படைக்கும் பழக்கம் எல்லா நாடுகளிலும் தொன்றுதொட்டு இருந்துவருவதாகும்.

அரிஸ்டாட்டில் என்ற கிரேக்க நாட்டு அறிஞர் 'மூதுரைக்கு'ச் சிறந்ததோர் இலக்கணத்தைத் தந்துள்ளான்.

> "மூதுரை என்பது பொதுவாக ஒரு கருத்தை அறிவிக்கும் தொடராகும். அக்கருத்துக் குறிப்பிட்ட ஒரு பொருளோடு நேரடியாகத் தொடர்புற்றதாய், அனைத்துலகப் பண்புடன் விளங்கும்; பெரிதும் மனித வாழ்க்கையின் செயல்களைப் பற்றியதாக இருக்கும். நம்முடைய வாழ்க்கையில் கொள்ளத்தக்கவை எவை, விடுக்கத்தக்கவை எவை யென்பதை அறிவிப்பதாக அது அமையும்."[3]

என்பது அவனுடைய விளக்கமாகும்.

இவ்விளக்கம் பழமொழிக்கும் பெரிதும் ஒத்துவருகின்றது. மேலும் மூதுரையை இருவகையாக வகைப்படுத்திக் கூறுமிடத்து, முதல் வகையைச் சேர்ந்த மூதுரைகள் எவ்வாறு பழமொழியோடு தொடர்புடையன என்பதை அரிஸ்டாட்டில் நன்கு தெளிவுறுத்தியுள்ளான்:

> "மூதுரைகள் இரண்டு வகைப்படும். மனித இனத்தின் செயல்முறைகளைப் பற்றியது முதல் வகையைச் சேர்ந்தது. மக்களினத்தைப் பற்றி மட்டுமல்லாமல், பிற உயிர்களைப்பற்றியும் இயற்கைப் பொருள்களின் இயல்புகளைப் பற்றியும் எடுத்துரைப்பன இரண்டாவது வகையாகும். முதல் வகையைச்சேர்ந்த மூதுரைகளில்

---

3 Aristotle: Rhetoric, (Tr.) W. Rhys Roberts. P. 21.

மனிதனுடைய விருப்பத்திற்கேற்ப அவன் சிறந்ததெனப் போற்றும் செயல்களைப்பற்றிய செய்திகள் சிறப்பித்துப் பேசப்படும். அவை பெரிதும் பழமொழிகளோடு தொடர்புடையனவாக இருக்கும். அவற்றில் அறிவுறுத்தும் பண்பே முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கும்.[4]

என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற பொழுது, திருக்குறளில் பழமொழிகள் இடம் பெற்றுள்ளமை புலனாகிறது.

முப்பாலே முதுமொழி

திருக்குறளுக்குப் பன்னெடுங் காலமாக வழங்கிவரும் பல பெயர்களுள் 'முதுமொழி' என்பதும் ஒன்று. திருக்குறளைச் செய்யுளின் பிற்பகுதியில் வைத்து, இயற்றப்பட்ட வெண்பா நூல்களில் 'முதுமொழி மேல் வைப்பு', 'சோமேசர் முதுமொழி வெண்பா' என்னும் இரண்டு நூல்களின் பெயர்களிலும் உள்ள "முதுமொழி' என்னும் சொல், திருக்குறளைக் குறித்து நிற்கின்றது. இதைப்போன்றே, 'பழமொழி' என்னும் பெயராலும் திருக்குறள் சுட்டப்படுவதுமுண்டு. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர்,

திருவள்ளுவ தேவர் வாய்மையென் கின்ற
பழமொழியை ஓதி யேயுணர்ந்து (திருப். திருச்செந். 48)

என்று வள்ளுவர் தந்த முப்பாலினைப் 'பழமொழி' யென்று போற்றியுள்ளார். 'சிவசிவ வெண்பா' என்னும் நூலின் ஆசிரியர் திருக்குறளை,

கவிஞர் இயற்
பண்பால் உரைத்த பழமொழிமுன் ஈதுமொரு
வெண்பா வெனவிளங்க வே (சிவ. 3)

என்று பாராட்டியிருப்பதும் இங்குக் கருதத்தக்கது.

---

4 மு.கு.நூ.பக்.22

இல்விலக்கிய வழக்குகள் யாவும், திருக்குறளுக்கும் பழமொழிக்கும் இடையே உள்ள தொடர்பினைக் கோடி காட்டுகின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டு திருக்குறளை ஆய்வோமானால், எண்பதுக்கு மேற்பட்ட பழமொழிகள் நூலுள் வாழ்வு பெற்றுள்ளமை புலனாகும்.

அவற்றைப் பின்வரும் தலைப்புகளில் நாம் அடக்கலாம்

அடக்கம்

1. அடக்கம் அமரருள் உய்க்கும் (121)

அருள்

2. அருளென்னும் அன்பீன் குழவி (757)

அழுகை

3. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் (659)

அறிவு

4.மெய்ப்பொருள் காண்பது அறிவு (355, 423)

5. அறிவுடையார் எல்லாம் உடையார் (430)

இறந்தார்

6. ...வையத்து

இறந்தாரை எண்ணிக் கொண்டற்று (22)

7. செத்தாருள் வைக்கப்படும் (214)

உலகம்

8.வான்நோக்கி வாழும் உலகெலாம் (542)

9. பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் (996)

உழவர்

10. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் (1033)

உள்ளம்

11. உள்ளினும் உள்ளம் சுடும் (799, 1207)

ஊதியம்

12.முதலிலார்க்கு ஊதியம் இல்லை (449)

ஊழ்

13. ஊழிற் பெருவலி யாவுள? (380)

கடன்

14. கடனென்ப நல்லவை எல்லாம் (981)

கண்

15. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் (575)

16. எழுதுங்கால் கோல்காணாக் கண் (1285)

கண்ணீர்

17. அழுத கண்ணீரன்றே

செல்வத்தைத் தேய்க்கும் படை (555)

கயவர்

18. அறைபறை அன்னர் கயவர் (1076)

19. ஈர்ங்கை விதிரார் கயவர் (1077)

கவரிமான்

20. மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் (969)

காக்கை

21. பகல் வெல்லும் கூகையைக் காக்கை (481)

22.காக்கை கரவா கரைந்துண்ணும் (527)

காமம்

23. காமம்போல்

கண்டார் மகிழ்செய்தல் இன்று (1090)

24. கள்ளினும் காமம் இனிது (1201)

25.கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு (1201)

26.மலரினும் மெல்லிது காமம் (1289)

27. சுனியும் கருக்காயு மற்று (1306)

காயும் கனியும்

28.கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (100)

29. அச்சமே கீழ்களது ஆசாரம் (1075)

கூற்று(வன்)

30. உப்புக்கும் காடிக்கும் கூற்று (1050)

கேணி

31. தொட்டனைத் தூறும் மணற்கேணி (396)

கேள்வி

32. கற்றில னாயினும் கேட்க (414)

கை

33. தொழுத கையுள்ளும் படையொடுங்கும் (828)

கொல்லாமை

34. கொல்லா நலத்தது நோன்மை (984)

சாதல்

35. சாதலின் இன்னாதது இல்லை (230)

26. உறங்குவது போலும் சாக்காடு (339)

37. சாக்காடு

இரந்துகோள் தக்கது உடைந்து (780)

கடுசொல்

38. ஆறாதே

நாவினால் சுட்ட வடு (129)

செல்வம்

39. பெருஞ் செல்வம்

பேஎய்ண்கண் டன்னது உடைத்து (565)

40 செல்வரை

எல்லாரும் செய்வர் சிறப்பு (752)

சொல்லுதல்

41.சொல்லுதல் யார்க்கும் எளிய (664)

தாய்

42. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்... தாய் (69)

தீ

43.அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க (691)

44.எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் (896)

தீயவை

45. தீயவை

தீயினும் அஞ்சப்படும் (202)

துன்பம்

46. துன்பத்திற்கு யாரே துணையாவார் (1299)

தெய்வம்

47. தெய்வம்

மடிதற்றுத் தான்முந் துறும் (1023)

தொழுதல்

48. கைகூப்பி

எல்லா உயிரும் தொழும் (260)

நட்பு

49. கெட்டார்க்கு நட்டா ரில் (1293)

நன்றி

50. நன்றி மறப்பது நன்றன்று (108)

நீர்

51. நீரின்றி அமையாது உலகு (20)

52. இறைப்பவர்க்கு

ஊற்றுநீர் போல மிகும் (1161)

நிலம்

53. அகழ்வாரைத் தாங்கும் நிலம் (151)

54. நிலக்குப் பொறை (570)

55. இருநிலம் தான்

தாங்காது மன்னோ பொறை (990)

நிலையாமை

56. நெருநல் உளனொருவன் இன்றில்லை (336)

நெருப்பு

57. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் (1049)

பகைவர்

58. வாள்போல் பகைவரை அஞ்சற்க (882)

59. இளைதாக முள்மரம் கொல்க (879)

புலி

60. பெற்றம்

புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று (273)

பெருமை

61. பணியுமாம் என்றும் பெருமை (978)

பொருள்

62. பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை (252)

பொன்

63. வைப்பர்

பொன் போல் பொதிந்து (155)

64. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் (267)

65. அரம்பொருத பொன்போலத் தேயும் (888)

மயிர்

66. தலையின் இழிந்த மயிரனையர் (964)

மரம்

67. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் (216)

68. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் (217)

69. நடுவூருள்

நச்சு மரம் பழுத்தற்று (1008)

மரப்பாவை

70. மரப்பாவை

நாணால் உயிர்மருட்டி யற்று (1020)

71. ஈர்ங்கண்மா ஞாலம்

மரப்பாவை சென்றுவந்தற்று (1068)

மருந்து

72. தன்நோய்க்குத் தானே மருந்து (1102)

மலர்

73. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் (595)

மறு

74. விசும்பின்

மதிக்கண் மறுப்போல் உயர்ந்து (957)

மனம்

75. மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம் (457)

76. மனநலத்தின் ஆகும் மறுமை (459)

மகளிர்

77. மனம்போல வேறு படும் (822)

முகம்

78. நெஞ்சம்

கடுத்தது காட்டும் முகம் (706)

முயற்சி

79. முயற்சி திருவினை யாக்கும் (616)

முற்பகல்

80. பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா

பிற்பகல் தாமே வரும் (319)

யானை

81. நனைகவுள்

யானையால் யானையாத் தற்று (678)

82. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் (758)

வாழ்க்கை

83. மகுந்தோ மற்று ஊனோம்பும் வாழ்க்கை (968)

வானம்

84 . வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் (1192)

இப்பழமொழிகளைக் கருத்தோவியங்கள், சிறு வடிவில் கதைகளாக வழங்குபவை, வினா வடிவில் அமைந்தவை, நயமிகு மோனைத் தொடர்கள் வீரவுணர்வை வெளிப்படுத்து பவை, நாட்டுப்புறச் சூழலுடையவை, பழக்கவழக்கத்தை உணர்த்துபவை, மனித உறவைப் புலப்படுத்துபவை என எண்வகையாக நாம் பாகுபடுத்தி விளக்கலாம்.

மேற்கண்ட பழமொழிகளுள் பெரும்பாலானவை வள்ளுவர் காலத்தில் வழக்கிலிருந்தமைக்குத் தொல்காப்பியமும் தொகை நூல்களும் சான்று பகர்கின்றன. இவற்றுள் பல பிற்காலத்தில் நிலைத்த வாழ்வைப் பெற்றுவிட்டமை பிற்கால இலக்கியங்களால் எளிதிற் புலனாகின்றன.

5. பெண்ணின் பெருமை

பெண்ணைப் போற்றும் பாவலர்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ப் பெண்ணின் பெருமையைப் பேசியவர்கள் நம் திருவள்ளுவரைப்போல உலகில் வேறு யாருமில்லை. அறத்துப்பாலில் பெண்ணின் பெருந்தக்க யாவுள? (54) என்னும் வினாவினை அவர் எழுப்பி, உலகத்தவரைச் சிந்திக்கத் தூண்டுகிறார். பின்னர் காமத்துப்பாலில் தாம் எழுப்பிய வினாவிற்குரிய விடையாகப் பெண்ணின் பெருக் தக்கது இல்! (1137) என்று அவர் அறிவிக்கிறார், 'பெருந்தக்க' என்னும் சொல்லிற்கு, "மேலான தகுதி வாய்ந்த, பெருஞ்சிறப்புடைய' என்பன பொருளாகும். வள்ளுவர், 'மனிதப் பிறவியில் பெண்ணே பெருஞ்சிறப்புடையவள்' என்பதை மிகவும் அழுத்தந் திருத்தமாகத் தெரிவிக்கிறார்.

புதுமைப் பெண்களின் தாக்குதல்

இத்தகைய உயர்ந்த நோக்கும். முன்னேற்றக் கருத்தும் லாய்ந்த வள்ளுவர், பொருட் பாலில் 'பெண்வழிச்சேறல்' என்னும் தலைப்பில் பத்துக் குறட்பாக்களை அமைத்திருப்பதைக் கண்டு சிலர் மயங்குகின்றனர்; மனக்கலக்கம் அடைகின்றனர். 'பெண் வழிச்சேறல்' என்னும் பகுதி திருக்குறவில் 91ஆவது அதிகாரமாகும். 'பெரியாரைப் பிழையாமை' என்னும் அதிகாரத்திற்கும் 'வரைவின் மகளிர்' என்னும் அதிகாரத்திரும் இடையே இவ்வதிகாரம்

இடம் பெற்றிருக்கிறது. இவ்வதிகாரத்தில் "பெண் சொல் கேளாதே! அவள் சொற்படி நடக்காதே!" என அவர் கூறுகிறார். 'திருவள்ளுவருக்குத் திடீரென பைத்தியம் பிடித்து விட்டதா?! என இக்காலப் பெண்கள் சிலர் வான் புகழ் வள்ளுவரைத் தாக்கத் தொடங்கியுள்ளனர்.

அவர்கள் தாக்குவதில் வியப்பு இல்லை! நன்றாகத் தாக்கவும், கேட்கவும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் ஒரு முறை திருக்குறளை முழுமையாகப் படித்துப் பார்த்து, வள்ளுவரின் உள்ளத்தைப் புரிந்து கொண்டால் இப்படித் தாக்கவோ, பேசவோ எந்தப் பெண்ணும் துணிவுகொள்ளார்.

நல்ல பெண்மணி

திருக்குறளின் அறத்துப்பால் தனி மனிதனுடைய வாழ்க்கையைப் பற்றிப் பேசுகிறது. அதில், தனிமனிதன் சிறந்த மனைவியோடு இல்வாழ்க்கை நடத்துவதை வள்ளுவர் மிகச் சிறப்பாகப் போற்றுகிறார். பின்னர், உலகப்பற்றுகளைத் துறந்து, தவவாழ்க்கை வாழ்வதற்குரிய வழி வகைகளை அவர் காட்டுகிறார்.

இல்வாழ்க்கையில் ஈடுபடும் பெண்ணிற்குரிய சிறப்புகளைத் தெளிவாக அவர் விளக்கியுள்ளார். 'நல்ல பெண்மணி யார்?" என்று கேட்டால், 'கற்பு நெறியில் தன்னையும் காத்துக் கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றித் தகுதியமைந்த புகழையும் காத்து, உறுதி தளராமல் வாழ்கின்றவளே (நல்ல) பெண்' என அவர் பதில் சொல்லுகிறார்.

தற்காத்துக் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள் 56)

பெண்ணிற்கு அடிமை

இவ்வாறு, பெண்ணின் பெருமையைப் பேசும் வள்ளுவர் பொருட்பாலில் 'பெண்ணை நம்பாதே! அவளுக்கு அடிமையாகாதே! எனக்கூறலாமா?' என்பதே நாம் தெளிவுபெற வேண்டிய சிக்கலான கேள்வியாகும். பொருட்பால், தனிமனிதன் பலரோடு சேர்ந்து பழகி, நாட்டின் நன்மைக்காக எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது. தனிமனிதன் சமுதாயத்தில் எவ்வாறு ஒழுகவேண்டும் என்பதை அது விரித்துரைக்கிறது. பொருட்பாலில் நாடாளும் அரசனுக்கும் அவனுக்குற்ற துணையாக இருக்கும் அமைச்சர், தூதர், ஒற்றர் போன்றோருக்கும் வழிகாட்டியாக விளங்கக்கூடிய செய்திகளே பேரளவிற்கு வள்ளுவரால் விளக்கப்பட்டுள்ளன.

ஆனால் அவை தனிமனிதனுக்கும் பொருந்தக் கூடியன. ஆனால், சிறப்பாகப் பொதுவாழ்க்கையில் ஈடுபடும் மக்களுக்கும் தலைவர்களுக்கும் கூறப்படும் அறிவுரைகளாக அவை அமைந்துள்ளன. நாடாளும் தலைவனோ, பொது வாழ்க்கையில் பணியாற்றும் தொண்டரின் தலைவனோ. நாட்டிலுள்ள பெரியோர்களைப் பழித்துப்பேசிப் பகைத்துக் கொள்ளுவதால் எத்தகைய ஆக்கப் பணியையும் செய்ய இயலாது என்று இதற்கு முந்திய அதி காரத்தில் வள்ளுவர் எச்சரிக்கிறார்.

கட்டிய மனைவியைத் தவிக்கவிட்டுத் தளுக்கும் மினுக்கும் வாய்ந்த பொதுமகளிரை நாடிச் செல்பவன் செல்வத்தை இழப்பதோடு,சிந்திக்கும் சக்தியையும் இழந்து, பழியையும் பாவத்தையும் தேடிக்கொள்வான் என்று அடுத்த அதிகாரமாகிய 'வரைவின் மகளிர்' என்னும் பகுதியில் அவர் தெளிவுறுத்துகிறார்.

இவ்விரு அதிகாரங்களுக்கும் இடையில் பெண் வழிச் சேறல்" என்னும் அதிகாரத்தை வள்ளுவர் அமைத்துள்ளார். பொதுமகளிரை நாடாது. மனைவியோடு மட்டும் வாழ்வது சிறப்புடையது. ஆனால், குடும்பவாழ்க்கை விவகாரங்களில் மனைவியின் கருத்திற்கு இணங்க, ஏன்? அவள் சொற்படியே கூட நடக்கலாம் என அவர் தெரிவிக்கிறார். வீண் பகட்டுக்கும் ஆடம்பர ஆரவார வாழ்க்கைக்கும் எளிதில் இரையாகக்கூடியவள் பெண். எனவே, குறுக்கு வழிகளில் பொருளீட்டி, செல்வமும் செவ்வாக்கும் வாய்ந்த 'கவர்ச்சிமிகு' வாழ்க்கையை வாழுமாறு ஓயாது கணவனைத் தூண்டும் பெண்கள் உலகில் மிகப் பலராக உள்ளனர். அவர்களுடைய கணவன்மார் பொது வாழ்கில் ஈடுபட்டவராகவோ, நாடாளும் தலைவர்களாகவோ இருந்து, மனைவியின் சொற்படி – இல்லை! – தூண்டுதல்படி நடக்கத் தொடங்கினால் அவர்கள் நாட்டிற்கு நல்லதைச் செய்ய முடியாமல் போகும்; பெரும் பழியைத் தேடிக்கொள்ள நேரும்!

உள்ளவுரம் படைத்த ஆண்மகனாக இருந்தால், மனைவியின் தூண்டுதலுக்கோ, வற்புறுத்தலுக்கோ செவிசாய்க்க மாட்டான். ஆனால், உள்ளவுறுதியற்றவனாக இருந்தால், அல்லது 'கையும் காலும் தூக்கத்தூக்கும் (கண்) ஆடிப்பாவை'போன்று இல்லாளின் கைப்பாவையாக இருந்தால், மனைவியின் அன்பிற்கு அல்லது முரட்டுத்தனத்திற்கு எளிதில் அவன் அடிமையாகிவிடுவான். மெல்ல மெல்ல, அவள் ஆட்டும்படியெல்லாம் அவன் ஆடத் தொடங்கி விடுவான். இதையே வள்ளுவர் 'பெண்வழிச் சேறல்' எனக் குறிப்பிடுகிறார்."

ஏற்றமிகு இல்லத்தரசி

பெண்ணைக் காதலியாகக் காமத்துப்பாலில் காட்டுகிறார் வள்ளுவர். அங்கு அவனுடன் இருக்கும்போது, அவனுடைய உயிர் மூச்சாக அவள் இருக்கிறாள். அவனைப் பிரிகின்ற பொழுது, உடம்பிலிருந்து உயிர் நீங்குகின்ற பொழுது உண்டாகும் துன்பமாக அவள் தோன்றுகிறாள். இவ்வளவு நெருக்கமும் பிணைப்பும் அக்காதல் வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவை. அறத்துப்பாலில் அவள் மனைத்தக்க மாண்புடையவளாகக் காட்சி தருகிறாள்; அவளுடைய கற்பின் திறம் வியப்பூட்டுவதாக உள்ளது; அவளுடைய அன்பும் பண்புமிக்க வாழ்க்கையில் அவனுடைய உள்ளம் கரைந்துவிடுகிறது; இயைந்து விடுகிறது. இதனால் இல்லறம் நல்லறமாக ஏற்றம் பெறுகிறது. இத்தகைய இயல்புகளையுடைய இல்லத்தரசியைப் பற்றிப் பொருட்பாலில் வள்ளுவர் பேசவில்லை.

பொதுவாழ்க்கையில் மனைவி

கணவனுடைய பொதுவாழ்விற்கு – புறவாழ்விற்கு இடையூறாகத் தடைக்கல்லாக இருக்கும் மனைவியையே அவர் குறிப்பிடுகிறார். காமத்துப் பாலில் காதலனாகத் தோன்றுகின்ற ஆடவனை அறத்துப்பாலில் அறவோனாகக் காட்சிதரும் ஆண் மகனை பொருட்பாலாகிய பொதுவாழ்க்கைத் துறையில் கடமை வீரனாகச் செயல்புரிய வொட்டாது தடுக்கும் மனைவியின் சொல்லைக்கேட்டு நடப்பது அறியாமை என்பதை வள்ளுவர். அறிவுறுத்துகிறார். மற்ற இருபால்களிலும் கணவனுடைய உயிராகவும், உறுதுணையாகவும் மனைவியைப் போற்றிய வள்ளுவர். பொருட்பாலில் பொதுவாழ்விற்கு இடையூறாக நிற்கும் பெண்ணையே கடிந்து உரைக்கிறார். அங்கும்,

பெண்ணைக்கடிந்து ஏசவில்லை!பெண்ணை (மனைவியை)த் திருத்த முடியாமல், அவள் விரும்பும்படியெல்லாம் கடமையைப் பற்றிக் கவலையுறாமல் தன் வாழ்க்கையின் போக்கை மாற்றியமைத்துக் கொள்ளும் 'தலையாட்டிப் பொம்மை' யாக விளங்கும் கணவனையே வள்ளுவர் கடிந்துரைக்கிறார்

மனைவியின் அடிமையாக வாழ்வது ஒரு பெரிய பாவமா! வள்ளுவர் இவ்வகையில் பிற்போக்கான கருத்துடையவராகத் தோன்றுகின்றாரே!' என்று இன்றைய புதுமைப் பெண்கள் கேட்கின்றனர்.

குடும்ப வாழ்க்கையில், ஒருவன் மனைவிதாசனாக இருப்பதை வள்ளுவர் கடிந்துரைக்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். பொது வாழ்க்கையில் இன்பம் காரணமாக மனைவியை விரும்பி, அவள் வழியில் வாழுகின்றவர்கள், சிறந்த பயனை அடைய மாட்டார்கள்; பொது வாழ்வில் நாலு பேருக்கு நல்லனவற்றைச் செய்ய விரும்புவோர், விரும்பாதது அது. மனைவியிடம் பணித்து நடக்கும் தீய இயல்பு எப்போதும் நல்லவர்களிடத்தில் பழகும்போது நாணத்தைத் தரும்; மனைவிக்கு அஞ்சி நடுங்குகின்றவன், எப்போதும் நல்லவர்களுக்கு நன்மை செய்வதற்கு அஞ்சுவான்; மனைவியின் விருப்பம்போல் வாழ்கின்றவர்கள் நண்பர்களின் குறையைத் தீர்த்துதவ முடியாது: பெண்ணுக்கு ஏவல் செய்கின்றவர்களிடத்தில் அறம் பற்றிய நல்ல சொல்லும் காணமுடியாது; பொருள்பற்றிய பொருத்தமான செயலும் பொங்கி எழாது: இன்பம் பற்றிய இனிய செயலும் இடம் பெறாது; அவன் வாழ்க்கையே ஒரு வீண் கதையாகிவிடும். இக் காரணங்களால் கடமையுணர்வுமிக்க மனமும், அதற்கேற்ற பதவியும் உடையவர்கள் பெண்ணு(மனைவி)க்கு அடங்கி நடக்கக்கூடாது என்பது திருவள்ளுவரின் உள்ளக் கருத்தாகும்.

இதை நன்குணர்ந்தால், எந்தப் பெண்மணியும் 'வள்ளுவர் பெண்ணிற்குப் பெருமை தரவில்லை' எனக் கூற முன்வர மாட்டார் என்பது உறுதி. எனவே, பெண்ணின் பெருமையைப் பேசுவதில், பெண் குலத்தின் மாட்சியைப் போற்றுவதில் திருவள்ளுவர் உலகிற்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக விளங்குகிறார். அதே சமயத்தில், ஒரு பெண், மனைவி எனும் பதவியில் அமர்ந்த பிறகு, அவளுக்குக் கணவனாக வாய்க்கின்றவன், அவளுடைய அடிமையாக மாறிவிடுவானானால், பொதுவாழ்க்கையில் புகழ் குன்றி, பொலிவிழந்து நடமாடும் பிணமாகிவிடுவான் என எச்சரிக்கை செய்யவும்) அவர் தயங்கவில்லை.பெண்வழிச் சேறல்' எனும் அதிகாரம் இவ்வுண்மையையே உணர்த்துகிறது.

6. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள்

தமிழ் இலக்கிய உலகில். திருவள்ளுவர் தனிப்பெரும் தலைவராக விளங்குகின்றார். பண்டைத் தமிழ்ப் பாவலர்க்கும் பிற்காலத் தமிழ்ப் புலவர்க்கும் அவர் வழிகாட்டும் வான் பொருளாகத் திகழ்கிறார். இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த பெரியாரின் வாழ்க்கை வரலாறு இருள்செறிந்த ஒன்றாகத் தோன்றுகின்றது.

அவரைப்பற்றி அறிவதற்கு இன்று உதவியாக இருக்கும் கருவி ஒன்றேயொன்றுதான். அக்கருவி ஒப்புயர்வற்றது. அது வேறெம் மொழியினருக்கும் கிடைத்தற்கரிய கருத்துக் கருவூலம். அதுதான் வள்ளுவர் இயற்றியருளிய திருக்குறள். ஆனால், அந்நூலும் ஆசிரியரின் வரலாற்றைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. மண்ணகத்தில் விண்ணக வாழ்க்கை வாழ்வதற்குரிய வழிவகைகளைக் காட்டுவதே அதனுடைய நோக்கம். எனவே, அந்நூல் அறம் அருளுகின்றது; பொருள் புகல்கின்றது: இன்பம் இயம்புகின்றது. இவற்றிடையே ஆசிரியரின் உள்ளப் பண்பாட்டையும், உயர்ந்த குறிக்கோள்களையும் அது உலகிற்கு உணர்த்துகிறது.

> இந்தியாவின் சிந்தனையாளர்கள் –சிறப்பாகத் தமிழ் நாட்டு அறிஞர்கள், தாங்கள் எழுதிய நூல்களின் நிழலில் தங்கள் தனித்தன்மையை மறைத்துக் கொண்டனர். அவர்கள் தனி மனிதன் பெறும் புகழ்தனி மனிதன் ஒருவன் மட்டும் உயிர் வாழ்வதைப் போன்று பயனற்றது என்று கருதினர். தங்கள் நாட்டு இலக்கியத்துள் ஊடுருவிச் செல்லும் பொதுமை உயிராற்றல் தங்கள் நூல்களில் மிளிர்வதே தங்களுக்குச் சிறப்பெனக் கருதும் மனத்திறம் உடையவர்களாக அவர்கள் வாழ்ந்தனர்.

என்று டாக்டர் கால்டுவெல் கூறும் கருத்து, தம் திருவள்ளுவருக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

வள்ளுவர் தந்த வான்மறைக்கு 'முப்பால்' என்பதே ஆசிரியரிட்ட பெயராக இருக்கவேண்டும். அறம்–பொருள்––இன்பம் என்ற முப்பெரும் பகுப்புகளையுடையதாக இயற்றபட்டதாலேயே அதற்கு 'முப்பால்' என்ற பெயர் வழங்கத் தலைப்பட்டது எனலாம். திருவள்ளுவரின் அறத்துப்பால் உலகிலுள்ள அறநூல்கள் எல்லாவற்றுள்ளும் தலை சிறந்து விளங்குகிறது: அவர்தம் பொருள் நூல், அர்த்த சாத்திரங்கள் அனைத்திற்கும் மணிமுடியாக மிளிர்கிறது; முப்பாலில் மூன்றாம் பகுதியாகிய காமத்துப்பால், இன்ப அன்பின் வளர்ப்புப் பண்ணையாகிய இல்வாழ்க்கையில் ஈடுபடும் கருந்தொருமித்த காதலர் வையத்து வாழவேண்டிய நெறிமுறைகளை அன்பின் ஐந்தினை அடிப்படையில் அனைத்துலகும் கண்டு வியக்கத்தக்க வகையில் எடுத்துரைக்கின்றது.

திருவள்ளுவர் அறத்துப்பால். பொருட்பால் என்னும் இரண்டு பால்களை அமைத்துள்ள முறை, காமத்துப்பாலை அமைந்துள்ள முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். முதலிரண்டு பால்களும்பண்டைஉலகின்பல்லேறுபகுதிகளில் தோன்றிய அறநூல்களையும், பொருள் நூல்களையும் அமைப்பு முறையில் பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றன

அவற்றுள் உலகிற்கு என்றும், எவ்விடத்தும், எந்நிலையிலும் பயன்படத்தக்க அறம், பொருள்பற்றிய விழுமிய கருத்துகளைப் பொதுவான நெறியில் நின்று, பகுத்துப் பகுத்துரைக்கின்றார். வள்ளுவர், அவர், வாழ்க்கைக்கு இலக்கணம் கூறும் முறையில் அறம், பொருள் ஆகியவற்றின் இயல்புகளை வரையறுத்துக் கூறுகின்றார். இவ்வகையில், அவ்விருபகுதிகளும் இலக்கணம் கூறும் விதிமுறை நூல்களைப் போன்று அமைந்துள்ளன. ஆனால் காமத்துப்பால் இம்முறையிலிருந்து வேறுபட்ட அமைப்புடையது. இப்பகுதி இலக்கண நூலன்று; செஞ்சொற் கவியின்பம் கனிந்த காதல் காப்பியமாகும்.

காமத்தைப் பற்றிய இலக்கண நூல்கள் பல உலகில் இயற்றப்பட்டுள்ளன. ஆனால், அவை அனைத்தும் விதிமுறை கூறும் இலக்கண நூல்களாகவே உள்ளன. திருவள்ளுவர் அவற்றிற்கு நேர்மாறாக நாடகப் பாங்குடைய இலக்கிய முறையை இப்பகுதியில் பின்பற்றியுள்ளார். அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும், 'தம் காலத்தில் நன்கு நிலைபெற்றுவிட்ட அறநூல், பொருள் நூல் முறைகளைப் பின்பற்றித் தம் கருத்துகளை அறிவுறுத்திய திருவள்ளுவர், காமத்துப்பாலிலே புதிய தொரு முறையைக் கையாளக் காரணம் யாது?' என்னும் ஐயம் நமக்கு உண்டாகிறது.

காமத்துப்பாலினை ஆழ்ந்து கற்பின், அதற்குரிய காரணம் எளிதில் புலனாகாமல் போகாது. தமிழிற்குத் தனிச்சிறப்பு அளிப்பது அதனுடைய பொருள் இலக்கணப் பாகுபாடு. அப்பொருளும் அகம் புறமென ஆன்றோரால் ஆராய்ந்து போற்றப்பட்டுள்ளது. அவற்றுள்ளும் 'அகப்பொருள்' இலக்கணம் தமிழிற்கேயுரிய தனிச்சிறப்பு வாய்ந்தது. அதனால் தான் நம் முன்னோர்கள் பலர், அகப்பொருளை– காதல் வாழ்க்கையை விளக்கியுரைக்கும் இலக்கணத்தையும் இலக்கியங்களையுமே,'தமிழெ'னப் போற்றிப் பாராட்டியுள்ளனர்.

தள்ளாப் பொருளியல்பில் தண்டமிழாய் வந்திலார்
கொள்ளார்இக் குன்று பயன்

என்பது பரிபாடல் (9). கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டின் அடிக்குறிப்பு. 'ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடிய குறிஞ்சிப் பாட்டு' எனக் கூறுகிறது. 'இந்நூல் என்னுதலிற்றோவெனின் தமிழ்நுதலியது' என இறையனாரகப் பொருள் உரை (சூ. 1) அறிவிக்கிறது. 'இன்றமிழ் இயற்கை இன்பம்' எனத் திருத்தக்க தேவரும் (சீவக. 2063) தெளிவுறுத்தியுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும். இவ்வகப் பொருள் மரபைத் தமிழ்நெறி எனப் போற்றுவது தொன்று தொட்டு இருந்துவரும் வழக்கமாகும். இத் தமிழ்நெறி மரபினை முழுமையும் பின்பற்றித் திருவள்ளுவர் காமத்துப் பாலினை அமைத்துள்ளார்.

காமத்துப்பாலை அகப்பொருள் மரபைப் பற்றுக்கோடாகக் கொண்டு களவியல், கற்பியல் என்று இருவேறு பகுதிகளாகப் பரிமேலழகர் பாகுபடுத்தியுள்ளார். இதற்கு மாறாகத் திருவள்ளுவ மாலைச் செய்யுளை (27) அடியொற்றி, காமத்துப் பாலைக் கூற்று வகைப்படுத்தி ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று, இருபாற்கூற்று என்று காளிங்கர் பிரித்துக் காட்டுகிறார் மணக்குடவர் அன்பின் ஐந்திணை யடிப்படையில் சிறப்புமிக்க உரிப்பொருளாகிய புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல் என்னும் ஒழுகலாறுகளாகக் காமத்துப்பாலின் அதிகாரங்களை அடைவுபடுத்திச் செல்லுகிறார். இம் மூவகைப் பாகுபாடும் அறத்துப்பால், பொருட்பால் அமைப்புகளிலிருந்து காமத்துப்பால் வேறுபட்ட அமைப்பினையுடையது என்பதை அறிவிக்கின்றன .

இதனால் காமத்துப்பால் பண்டை அகப்பொருள் இலக்கியங்களின் பிழம்பாகத் திருவள்ளுவரால் இயற்றப்பட்டிருக்கிறது என நாம் உறுதியாகக் கூறலாம். அகப்பொருள் இலக்கியத்தில் இடம் பெறுபவருள் முதன்மையானவர்கள்தலைவன்,தலைவி,தோழிஎன்பவராவர். எனவே, அம்மூவரின் கூற்றுகளாகவே, உணர்ச்சித் துடிப்பும் பொருட்செறிவும் பொதிந்த வகையில் நாடகக்கலையின்

நயம் திகழுமாறு காமத்துப்பால் இயற்றப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம்.

காமத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் வைப்பு முறையும், அவற்றின் பெயர்களும் காதல் வாழ்க்கையில் ஈடுபட்ட காதலரின் உள்ள உணர்ச்சிகளையும், மனவியல்புகளையும் கருத்தாழமிக்க சில சொற்களால் தெளிவுறுத்தும் சிறப்புடையன.

அவற்றுள்,

(1) குறிப்பறிதல் – குறிப்பறிவுறுத்தல்

(2) புணர்ச்சி மகிழ்தல்– புணர்ச்சி விதும்பல்

(3) நாணுத்துறவுரைத்தல்–நிறையழிதல்,

(4) புலவி – புலவிநுணுக்கம்–ஊடலுவகை

என்னும் அதிகாரங்கள் எவ்வாறு காதலரின் உள்ளார்ந்த உணர்ச்சிகளையும், இன்ப அன்பின் ஏற்றத்தையும் கருத்தோவியங்களாகக் காட்டுகின்றன என்பதைக் காண்போம்.

திருக்குறளின் காமத்துப்பாலினைப் பரிமேலழகர் களவியல் கற்பியல் என்று பாகுபடுத்தியுள்ளார். அப்பாகுபாட்டை நம்முடைய ஆராய்ச்சிக்கு அடிப்படையாகக் கொள்ளலாம்.

காதலர் உள்ளக் கருத்து !

முதலாவதாகக் 'குறிப்பறிதல்–குறிப்பறிவுறித்தல்' என்னும் அதிகாரங்களின் அமைப்பையும், அழகையும் காண்போம். களவியலில் 'குறிப்பறிதல்' என்னும் அதிகாரமும், கற்பியலில் 'குறிப்பறிவுறுத்தல்' என்னும் அதிகாரமும் இடம் பெற்றுள்ளன. 'குறிப்பறிதல்' என்பது காமத்துப்பாலில் = 'தகையணங்குறுத்தல்' என்னும் அதிகாரத்திற்கும், 'புணர்ச்சி – பகிழ்தல்' என்னும் அதிகாரத்திற்கும் இடையில் வைக்கப்பட்டிருக்கிறது.

காதலர் இருவர் அடையும் காட்சி, ஐயம், தெளிவு என்ற மூவகை மெய்ப்பாடுகளைத் 'தகையணங்குறுத்தல்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் காட்டுகிறார். அவ்வதிகாரத்தின் இறுதியிலுள்ள,

பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணியெவனோ ஏதில தந்து (குறள் 1089)

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று (குறள் 1090)

என்ற இரண்டு குறட்பாக்களும் 'தெளிவு' என்னும் அகப்பொருள் கிளவியைச் சேர்ந்தனவாகும்.

தெளிவுற்ற காதலருள் ஒருவர். மற்றெருவரின் உள்ளக் குறிப்பினை அறிய முயலுகின்றனர். பெரிதும் தலைவனே, தலைவியின் உள்ளக் குறிப்பினை அறிவதற்குத் துடிப்பது இயற்கையாகும்.

அச்சமும் நாணும் மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப (தொல். களவு, 8)

என்பது தொல்காப்பியர் கருத்து. அச்சம், நாணம், மடம் ஆகிய பண்புகள் பெண்ணிற்குரியனவாகக் கூறப்படுவதால் தலைவி தலைவனுடைய உள்ளக்கருத்தை அறிய முயலுவதாகச் சொல்ல இயலாது. மேலும், 'பெருமையும் உரனுமு'டை (தொல். களவு 7) தலைவன் தன் குறிப்பை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவும் முடியும். எனவே, ஆண்மகனே தலைவியின் உள்ளக்கருத்து என்னவென்பதை அறிய முயலுவது இயற்கை

குறிப்பறிதல் என்னும் அதிகாரத்தின் முதல் எட்டுப் பாக்களில் தலைவன் தலைவியின் உள்ளக்கருத்தை உணர்ந்து போற்றுகின்றான். ஒன்பதாவது, பத்தாவது குறட்பாக்கள் தலைவன் தலைவியரைப் பற்றித் தோழியின் பொதுவான கருந்தினை வெளியிடுகின்றன.

'பிறர் கருதியதனை அவர் கூறாமல் அறிதலே' குறிப்பறிதலாகும். குறிப்பு என்னும் சொல்லிற்குக் 'கருத்து' என்பது பொருளாகும். இதனைத் தலைமகன் தலைமகள் குறிப்பினை அறிதலும், தோழி குறிப்பினை அறிதலும், அவள் தான் அவ்விருவர் குறிப்பினையும் அறிதலுமாம்' என்று பரிமேலழகர் வரைந்துள்ள விளக்கவுரையாலும் நாம் தெளியலாம்.

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும் (தொல். களவு 5)

என்னும் தொல்காப்பியர் கருத்திற்கிணங்க, அண்ணலும் அவளும் நோக்கெதிர் நோக்கும் நிலைகளைக் 'குறிப்பறிதல்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் சொல்லோவியங்களாகத் நீட்டிக் காட்டுகிறார்.

முதல் ஐந்து குறட்பாக்கள் தலைவன், தலையியின் கடைக்கண்பார்வையைக் கண்டு, மகிழ்ந்து, வியந்து பாராட்டு வனவாக அமைந்துள்ளன. எடுத்த எடுப்பிலேயே, "இவள் கண்ணில் இருபார்வை உண்டு; ஒன்று நோய் செய்வதாகும்; மற்றொன்று அந்நோயினை நீக்கும் மருந்தாகும்" (குறள் 1091) என்று உணர்ந்த தலைமகன், அந்நோக்கத்தின் சிறப்பை,

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று; பெரிது. (குறள். 1092)

என வியந்து போற்றுகிறான்.

தலைவி நாணத்தாலும் மகிழ்ச்சியாலும் தன் உள்ளக் குறிப்பினைத் தன் பார்வையின் மூலம் தலைவனுக்குச் சொல்லாமல் சொல்லிவிடுகிறாள். இதனை, 'நோக்கும்போது அவள் நிலத்தைப் பார்ப்பாள்; பாராக்கால் என்னைப் பார்த்துப் புன் முறுவல் பூப்பாள்' (குறள். 1094) என்று தலைவன் கூறி மகிழுகிறான். இக் குறிப்பறிதலின் உயிர்நாடியாக அமைந் திருப்பது,

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும் (குறள். 1095)

எனும் குறட்பாவாகும். இதனுள், 'குறிக்கொண்டு நோக்காமை' எனும் தொடர் இடம் பெற்றிருப்பது இங்குக் கருதத்தக்கதாகும். இத்தொடருக்கு என்ன பொருள்? குறிக்கொண்டு நோக்குதல் என்பதற்குப் பார்க்கவேண்டும் என்ற எண்ணத்தோடு பார்த்தல் என்பது பொருளாகும். குறிக்கொண்டு நோக்காமை' என்பதற்குப் 'பார்க்க வேண்டும் என்னும் உட்குறிப்புடன் நோக்காமல்' தற்செயலாக நோக்குவது என நாம் பொருள் கூறலாம். இதற்கு 'நேராகப் பார்க்கவில்லை' என்றும் பொருள் கூறுவர். இதனால் தலைவன் " அவள் என்னை நேராகப் பார்ப்பதில்லை; என்னைப் பாராதவள்போல் கீழ்நோக்கால் நோக்கித் தனக்குள்ளே மகிழ்ந்து கொள்ளுகிறாள்" எனக் கூறுகின்றான். தலைவியின் இச்செயலால், ஒரு கருத்தைத் தலைவன் குறிப்பாகப் புரிந்துகொள்ள முடிகிறது தலைவியும் தலைவனை அடைய விரும்புகிறாள் என்பதே அக்குறிப்பாகும். இதனால், இனி அவளை அடைவது உறுதி எனும் எண்ணம் தலைமகன் உள்ளத்தே எழுகிறது. இதுதான் தலைவன் தலைவியிடம் குறிப்பறிதலாகும். எனவே காதலர் புணர்ச்சியில் விருப்பம் உடையவராய் இருத்தலைக் குறிப்பாய் அறிதலே குறிப்பறிதல் என்பதன் பொருளென நாம் கூறலாம்.

இவ்வாறு தலைவனும் தலைவியும் புணர்ச்சிக்கு உடன் பட்டதைக் குறிப்பாக அறிந்து கொண்ட தோழி,

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல (குறள். 1100)

என்னும் சொற்களால் தெரிவிக்கின்றாள்.

பின்னர் அவர்கள் கூடி மகிழ்ந்தனர் என்பதைக் 'குறிப்பறிதல்' என்னும் அதிகாரத்தை அடுத்து, 'புணர்ச்சி மகிழ்தல் என்னும் அதிகாரத்தை வள்ளுவர் அமைத்திருப்பதனால் நாம் அறிகிறோம். ஆகவே தலைவியின்

குறிப்பறிந்த தலைமகள் அவளைக் கூடியின்புற்றான் என்பது பெறப்படுகிறது. இதனால் 'குறிப்பறிதல்' என்னும் அதிகாரத் தலைப்பு, தலைமகன் தலைவியின் உடன்பாட்டைக் குறிப்பாக அறிதலையே குறிக்கிறது எனலாம்.

ஆனால்,குறிப்பறிவுறுத்தல்'என்னும்அதிகாரம்கற்பியலில் இடம் பெற்றிருக்கிறது. 'அவர் வயின் விதும்பல் என்னும் அதிகாரத்திற்குப் பின்னரும், 'புணர்ச்சி விதும்பல்' என்னும் அதிகாரத்திற்கு முன்னரும் இவ்வியல் காணப்படுகிறது. இது பிரிந்து சென்ற தலைமகன், திரும்பிவந்து கூடிய விடத்து நிகழ்வது, தலைவன், தலைவி, தோழி ஆகிய மூவருள் ஒருவர், தம் குறிப்பினை மற்றொருவருக்கு அறிவுறுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அதிகாரம் இது.

களவியலில் கண்டது குறிப்பறிதல், இங்குக் காண்பது குறிப்பு அறிவுறுத்தலாகும். தானாக அறிவது குறிப்பறிவது. பிறரால் அறிவுறுத்தப்படுவது 'குறிப்பறிவுறுத்தல் என்பதை நாம் கருத்தில் இருத்தி, இவ்வாதிகாரத்திலுள்ள குறட்பாக்களை நோக்குவோம்.

முதல் குறட்பாவில் தலைவன் தன் காதலியை நோக்கி, 'நீ என்னிடம் மறைத்தாலும், அதைமீறி உன் கண்கள் ஏதோ ஒன்றை எனக்குச் சொல்லுகின்றன' என்னும் கருத்தமைய,

கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்க லுறுவதொன்று உண்டு (குறள் 1271)

எனக் குறிப்பிடுகின்றான். அவ்வாறு கண்கள் கூறும் செய்தி யாது? தலைவனைப் பிரிந்த தலைலி, வழிமேல் விழிவைத்து அவன் வரவை எதிர்பார்த்துப் பார்த்து ஏமாற்றம் அடைந்து விட்டாள். இதனால், அவள் கண்கள் ஒளி குன்றிப்போய் விட்டன என்ற செய்தியை இதற்கு முந்திய அதிகாரத் தொடக்கத்தில் 'வாளற்றுப் புற்கென்ற கண்' (குறள் 1261) என்னும் தொடரால் வள்ளுவர் அறிவித்துள்ளார். அச்செய்தியை, இந்த அதிகாரத்தில் தலைவியின் கண்கள் தலைவனுக்குக் குறிப்பாக அறிவுத்துவதாக நாம் கொள்ளலாம்.

அடுத்துள்ள நான்கு குறட்பாக்கள் (இரண்டு முதல் ஐந்து முடிய) தோழியிடத்துத் தலைவியின் நலத்தைத் தலைவன் பாராட்டியுரைப்பதாகும். மணிமாலையுள் நூல்தெரிவதுபோல மங்கையின் அழகில் ஒரு குறிப்புத் தெரிகிறது (குறள் 1273) என்றும். மொட்டுக்குள் மணம் இருப்பதுபோல இவள் சிரிப்புக்குள் ஒரு குறிப்பு உண்டு (குறள் 1274) என்றும், வளை நிறைந்தவள் செய்துபோன கள்ளச் செயலில் துன்பத்தைத் தீர்க்கும் மருந்து உண்டு என்றும், தலைவியின் உடல் உறுப்புகளும், மெய்ப்பாடும் ஒரு குறிப்பைத் தனக்கு அறிவுறுத்துவதாகத் தலைவன் கருதுகிறான். அதைத் தோழியிடத்தில் அவன் தெரிவிக்கின்றான்.

பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு (குறள். 1280)

ஆறு,ஏழு,எட்டாம்குறட்பாக்களில்தலைமகனின்உள்ளக் குறிப்பை அறிந்த தலைமகள் தலைவன் தன்னைப் புகழ்ந்து பேசுவதும், பாராட்டியுரைப்பதும், அவன் மீண்டும் தன்னை விட்டுப் பிரிந்து செல்லப் போகிறான் என்னும் குறிப்பை உணர்த்துவதாகத் தோழிக்கு அறிவுறுத்துவனவாகும். இதனை "மிக அன்பு காட்டி ஆசையாகக் கூடுவதில், பிரியும் கொடுமைக் குறிப்பு உண்டு" (குறள் 1276) என அவள் குறிப்பிடுவதால் நாம் அறியலாம். தலைவியின் மன வருத்தத்தையும், அச்சத்தையும் அறிந்த தோழி, அதைத் தலைவனிடம் சொல்லுவதாக ஒன்பதாவது குறட்பா அமைந்துள்ளது. உடனே தலைவன். தான் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லப்போவதில்லை என்பதைத் தலைவி தனது காம நோயைக் கண்ணினால் தெரிவித்துப் பிரியாமல் இருக்குமாறு வேண்டுதல் சிறந்த பெண் தன்மையாகும்' என்பதன் மூலம் தோழிக்குத் தெரிவிக்கின்றான்.

இவ்வதிகாரத்தின் தொடக்கத்தில் தலைவியின் கண்கள் உரைக்கும் செய்தி (உண் கண் உரைக்கலுறுவது)ஒன்று

உண்டு என்று குறிப்பிட்ட தலைமகன், இறுதிக் குறளில் தலைவி, தன்'கண்ணினால் காமநோய்சொல்லிவேண்டுகிறாள் என்பதைத் தெரிவிக்கின்றான். எனவே. 'குறிப்பறிவுறுத்தல் என்னும் அதிகாரம் "தலைவி, "ஐயா! என்னைத் தனியே விட்டுப் பிரிந்து செல்லாதீர்! சென்றால் நான் உயிர் வாழேன் என்று அறிவிப்பதைக் கருப்பொருளாகக் கொண்டிருக்கிறது விரைவில் கூடி இன்புறத் துடிக்கும் தலைவி தலைவன் ஆகியோர் மனநிலையைச் சித்திரிக்கும் 'புணர்ச்சி' விதும்பல் என்பது, இதை அடுத்துள்ள அதிகாரமாகும். கண்ணினால் காமநோயை அறிவுறுத்திய தலைமகள், தலைவனைக் கூடி இன்புறத் துடிக்கும் துடிப்பை அடுத்த அதிகாரம் கூறுவது. சாலவும் பொருத்தமுடையதாகும்.

இவ்விளக்கத்திலிருந்து நாம் அறியக்கூடிய உண்மை யாதெனில், களவியலில் உள்ள 'குறிப்பறிதல்' என்னும் பகுதியில் தலைவனும் தோழியும் தனித் தனியே தலைவியின் உள்ளத்தெழும் காதல் குறிப்பைக் கண்டறிவதையும், பொதுவாகக் காதலரிடையே எழும் புணர்ச்சிக் குறிப்பையும் ஆசிரியர் கலையழகுடன் விளக்கியுள்ளார் என்பதாகும்.

'குறிப்பறிவுறுத்தல்' என்னும் அதிகாரத்தில், கற்பொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன், தலைவி ஆகிய இருவரிடையேபிரிவிற்குப்பின்னர்க் கூடுதல்நடைபெறுகிறது. அப்பொழுது தலைவியைத் தலைவன் பாராட்டுகிறான். அவள் வாய்திறந்து அதிகமாகப் பேசவில்லை. எனினும், அவள் கண்கள் 'காமநோய் சொல்லித் தலைவனை மீண்டும் பிரிந்து செல்லவேண்டா என வேண்டுகின்றன. இச்செய்திகளை இவ்வதிகாரத்தில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றார் வள்ளுவர்.

மகிழ்ச்சியும் விருப்பமும்

'புணர்ச்சி மகிழ்தல்' என்னும் அதிகாரம் களவியலில், குறிப்பறிவுறுத்தலுக்குப் பின்னும், நலம் புனைந்துரைத்தலுக்கு

முன்னும் அமைக்கப்பட்டுள்ளது. தலைவியின் உள்ளக் குறிப்பை உணர்ந்து, அவளைக் கூடியின்புற்ற தலைமகன், அப்புணர்ச்சியினை மகிழ்ச்சியோடு போற்றிப் பாராட்டுவதாக இவ்வதிகாரம் அமைக்கப்பட்டுள்ளதைக் காணுகின்றோம். இவ்வதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களும் தலைவனுடைய கூற்றுகளாக உள்ளன. இங்குப் 'புணர்ச்சியில் மகிழ்தல் என்னும் மெய்ப்பாடு தலைமகள் மாட்டு நிகழாதா?" எனும் கேள்வி எழலாம். அவளுக்கும் இது 'ஒக்கும். ஆனால், அவள் தன் மகிழ்ச்சியைக் குறிப்பாகப் புலப்படுத்துவாளே அல்லாமல் வெளிப்படையாகச் சொற்களால் சொல்லமாட்டாள். அப்படிச் சொல்லுவது அவளுடைய பெண்மைப் பண்பிற்கு இழுக்காகும்.

தலைவன் ஒளிபொருந்திய வளையலணிந்த தலைவியிடத்து கண்ணால் கண்டும், காதால் கேட்டும், நாவால் சுவைத்தும், மூக்கால் மோந்தும், மெய்யால் தொட்டும் அனுபவித்த ஐம்புல இன்பத்தை எண்ணி மகிழ்கிறான். இதனை,

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள (குறள்.1101)

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். இக் கூற்றுப் பெரிதும் தலைமகன் தலைவியைக் கூடி இன்புற்றதும் கூறியதாக இருக்க வேண்டும் என்ற கருத்தில், இதனை 'இயற்கைப் புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது' என்று உரையாசிரியர்கள் கூறுவர்.

அவளிடத்து, அவன் பெற்ற இன்பம் எத்தகையது என்பதை அவனே கூறுகிறான். 'நூல்களை ஊன்றிப் படிக்குந் தோறும், முன்பு தமக்கு இருந்த அறியாமையை உணர்ந்து கொள்ளுவதுபோன்று, சேயிழையாளைச் சேருந்தோறும். அவள் காதல் பெருக்கால் புதுமையாய் மேன்மேலும் மிகுந்த இன்பம் தருவதை உணரமுடிகின்றது' எனத் தலைவனே மொழிகின்றான்.

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு (குறள். 1110)

'புணர்ச்சி விதும்பல்?' என்னும் அதிகாரம் கற்பியலில் குறிப்பறிவுறுத்தலுக்குப் பின்னும், நெஞ்சோடு கிளத்தலுக்கு முன்னும் இடம் பெற்றுள்ளது. தலைவனும் தலைவியும் புணர்ச்சிக்கண்ணே விரைதல் என்பது இதன் பொருளாகும். மேல் அதிகாரத்தில் புணர்ச்சி வேட்கை மிகுதிபற்றித் தலைமகன் பிரிதல் குறிப்பினைத் தலைவி அறிவுறுத்தினாள். அந்நிலையில் வேட்கை மிகுந்தமையால் ஆசைகளைத் தோழியிடத்து முதல் ஏழு குறட்பாக்களில் தலைவி எடுத்துரைக்கின்றாள். இதனால் குறிப்பு அறிவுறுத்தலின் பின்னர் இவ்வதிகாரம் அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

இவ்வியலில், தலைவன், தலைவி, தோழியாகிய மூவருடைய கூற்றுகளும் இடம் பெற்றுள்ளன. முதற்பகுதியில் தலைவி, தன் வேட்கையை எடுத்துரைக்கின்றாள், நினைத்த அளவில் களிப்புறுதலும், கண்ட அளவில் மகிழ்ச்சி அடைதலும் கள்ளினைக் குடிப்பார்க்கு இல்லை, ஆனால், காதல் இன்பத்தில் மூழ்கித் திளைப்பார்க்கு உண்டு (குறள் 1281) எனக் கூறத்தொடங்கிய தலைவி, தலைவன்மீது தனக்குண்டாகும் மன வருத்தத்தை விளக்குகிறாள்.'மைதீட்டப் படும்போது மைதீட்டும் கோலைக் கண் உணராததுபோலக் கணவனைக் கண்டபோது, அவரைக் காணாதபோது நினைத்திருந்த குற்றங்களுள் ஒன்றையும் நான் காணமாட்டேன்' என்று அவள் சொல்லுகிறாள்.

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து (குறள் 1285)

இவற்றையெல்லாம் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த தோழி, தலைவன் வந்தவுடன் 'கள்ள உள்ளம் உடையவரே! இழிவு தரத்தக்க கெடுதிகள் எவ்வளவு செய்தாலும் கள்ளுண்டவர்கட்கு அந்த கள்ளின்மீது மேன்மேலும் விருப்பம் செல்லுதல்போல் உம்முடைய மார்பு

'தலைவிக்கு மேன்மேலும் விருப்பத்தைத் தருகிறது' (குறள் 1288) என அறிவிக்கின்றாள். அதைக் கேட்ட தலைமகன் உண்மையை உணர்ந்து கொள்ளுகின்றான்; உடனே தலைவியின் ஊடலைத் தீர்க்கமுற்படுகிறான். எனவே, தன்னுடைய தவற்றை உலகின் மீது ஏற்றி, 'காம இன்பம் மலரைக் காட்டிலும் மென்மையுடையது. அவ்வாறு அது மென்மையுடையதாய் இருத்தலை அறிந்து அதன் நல்ல பயனைப் பெறக்கூடியவர்கள் உலகத்தில் சிலரேயுள்ளனர்' என அவன் (குறள் 1289) குறிப்பிடுவதோடு அமையாது, அன்றொருநாள், 'தலைவி தழுவுவதற்குத் தன்னைவிட அதிகமாகத் துடிதுடித்துக் கண்களால் ஊடிக் கலங்கியதை (குறள் 1290) நினைவுபடுத்துகிறான்.

இவ்வாறு 'உணர்ச்சியின் வாரா ஊடலோடு* இவ்வதிகாரம் முடிகின்றது. இதனால்தான் இதனைக் கவிரா பண்டிதர் 'மருத நிலம்' என்று குறிப்பிட்டார் போலும் இங்குப் புணர்ச்சி வேட்கை ஊடலாக முடிகின்ற காட்சியைக் காட்டுகிறார் வள்ளுவர். ஆகவே 'புணர்ச்சி மகிழ்தல், களவொழுக்கத்தில் உள்ளப் புணர்ச்சிக்குப் பின்னர் நடைபெற்ற மெய்யுறு புணர்ச்சியின் மாட்சியையும், தலைவியின் மெல்லிய இயல்பையும், இன்பம் தங்கும் இனிய பண்பையும் தலைவன் மகிழ்ச்சியோடு பாராட்டுவது எனக் கூறலாம். நெடுநாள்கள் பிரித்திருந்த காதலர் பின்னர்க் கூடியின்புற்றனர். அவர்கள் கலந்து உரையாடுகின்றபொழுது, மீண்டும் தலைவன் பிரிவான் என்னும் குறிப்பு வெளிப்படுகிறது. அதையுணர்ந்த தலைவி, கூடியின்புற விழைந்தாலும் ஊடல் கோலம் கொள்ளுகிறாள். அவள் ஊடலைப்போக்கிக் கூடிமகிழ முயல்கிறான் தலைவன். இவ்வாறு தலைவன் தலைவியர் விரைவில் புணர்ந்து இன்புறத்துடித்தலை, 'புணர்ச்சி விதும்பல்' என்ற அதிகாரத்தின் வாயிலாக வள்ளுவர் உணர்த்துகின்றார்.

மகளிர்க்கு இயற்கையாக உள்ள பண்புகளுள் முதன்மை யானதாக நாணம் போற்றப்படுகிறது. ஆண்களுக்கும்

'நாணும்' பண்பு வேண்டும் என்பதைப் பொருட்பாவில் 'நாணுடைமை' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். மக்களாகப் பிறந்த அனைவருக்கும் 'நாணம்' பொதுவான பண்பு என்பது அவருடைய கருத்து. உணவும், உடையும் அவை போல்வன பிறவும் எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை. மக்களுக்குச் சிறப்பாக இருப்பது நாணமே என்பதை.

ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு (குறள் 1012)

எனவள்ளுவர் குறிப்பிடுகிறார்.மாந்தருடையசிறப்புப்பண்பாகிய இந்த நாணத்திலிருந்து மகளிர்க்கு இயல்பாக அமைந்த 'நாணம்' வேறுபட்டது என்பதையும் அவர் தெளிவுறுத்துகிறார். மக்கள் செய்யத்தகாத செயல் காரணமாக நாணுவதே, நாணம் ஆகும். அஃது அல்லாத பிற நாணங்கள், அழகிய நெற்றியையுடைய பெண்களுக்கு இயல்பாக அமைந்துள்ள நாணத்துக்கே ஒப்பாகும் என்னும் கருத்தமைந்த குறட்பாவால் இதனை நாம் அறிகிறோம்.

கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற (குறள். 1011)

காமத்துப்பாலினுள் களவியலில் காதல் சிறப்புரைத்தலுக்குப் பின்னர் 'நாணுத் துறவுரைத்தல்' இடம் பெற்றிருக்கிறது. அதை அடுத்து 'அலர் அறிவுறுத்தல்' அமைக்கப்பட்டிருக்கிறது. காதல்மிக்கார்க்கு நாணம் இல்லை என்பதனால் காதல் சிறப்புரைத்தலுக்குப் பின் இவ்வதிகாரம் வைக்கப்பட்டிருக்கிறது.

நாணுத்துறவு உரைத்தலாவது, தமக்குரிய நாணத்தைத் துறந்து தலைவனும் தலைவியும் தம் எண்ணத்தை வெளிப் படுத்தலாகும். தலைவியை எளிதில் சந்திக்க இயலாத தலைவன் காதல் துன்பம் மிகுதிப்பட்ட நிலையில், தோழிக்குத்

தன் நாண் துறவு உரைத்தலும், தலைவி அறத்தொடு நிற்கக் கருதித் தன் நாணத்தைத் துறந்து தோழிக்கு உரைத்தலுமாகும்.

தலைவியைக் கூடவேண்டும் என்று துடிக்கும் தலைவன், 'காமத்தால் துன்புற்றுக் காதலியின் அன்பைப் பெறாமல் வருந்தினவர்களுக்குப் பாதுகாப்பு, மடல் ஏறுதல் அல்லாமல் உறுதியான ஆதரவு வேறொன்றும் இல்லை' எனத் தன் துன்பத்தை உலகின்மீது ஏற்றிக் கூறுகிறான்.

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி (குறள். 1131)

இங்குத் தலைவன், தன் பெருமையும் பீடும் கெடுவதற்குக் காரணமான காமநோயால், தான் வருந்துவதைக் குறிப்பாகத் தோழியிடத்துத் தெரிவிப்பதைப் பார்க்கிறோம். இனியும் தலைவியைச் சந்திக்க முடியாது என்றால், உயிர் வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே மேல் என்னும் தன் எண்ணத்தை அவன் எடுத்தியம்புகிறான்.

தலைவியோ, தலைவனைச் சந்திக்க முடியாதபடி வீடாகிய சிறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறாள். அந்நிலையில், அவளுடைய உள்ளம் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகி அல்லற்படுகிறது. இவர் கற்புடையராதாலின் வெளிப்பட்டு இவரை வெல்லுதல் அரிது என்று அஞ்சாமலும், இவர் இரங்கத் தக்கவர் என்று கருதி இரக்கம் காட்டாமலும் காமமானது கட்டுக்கு அடங்கி மறைந்திருத்தலைக் கடந்து அவைக்கண் வெளிப்படும்' என்று, அவள் தன்னுடைய நிலையைத் தன் ஆருயிர்த் தோழியிடம் தெரிவிக்கின்றாள்.

நிறையரியர் மன்அளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும் (குறள். 1138)

'நான் அமைதியாய் இருந்ததால் என்னை எல்லாரும் தெரிந்து கொள்ளவில்லை. எனவே, இனி நானே வெளிப்படுவேன் எனக் கருதி, என் காமம் இந்த ஊர்த்தெருவில் நின்று மயங்கிச் சுழல்கின்றது. யான் காதால் கேட்கும்படி

மட்டுமல்லாமல், கண்ணால் காணும்படியும் என்னைப் பார்த்துச் சிரித்துப் பேசுகின்றனர்' எனத் தலைவி தன் உள்ளக் குமுறலைத் தோழியிடம் கொட்டுகிறாள்.

அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு (குறள். 1139)

யாங்கண்ணிற் காண நகுக அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு (குறள். 1140)

தன்னுடைய தோழியும் தன் துன்பத்தைப் புரிந்து கொள்ள வில்லையே என்னும் வருத்தத்தால், தலைவி தன் துன்பத்தை உணராத மக்கள் எவ்வாறு தூற்றுகின்றனர் என்பதை நாணத்தைத் துறந்து தோழிக்குக் கூறுவதன் மூலம். தோழியையும் குறிப்பாகத் தாக்குகிறாள். ' நிறையெனப்படுவது மறைபிற ரறியாமை (கலி. 133) என்பது ஆன்றோர் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிக்காட்டாது அடக்கி வைப்பதே நிறையாகும். காதல் உணர்ச்சிகளால் உந்தப்பட்ட, தன் மனநோயைப் பிறருக்குக் கூறாது, தன்னுள்ளத்திலேயே அடக்கி வைத்தலாகும். இந்த உள்ளத் திண்மையைக் கற்பெனும் திண்மை' என்று வள்ளுவர் போற்றுகிறார்,

மகளிர்க்கு உயிரினும் சிறந்தது நாணம், அந்நாணத்தை விடக்குற்றமற்றதாகிய கற்புச் சிறந்தது என்பதைத் தொல்காப்பியர்,

உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று (தொல். களவு, 22)

என்று அறிவித்துள்ளார். அத்தகைய கற்பொழுக்கத்திற்கு அடிப்படையாக அமைவது 'நிறை' எனப்படுவதாகும். இத்தனைச் சிறப்பு வாய்ந்த 'நிறை'யைக் காதல் வேட்கை மிகுதிப் பட்ட தலைவி. அடக்கமுடியாமல் வாய்விட்டுக் கூறி அரற்றுவது'நிறை அழிதல்' என்பதாகும். பலநாள்களாக அடக்கி வைத்திருந்த உள்ளத்து உணர்ச்சிகள், கட்டுக்கடங்காமல் பீறிட்டுக் கொண்டு வெளிக்கிளம்புவதை 'நிறை அழிதல்* என

வள்ளுவர் குறிப்பிடுகிறார். நிறை அழிதல் என்னும் அதிகாரம், கற்பியலில் 'நெஞ்சோடு கிளத்த'லுக்குப் பின்னரும், அவர்வயின் விதும்பலுக்கு' முன்னரும் வைக்கப்பட்டிருக்கிறது. தலைவி மனத்தின்கண் அடக்கப்படுவனவற்றை ஆசை மிருதியால் அடக்கமாட்டாமல் வாய்விட்டுச் சொல்லுதல் நிறை அழிதலாகும். அந்நிறை அழிதற்குக் காரணம் நெஞ்சோடு முதலில் கூறினமையால், இது நெஞ்சோடு கிளத்தலின் பின் வைக்கப்பட்டிருக்கிறது.

வெட்கம் என்னும் தாழினை இட்ட அடக்கமென்னும் கதவைக் காமம் என்னும் கோடரி உடைத்து விடுகிறது' எனத் தலைவி வருந்துகிறாள்.

காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு (குறள். 1251)

இவ்வாறு பெண்ணின் தன்மையான நாணம். அச்சம் முதலிய பண்புகள் கெடுவதற்குரிய காரணத்தைத் தலைவி நன்குணர்ந்திருக்கிறாள். அவளே,

பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை? (குறள் 1258)

என்று அதைக் குறிப்பிடுகிறாள்.

'பல சூழ்ச்சிகளைச் செய்யவல்ல கள்வரான காதலருடைய பணிவான இனியமொழி என்னுடைய பெண்தன்மை என்னும் அரிய காவலை அழிக்கும் படையாக இருக்கிறதே' எனத் தலைவி செய்வதறியாது பெருமூச்சு விடுகின்றாள்.

இவ்வாய்விலிருந்து களவியலில் தலைவன், தலைவி ஆகிய இருவரும் ஆற்றாமை மிகுதியால் நாணத்தைவிட்டுத் தங்கள் வேட்கையை எடுத்துரைத்தலே 'நாணுத்துறவுரைத்தல் என்னும் அதிகாரத்தின் உயிர்நாடியாக விளங்குவது புலனாகின்றது. மேலும், 'நிறையழிதல்' என்பது கற்பியலில் தலைவியின் மாட்டு உண்டாகும் மெய்ப்பாடு என்பதை நாம் உணர்ந்தோம். மகளிர்க்கு உயிரினும் சிறந்தது நாணம் ; ஆனால், காமம் மிக்க நிலையில் அதைத் துறக்க வேண்டிய

நிலை உண்டானால், மகளிர் அதைத் துறந்தும் உயிர் வாழலாம். ஆனால் 'குற்றமற்ற கற்பினை' இழந்து அவர்கள் வாழ இயலாது.

'நாணம்' என்பது மகளிர்க்கு ஓர் அணிகலன். நெருக்கடி உண்டாகின்றபொழுது அதை அவர்கள் துறக்க நேர்ந்தால் கவலை இல்லை; உயிர் வாழ்ந்தால் போதும். ஆனால்,'நிறை' என்பது அப்படிப்பட்டது அன்று. உள்ளத்தை உறுதியாக ஒரு பொருளிடத்து நிறுத்துதலே நிறையாகும்.இதனால்,மகளிர்க்குச் சிறந்தது கற்பொழுக்கம் என்பது பெறப்படுகிறது. அத்தகைய நிறையை'க் காமவேட்கை மிகுதியான உள்ளத்தில் அடக்க முடியாது. துன்பத்தை வாய்விட்டுச் சொல்லிப் பிதற்றுகிறாள் தலைவி. அங்கு அவள் நிறையைத் துறந்துவிடவில்லை. அவள் நாணத்தைத் துறந்ததாகச் சொல்லும் வள்ளுவர், நிறை அழிதலாக உள்ளத்தில் மறைத்துப் போற்ற வேண்டியவற்றை மறைத்துப் போற்றாமல் வெளிப்படுத்த முயலுவதாகத் தான் சொல்கிறார். இதனால் தன்னுடைய கற்பிற்குக் களங்கம் வாராமல் தலைவி நடத்து கொள்ளுவதாக வள்ளுவர் காட்டுகிறார்.

புலவியும் ஊடலும்

கற்பியலில் 'நெஞ்சொடு புலத்தலுக்கு' அடுத்து, புலவி" என்னும் அதிகாரம் வைக்கப்பட்டிருக்கிறது.'

புலவியே புலத்த லென்ப

என்பது சூடாமணி நிகண்டு (செயல். தொ. 17) தரும் விளக்கமாகும். புலத்தல் என்றால் என்ன? தொல்காப்பியர்,

புலம்பே தனிமை (தொல் 814)

எனக் கூறுகிறார். எனவே. 'புலவி' என்பதற்குத் 'தனிமையில் வருந்துதல்' என்பது பொருள். 'நெஞ்சொடு புலத்தல்" என்னும் அதிகாரத்தை அடுத்து இவ்வதிகாரம் அமைக்கப்பட்டுள்ளமையால், இதுவரை மனத்தோடு வேறுபட்டுக் கூறியதைப் போன்று தலைவன், தலைவியர்

கருத்து வேறுபட்டு மனம் விரும்பாத நிலைமையை இது சித்திரிப்பதாகத் தோன்றுகிறது. தலைவன் தலைவி ஆகிய இருவர் நெஞ்சமும், புணர்ச்சிக் கண்ணே விரையாது, கருத்து வேறுபட்டவிடத்து ஒருவரோடொருவர் பிணங்கிப் பூசலிடுவதே 'புலவி' என்னும் அதிகாரத்தின் கருத்தாகும்.

தோழி,"அம்மா!உன் கைவரிசையை இன்று செம்மையாகக் காட்டிவிட வேண்டும்; தெரிகிறதா? கடகடவென்று போய் அணைத்துக் கொள்ளாதே! தழுவாமல் இன்றிரவு புலவியை மேற்கொள்வாயாக! அதனால், அந்தப் பிரிவுத் துயர் நல்கிய மனிதர் அனுபவிக்கும் துன்பநோயைப் பார்த்துக் கொஞ்சம் மகிழலாம்" எனத் தலைவிக்கு அறிவுரை கூறுவதோடு தொடங்குகிறது 'புலவி' என்னும் அதிகாரம்.

புல்லா திராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது (குறள். 1301)

உடனே அவளுக்கு அச்சம் உண்டாகிறது. ஒருகால் தான்கூறியபடி 'புலவி'யில் ஈடுபடும் தலைவி, அதை நீட்டித்து விட்டால் என்ன செய்வது என்று அவள் அஞ்சுகிறாள். விளையாட்டு வினையாகப் போய்விடக்கூடாது அல்லவா? அதனால், "புலவி என்பது என்ன தெரியுமா? கூர்ந்து கவனித்துக்கொள் தாயே! 'உப்புக்குச் சமமானது'; உணவுப் பொருள்களைச் சமைக்கின்ற பொழுது, அவற்றில் உப்பைக் கலப்பதால் எவ்வளவு சுவை உண்டாகிறது என்பதுதான் உனக்குத் தெரியுமே. உப்பு இல்லையானால் எல்லாம் சுவையற்றதாகிவிடும் அல்லவா? அதைப்போன்று கலவி இனிப்பதற்குப் புலவி இன்றியமையாதது. ஆனால், உப்பைப்போலப் புலவியும் ஓர் அளவிற்கு உட்பட்டிருந்தல் வேண்டும். உப்புச் சிறிது கூடினால் உணவு எப்படியிருக்கும்? புலவி அளவுக்கு மேல் நீட்டித்தாலும் கலவி கசப்பாகப் போய்விடும். எனவே, 'புலவியாகிய உப்பைக் கணக்காகக் கலந்து, கலவியாகிய உணவைச் சுவையுடைய தாக்கு. உப்புப் போட மறந்து விடாதே; அதிகமாகப் போட்டும் கெடுத்து விடாதே

" எனத் தோழி எச்சரிக்கை செய்கிறாள்:

உப்பமைந் தற்றால் புலவி; அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல் (குறள் 1302)

இவ்வுண்மையைக் கருத்தில் கொண்டு அன்புப் போர் தொடுத்த தலைவியைப் பிணங்குதல் தீருமாறு வேண்டியும்: ஊடல் தெளியாத நிலையில் நீர் இனிமையுடையதுநான்! எங்கு? எப்போது? அந்நீர் நல்ல நிழலில் தேங்கிக் கிடந்தால் இனிமையாக இருக்கும். நிழலால் சூழப்பட்ட நீர் குளிர்ச்சி பெற்றுப் பருகுவோர்க்குச் சுவையூட்டும். அதே நீர் வெயிலில் காய்ந்தால், வெப்பத்தைத்தான் தரும். அதுபோலவே புலவியும். புலவி இனிமைக்கு ஊற்றாகும். யாருக்கு? எப்பொழுது தெரியுமா? கருத்தொருமித்து ஒருவரையொருவர் விரும்பும் காதலாகிய பேரன்பு பூண்டவர்க்கு. அளவாகப் பிணங்குகின்றபொழுது புலவி இன்பம் அளிக்கும்" எனத் தலைவன் நயமாகக் கூறுகிறான்.

நீரும் நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது (குறள். 1309)

மேலும், "என்னால் என் ஆசையைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. ஊடல் காரணமாக நான் வாடுமாறு விடுகின்ற காதலியோடு என் நெஞ்சம் கூடுவோம் என நினைப்பது அவாவினாலேயே" என அவன் கூடியின்புற விழைவதைத் தெரிவிக்கின்றான்.

ஊடல் உணங்க விடுவாரோ டென்நெஞ்சம்
கூடுவேம் என்ப தவா (குறள். 1310)

'இது என்னுடைய விழைவு மட்டுமன்று. என்னோடு பிணங்கும் புலவிக்குள்ளே கிடக்கும் காதலியின் ஆசையையும் உணர்வதாலேயே என் நெஞ்சம் கலக்கக் கருதுகின்றது' எனக் கூறிப் புலவியின் சிறப்பைப் பலவாறாகப் பாராட்டுகிறான் தலைவன். அதன் பயனாக, அவன் புலவி நீங்கிய காதலியைக் கலந்து மகிழ்கிறான்.

"புலவி' எனும் அதிகாரத்திற்கும் 'ஊடலுவகை' என்னும் அதிகாரத்திற்கும் இடையே அமைக்கப்பட்டுள்ளது, "புலலி நுணுக்கம்' என்னும் அதிகாரம். முந்திய அதிகாரம் புலவி; இந்த அதிகாரம் அதன் நுணுக்கம். அவ்வதிகாரம் புலவியைப் பற்றிப் பொதுவாகக் கூறுவது. இங்குப் புலவியின் நுணுக்கம் பெறப்படுகிறது. அதாவது 'புலவி உண்டாவதற்குக் காட்டப்படும் நுட்பமான காரணம், புலவி நுணுக்கமாகும். பள்ளியறையில் தலைவனோடு கூடியிருக்கும் தலைவி, மீண்டும் கூடியின்புற வேண்டும் என்ற காமவேட்கை மிகுகின்றபொழுது, தலை வனிடத்தில் காணாத குற்றத்தைத் தானாகப் படைத்துக்கொண்டு ஊடுகிறாள். இதை நுணுக்கமாக எடுத்துரைப்பது. *புலவி நுணுக்கமாகும்.[1]

> இதை,
> தலைமகன் மாட்டுத் தவறிலவாயினும், தன் காதல் மிகுதியால் சொல்லெச்சத்தினாலும், குறிப்பெச்சத்தினாலும் வேறுபடப் பொருள் கொண்டு தலைமகள் புலந்து கூறுதல், இது செவ்வியின் தோன்றாது ஆதலின் நுணுக்கமாயிற்று

என்று மணக்குடவர் தெளிவுறுத்தியுள்ளமையால், நாம் நன்குணரலாம். புலவி நுணுக்கத்தை மிகவும் நுட்பமாகத் தெளிவுறுத்தியுள்ளார் ஆசிரியர் வள்ளுவனார்.

முதலிரண்டு பாக்கள் தலைவி கூற்று. முதல் பாட்டு தலைவி, தலைவனை நோக்கிக் கூறுவது; இரண்டாவது தலைவி, தோழியிடம் சொல்வது. பின்னர் வரும் எட்டுக் குறள்களும் தலைவன் கூற்று. இவை யாவும், தலைவி புலவிக்குக் காரணமாகக் கொண்ட நுணுக்கத்தைத் தோழியிடம் தலைவன் விரித்துரைப்பன.

---

1. திருக்குறள் உரைவளம்; காமத்துப்பால். பக். 327

காதல் போரில் ஈடுபட்ட தலைவி, வெளியே சென்று வீடு திரும்பிய தலைவனுடன் உரையாடுகிறாள். அவன் வெளியே சென்றிருந்தபோது எதிர்ப்பட்ட பெண்கள், தம் கண்களால் அவனைப் பார்த்திருப்பார்களாம்! அதனால் காதலன் மாசுபட்டு விட்டானாம்! புலவிக்குக் காரணமாகக் கற்பித்துக்கொண்ட நுணுக்கம் அருமையானது அல்லவா?

பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு (குறள். 1311)

பெண்தன்மையுடையார் எல்லாரும் தம் கண்களால் உன்னைப் பொதுப் பொருளாகக் கொண்டு பார்த்து மகிழ்வார்கள். ஆதலின், நான் உன் பரந்த மார்பினைத் தழுவேன் என்று ஊடுகிறாள் தலைவி. இதில் கலையழகும், கற்பனைச் சிறப்பும் ஒளிர்வதுடன், மகளிரின் மன இயல்பையும் வள்ளுவர் மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

தன் தோழியிடம் தன்னுடைய 'உரிமைப் போரைப் பற்றி அவள் குறிப்பிடுகின்றாள்:

நான் அவரோடு ஊடியிருந்தேனா? அவர் என்ன செய்தார் தெரியுமா? அவர் பெரிய ஆளாயிற்றே! உடனே ஒரு தும்மல் தும்மினார். ஏன்? என் வாயைக் கிளறத்தான். புலந்து வாய் பேசாது ஒரு பக்கமாகத் திரும்பிக் கொண்டிருந்த நான், அவர் தும்மியவுடன் தும்மியவர்க்குக் கூறும் ஆறுதல் வழக்கப்படி அவரைப் பார்த்து, "நீடு வாழ்க!" எனக் கூறுவேன் என்பது அவர் நினைப்பு. அந்த மாயக் கள்ளன் செயல் இப்போதாகிலும் புரிகிறதா?

எனத் தலைவி வினவுகிறாள்.

ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து (குறள். 1312)

அதற்குப்பின் என்ன நடந்தது என்பதைத் தலைவன் தோழியிடம் சொல்லுகிறான். அதை நாமும் கேட்போம். அன்று அவள் என்னோடு ஊடினாள். நான் அவளுடைய பிணக்கத்திற்குக் காரணம் அறிய அவளிடத்துப் பேச்சுக்

கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்குத் தும்மல் வந்தது; தும்மினேன். உடனே முறைப்படி அவள் என்னை வாழ்த்தினாள். வாழ்த்திய அவள். உடனே அழுகையுடன், உம்மால் காதலிக்கப்பட்ட மகளிருள் யாரோ உம்மை நினைக்கின்றார். அதனால்தான் தும்முகிறீர்" என்று அவள் அழுததாகக் கூறினான்.

தொடர்ந்து வந்த தும்மலை நான் உடனே அடக்கினேன் 'அவள் அழுவாளே! பூசலிடுவாளே!' என்று நான் அஞ்சியதனால் தும்மலை அடக்கினேன். அப்போதும் அவள் விட்டபாடில்லை! "ஓ! என்னை ஏமாற்றப் பார்க்கிறீரா? தும்மல் வருவதை ஏன் அடக்குகின்றீர்? யாரோ உம்மை நினைக்கின்றார். அதனால் தோன்றும் தும்மலை அடக்கி மறைக்கின்றீர்" என்று இயம்பி ஊடி நின்றாள் என்று தான் தலைவியிடம் பட்டபாட்டைக் குறிப்பிடுகின்றான் தலைவன்.

வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யார்உள்ளித் தும்மினீர் என்று (குறள் 1317)

இச் சுவைமிகு காதற் கதையின் மூலம், அன்பினால் பிணைக்கப்பட்ட காதலரிடையே பூசல் தோன்றுவதற்குரிய காரணத்தை நவில்தோறும் இன்பம் பயக்கும் வகையில் படைத்துக் காட்டுகிறார் கலைத்திறன் மிக்க கவிஞர் வள்ளுவர். இப் புலவி நுணுக்கம்' என்ற அதிகாரம் சொல்லாலும் பொருளாலும், கருத்தை உணர்த்தும் முறையாலும், நாடகப் பண்பாலும் நனிசிறந்து விளங்குவதாகும்.

வள்ளுவர் தந்த வான்மறையின் இறுதி அதிகாரம் 'ஊடல் உவகை'. இது காமத்துப்பாலின் கடைசி அதிகாரம். மண்ணில் மனிதன் நல்லவண்ணம் வாழ்வதற்குரிய வாழ்க்கை நெறியை வகுத்தளித்த வள்ளுவர், அந்நூலினை 'ஊடல் உவகை'யோடு முடிப்பது ஆழ்ந்து சிந்தித்தற்குரியதாகும்.

புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை என்னும் அதிகார வைப்பு முறையிலேயே கலைமணம் கமழ்கிறது.

கூடியும் கூட்டமின்மை குலவிய புலவியென்ப
ஊடலே நணுகாராகி யுரை மறுத்தலாகும்
(சூடாமணி நிகண்டு –செ. பொ. தொ. 18)

காதலரிருவர் உடலால் கூடியின்புற்றாலும், உள்ளத்தால் கருத்து வேறுபட்ட நிலையே புலவி என்றும், அருகே அணையாதும், வாய் பேசாதும் இருப்பது ஊடல் என்பதும் பொருளிலக்கியம் கண்ட பண்டைத் தமிழ்ச்சான்றோர் கருத்தாகும்.

ஊடலின் முடிவு கூடலாக அமைவது மனித இயற்கை என்பதைப் பண்டை அகப்பொருள் இலக்கியங்கள் இனிது எடுத்தியம்புகின்றன, இதையே, வள்ளுவர் 'ஊடல் உவகை' என்னும் பகுதியில் ஓடும் திரைப்படமாக்கிக் காட்டுகிறார். ஊடல் உவமையாவது, ஊடலால் கூடல் இன்பம் சிறத்தல் கண்டு மகிழ்ச்சி பெறுதல். உவகை என்பது மனத்தினின்று பொங்கியெழும் இன்ப உணர்ச்சி, மனிதர்க்கு உண்டாகக் கூடிய எண்வகை மெய்ப்பாடுகளுள் 'உவகை' என்பது ஒன்று. அவ் வுவகைதானும்,

செல்வம், புலனே, புணர்வு,விளை யாட்டு
(தொல்.மெய்ப்.11)

என்னும் நால்வகை நிலைக்களன்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும். அந்நான்கனுள் 'புணர்வு' என்பது ஒருவனும் ஒருத்தியும் கூடியின்புறுதலைக் குறிப்பதாகும். இக்காதலின்பமே உவகை தோன்றுவதற்குரிய நிலைக்களன்களில் முதன்மையானதாகும். எனவே இன்பச்சுவையின் அடிப்படையில் தோன்றுவது உவகை என்பது பெறப்படுகிறது. இதனைச் சிருங்காரம் என்பர் வட மொழியாளர்.

ஒத்த காமத் தொருவனும் ஒருத்தியும்
ஒத்த காமத் தொருவனோடு பலரும்
ஆடலும் பாடலும் கள்ளுங் கனியும்
ஊடலும் உணர்த்தலும் கூடலு மிடைந்து
ஒருங்கா ராய்ந்த இன்னவை பிறவும்
சிருங்கா ரெமென வேண்டுப, இதன்பயன்

துன்பம் நீங்கத் துகளறக்கிடந்த
இன்பமொடு புணர்ந்த ஏக்கழுத் தம்மே

என்று செயித்தியனார் எனும் நாடகத் தமிழ் நூலாசிரியர் விரிவாக விளக்கியுள்ளார்.[2] இவ்வாசிரியரும் ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினையே சிருங்காரம் எனச் சுட்டுவதைக் காணலாம்.

எனவே ஊடல் உவகை என்பது ஊடலால் கூடல் இன்பம் சிறத்தல் கண்டு, மகிழ்ச்சி அடைதலைக் குறிக்கிறது. இன்ப எக்களிப்பாகிய உவகை தலைவன், தலைவி ஆகிய இருவரிடத்தும் தோன்றுகிறது. ஊடல் உவகைப் பாக்கள் அவ்விருவர் வாயிலின்றும் வெளிப்படுகின்றன. ஊடலால் தமக்குக் கூடலின்பம் கிட்டியமையால், அப்பேற்றிற்குக் காரணமாகிய அவ்வூடலைத் தலைமகள் முதல் நான்கு குறட்பாக்களில் விரும்பிப் போற்றுவதாகவும், தலைவன் மகிழ்ச்சியுடன் அடுத்துள்ள ஆறுபாடல்களில் பாராட்டுவதாகவும் அமைக்கப்பட்டுள்ள அதிகாரம் ஊடலுவகை.

தலைவியும் தோழியும் உரையாடுகின்றனர். தோழிக்கு ஓர் ஐயம் உண்டாகிறது. அதைத் தலைவியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளத் துடிக்கிறாள். 'ஒரு காரணமும் இல்லாமல் எதற்காக ஊடுகிறாய்?" என அவள் தலைவியைக் கேட்கிறாள். தலைவி கேள்வியின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளுகிறாள். 'அவரிடத்துத் தவறில்லைதான். ஆனால். அவர் என்மீது காட்டும் அன்பினைப் பெருக்கெடுத்தோடச் செய்யவல்லது ஊடல் என மறுமொழி தருகிறாள் தலைவி.

இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர் அளிக்கு மாறு (குறள் 1321)

அந்த ஊடல் தரும் இன்பம் எத்தகையது தெரியுமா? என்று தலைவி, தோழியைச் கேட்கிறாள். அக்கேள்விக்குத் தானே விடையும் தருகிறாள். 'நிலத்தோடு நீர்கலந்ததைப்

2 தொல், பொருள் இளம்பூரணர் உரை மேற்கோள், பக். 379

போல ஒற்றுமையுடைய காதலரோடு ஊடுவதால் பெறுகின்ற இன்பத்திற்கு, ஒப்பானதோர் இன்பத்தைத் தேவர் உலகத்திலும் நாம் பெறமுடியாது' என அவள் கூறுகிறாள், புத்தேள் நாட்டு இன்பத்தினும், புலவியே பேரின்பம் பயப்பது என்பதை இதன் மூலம் தலைவி தெரிவிக்கின்றாள்:

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து (குறள் 1323)

தலைவன் தன்னுள்ளே ஊடலைப் போற்றுகின்றான். ஆடவர் தம்மிடம் தவறு இலராணாலும், மகளிரால் ஊடப்பட்டு அவர் தோள்களைத் தழுவாத பொழுதும், அவ்வூடலில் ஏதோ சொல்ல முடியாத ஓர் இன்பம் இருக்கின்றது. எனவே. புலவியே கலவியை இனிக்கச் செய்கிறது' என்று அவன் வியக்கிறான்.

தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்கொன்று உடைத்து (குறள்.1325)

காமத்திற்குப் புணர்தலைவிட, ஊடல் இனிதாகின்றது. என்பதை யுணர்ந்த தலைவன், ஊடலில் உண்டாகும் வெற்றி தோல்விகளைப் பற்றி எண்ணுகிறான். வெற்றியால் கிட்டும் பயன் பெரிதா? தோல்வியால் அடையும் பயன் பெரிதா?* என்பதை ஆராய்ந்த அவன், 'தோல்வியே சிறந்தது' என முடிவுக்கு வருகிறான். உலக வரலாற்றில் போரில் வென்றவர் பண்பாட்டு அடிப்படையில் தோற்றதாகக் கூறப்படுவது மரபு. ரோமானியர் படையெடுப்பின் பொழுது கிரேக்க நாடு தோல்வியுற்றது.ஆனால், வாகைசூடிய ரோமானியர் பண்பாட்டுத் துறையில் கிரேக்கத்திற்கு அடிமையாயினர். இதைத் 'தன்னைவென்றவரைக் கிரேக்கம் வென்றது' எனக் கூறுவது வழக்கம்.

இதைப் போன்று 'ஊடலில் தோற்றவர் வென்றவரே யாவர் என்பது வள்ளுவர் கருத்தாகும். 'காமம் நுகர்வதற் குரிய இருவருள் எவர் ஊடலில் தோற்றாரோ, அவரே வெற்றி பெற்றவர், அதனைக் கூடலில் தெரிந்து கொண்டுவிடலாம் என்று தலைவன் குறிப்பிடுகிறான்:

ஊடலில் தோற்றவர் வென்றார்: அதுமன்னும்
கூடலில் காணப் படும் (குறள். 1327)

இவ்வாறு கூடலின் சிறப்பைப் போற்றிப் பாராட்டும் தலைவன், காமத்திற்கு இன்பம் தருவது ஊடல் அவ்வூடலை இன்பமாக முடிப்பது எது? கூடிமுயங்கல். ஒருவரைத் தழுவினால் ஒழிய ஊடல் இன்பம் தராது, ஊடல் இன்பந் தரும். எப்பொழுது? எந்நிலையில்? கூடித் தழுவினால்தான் இன்பந்தரும் எனத் தனக்குத் தானே ஊடலின் பெருமையையும் கூடலின் சிறப்பையும் அவன் போற்றுகிறான். இவ்வாறு காதலியோடு கூடியின்புறுவதில் தோன்றும் இன்பத்தையும் அதற்குக் காரணமாக அமைந்த புலவியையும் நினைந்து நினைந்து, உருகி ஊடலை உவக்கின்றான் தலைவன்.

காதலரிடையே அன்பைப் பெருக்குவது அவரிடையே உண்டாகும் பிரிவு. பிரிவிற்குப் பின் துன்புறும் தலைவியும் தலைவனும் மீண்டும் கூடுகின்றனர். பூசலுக்குப் பொய்ம்மையான காரணங்களைக் கற்பித்துக் கொண்ட தலைவி, காதல் போரிட முனைகிறாள். போரின் இறுதியில் அவள் வாகை சூடுகிறாள். ஆனால் தோற்றவர் வென்றார் என்னும் நியதிக்கேற்பத் தலைவன் தலைவியைக் கூடிக் களிக்கிறான். இதை ஊடலுவகை உணர்த்துகிறது. 'அறிதொறும் அறியாமை" காணுகின்றனர் காதவர். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? இருதலைப் புள்ளின் ஓருயி'ரைப் போன்று தலைவனும் தலைவியும் இன்பம் துய்க்கின்றனர். இன்ப எக்களிப்பில் அவர்களிருவரும் ஊடலின் சிறப்பைப் போற்றிப் பாராட்டுகின்றனர்.

காமத்துப்பாலின் இறுதி, இயல், ஊடலுக்குப்பின் கூடலால் உண்டாகும் மகிழ்ச்சியைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுகிறது. 'எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தான் அமர்ந்து வரூஉம் (தொல். பொருள். 29) என்பது தொல்காப்பியர் கருத்து. தலைவனும் தலைவியும் இன்பத்தில் மூழ்கித் திளைப்பதைக்

காட்டுவதன் மூலம், திருவள்ளுவர் அறத்தால் வரும் இன்பத்தின் இயல்பையும், எழிலையும். ஏற்றத்தையும் நம் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். மேலும், மனித வாழ்க்கையின் முழுநிறைவுத் தன்மையை நம் உள்ளத்தில் ஆழப் பதியுமாறு அவர் செய்கிறார். காமத்துப் பாலிலுள்ள இத்தகைய கருத்தோவியங்கள், மனித இனத்திற்கு வள்ளுவர் வழங்கிய இன்பப் பரிசாகப் போற்றத்தக்கனவாகும்.

7. உரைகள் வேண்டுமா?

திருக்குறள் 'ஓதற்கெளிது; உணர்தற்கு அரிது' என்பர் ஆன்றோர். திருக்குறள் ஒரு கருத்துக் களஞ்சியம்; அக்களஞ் சியத்தினுள் வேண்டுவார்க்கு வேண்டும் பொருள் கிடைக்கும்

மக்கள், மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கு வாழ்வியல் நூலினை வகுத்தளித்தார் வள்ளுவர். அதில், நாம் அறத்தின் மலர்ச்சியையும், பொருளின் பூரிப்பையும், இன்பத்தின் ஏற்றத்தையும் காணுகின்றோம். அறத்தின் வழிப்பட்ட பொருளாட்சியும், அறத்தின் வழிப்பட்ட இன்பநாட்டமும் அறவழி நிற்பதால் உண்டாகும் மனநலமும் மன்னுயிர்க்கு ஆக்கம் தரும் என்பது வள்ளுவர் கருத்து.

திருக்குறளின் சிறப்பியல்புகள்

அனைத்துலக மனிதனைப் பாடும் திருக்குறளின் தனிச்சிறப்புகள் பல, அவற்றுள் முதன்மையானவை இரண்டு. அனைத்துலக நோக்கமாகிய பொதுமைப் பண்பும். கருத்துகளின் இயையும் திருக்குறளை உலகப் பொதுமறையாக உயர்த்தியுள்ளன. திருக்குறளின் பொதுமை அல்லது அனைத்துலக நோக்கு, காலத்தையும், இடத்தையும், சமயத்தையும் மொழியையும், இனத்தையும் கடந்து ஒளிரும்

ஒப்பற்ற பன்பாகும். இத்தகைய முறையில் மனிதனைப் பாடும் நூல், அனைத்துலக மனிதனைப் பாடும் நூல் உலகில் வேறில்லை.

இரண்டாவது சிறப்பியல்பு 'கருத்துகளின் இயைபு என்பதை நாம் மேலே கண்டோம். திருவள்ளுவர் ஓர் ஒப்பற்ற அறிவுப் பெட்டகத்தை, அனைத்து உலக மனிதனுக்கு அன்பளிப்பாக அளித்துள்ளார். அதில் உலகம் சிறந்தவை என்று போற்றப்படும் கருத்துகளும், கொள்கைகளும், கோட்பாடுகளும் கோயில் கொண்டுள்ளன. அவற்றை அவர் உலகிற்கு அளித்துள்ள முறை புதுமையானதாகும். அவர் வாழ்ந்த காலத்தில் வழங்கிய பல்வகையான கருத்துகளுக்கும் கொள்கைகளுக்கும் இடையே இருந்துவந்த வேற்றுமையில் ஒற்றுமை காண அவர் முயன்று இருக்கிறார். அதனால், அன்று சிறப்புற்று விளங்கிய பலதிறப்பட்ட கருத்துகள், பலவகைப்பட்ட எண்ணங்கள், பல்வேறு வகையான கொள்கைகள், சழக்கிடும் சமயக் கோட்பாடுகள் ஆகிய அனைத்திலும், சிறந்தனவற்றையும், உயர்ந்தனவற்றையும்,பொன்னெனப் போற்றத் தக்கனவற்றையும், எஞ்ஞான்றும் யார்க்கும் நன்மை பயப்பனவற்றையும் ஒருங்கு திரட்டியும், அவற்றைத் தம் வயமாக்கியும், ஓர் இயைபுபடுத்தியும், அதில் தமிழ்ப் பண்பாட்டின் வண்ணத்தைக் குழைத்தும் தந்த பெருமை திருவள்ளுவருக்கேயுரியதாகும். இவ்விரு சிறப்பியல்புகளுமே திருக்குறளை உலக இலக்கிய அரங்கில் பொன்றாப்புகழ்பெற்று விளங்கச் செய்துள்ளன என்றால், அது மிகையாகாது.

உரைகள் வேண்டுமா?

இவ்வியத்தகு சிறப்புடைய திருக்குறளிற்கு. 'உரைகள் வேண்டுமா?' எனச் சிலர். இக்காலத்தில் வினவுவதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இவ் வினாவினை நாம் மூன்று வகையாக அணுகலாம்:

(1) திருக்குறன் பழகு தமிழில் அல்லவா எழுதப்பட்டிருக்கிறது? அப்படிப்பட்ட எளிய, இனிய நூலிற்கு இப்பொழுது மிகப் பலவாக எழுதப்பட்டிருக்கின்ற உரைகள் தேவையா?

(2) திருக்குறளுக்கு இப்பொழுது இருக்கின்ற உரைகள் போதாவா? இனிமேல், புதிதாக உரைகள் வகுக்க வேண்டுமா?

(3) ஒரேயோர் உரை போதும் அல்லவா? பல உரைகள் தேவைதானா?

இவ் வினாக்களுக்கு விடைகளைக் காண்பதற்கு முன்பு, ஒரு நூலிற்கு, எப்பொழுது உரைகள் எழுதப்படுகின்றன? ஏன் எழுதப்படுகின்றன?' என்பதைப் பார்ப்போம்.

உரைகளின் தோற்றம்

பழைய நூல்களுக்கு எப்பொழுது உரைகள் தோன்றுகின்றன? முதலாவதாகக், குறிப்பிட்ட ஒரு காலத்தில் வாழும் மக்களிடையே 'அறிவுப்பசி' தலையெடுக்கின்ற பொழுது. தங்கள் பழம்பெரும் நூல்களுக்குத் தங்கள் காலத்திய வாழ்க்கைச் சூழலுக்கேற்ப விளக்கம்தர, அக்காலத்திய அறிஞர்கள் முயலுகின்றனர். அவர்களுடைய உள்ளத்தில் ஆராய்ச்சி மனப்பான்மை' மேலோங்கி நிற்கின்றபொழுதும், பழைமையிலும் புதியன காணவேண்டும் என்ற உணர்ச்சித் துடிப்பு உந்துகின்றபொழுதும் அவர்கள், தங்கள் பழைய நூல்களுக்கு உரை எழுதுகின்றனர்.

உயர்ந்த இலக்கியங்கள் காலத்தை வென்று வாழ்வன; அதனால்தான் அவற்றை 'வாழும் இலக்கியங்கள்' என உலகம் போற்றுகிறது. திருக்குறள் இவ் வரிசையில் முதலிடம் பெறுகின்றது. அது என்றும், எக்காலத்திற்கும் பயன் தருவது என்பதைப் பண்டைக் காலத்திலேயே நம் முன்னோர்கள் நன்குணர்ந்திருந்தனர். இதனை

என்றும் புலராது யாணர்நாள் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க் – குன்றாத

செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல் (திருவ. மாலை. 3)

என்னும் பாடல் அறிவிக்கிறது.

தமிழிலக்கிய வரலாற்றினை ஆராய்ந்து பார்ப்போமானால் தமிழ் மக்களிடத்து 'அறிவுப் பசி' உண்டான பொழுதெல்லாம் திருக்குறளுக்கு உரைகள் பல எழுதப்பட்டுள்ளதைக் காணுகின்றோம். பிற்காலச் சோழப் பேரரசர் காலத்தில் தமிழகத்தில் புதியதோர் எழுச்சி உண்டாயிற்று. அதன் பயனாகப் பண்டைத் தமிழ் இலக்கியங்களை மக்கள் கற்க முன் வந்தனர். அதனால், அவற்றுக்கெல்லாம் உரைவிளக்கங்கள் பல எழுதப்பட்டன. இதனால், இக்காலத்தை 'உரையாசிரியர்கள் காலம்' எனச் சிறப்பித்துக் கூறுவதும் உண்டு. இதற்கு அடுத்து, இந்நூற்றாண்டில் தமிழ் மக்களிடத்துப் புதியதொரு விழிப்பும், அறிவுப் பசியும், தாய்மொழிப் பற்றும், தாய்நாட்டுப் பற்றும் உண்டாயின. இவற்றால் பழைய தமிழிலக்கியக் கல்வியறிவும், பழைய பண்பாட்டில் ஈடுபாடும் மக்களிடையே பெருகின. இவற்றின் விளைவாகத் தமிழகத்தில் மறுமலர்ச்சியுண்டாயிற்று. இந்நிலையில் திருக்குறளுக்குச் சற்றேறக்குறைய ஐம்பதுக்கு மேற்பட்ட புதிய உரைகள் எழுதப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம்.

இரண்டாவதாகப் பழைமைக்கும், புதிய அயல் பண்புக்கும் இடையே ஒரு நாட்டில் மோதல்கள் உண்டாகின்றபொழுது. பழைய இலக்கியங்களுக்குப் புதிய உரைகள் எழுதப்படுகின்றன. உரைகளின் மூலம் பழைய பண்பாடு, நாகரிகம் கலை, மொழி முதலியவற்றின் தூய்மையைக் காப்பாற்ற அறிஞர்கள் முயலுகின்றனர். பழைய நூல்களுக்குப் புதிய விளக்கம் தரப்படுவதன் மூலம், அவர்கள், பிற்கால மக்களுக்கு முற்காலத்தின் சிறப்பியல்புகளை இன்றைய வாழ்க்கையோடு இணைத்துக் காட்டுகின்றனர்.

தமிழக வரலாற்றில் பல்லவருடைய காலம், தமிழ் நாட்டின் நிலைமாறுபாட்டக் காலமாகும். அக் காலத்தில் தமிழ்மொழியும், தமிழ்க் கலையும், தமிழப் பண்பாடும் அயல் மொழி ஆதிக்கத்தாலும், அயல் இனத்தார் பெற்ற அரசியல் ஆதிக்கத்தாலும், புறச்சமய ஆதிக்கத்தாலும் தாக்குண்டு நிலைகுலைந்து போயின. இவற்றுள் புறச்சமய ஆதிக்கம் பல்லவர் காலத்தின் தொடக்கத்திலேயே ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் தகர்த்தெறியப்பட்டதைச் சரித்திரம் பேசுகிறது.

ஆனால், அரசியலிலும், மொழித்துறையிலும், பண்பாட்டிலும் தமிழ்ப்பண்பு அழித்தொழிக்கப்படும் அவல நிலை உண்டாயிற்று. இதன் விளைவாகத் தமிழகம் தக்கதொரு வாய்ப்பினை எதிர்பார்த்துக் கிடந்தது. பத்தாம் நூற்றாண்டில் சோழப் பேரரசு எழுச்சியுற்றது. தமிழ் மக்கள் அந்நல்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள அரும்பாடுபட்டனர். அரசியலில் எழுச்சிபெற்ற தமிழகம், பண்பாட்டுத் துறையில் வீழ்ச்சியடையாமல், கட்டிக்காப்பதற்கே பழைய தமிழ் நூல்கள் –இலக்கியம் முதற்கொண்டு தத்துவ நூல்கள் வரையிலுள்ள –அனைத்திற்கும் தமிழ்ச்சான்றோர்கள் உரை எழுதத் தொடங்கினர்.

இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கடந்த நான்கு நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் கடல்கடந்த நாடுகளிலிருந்து வந்த சமயங்களின் தாக்குதலால் நம்முடைய மொழி, பண்பாடு, கலை முதலியன யாவும் வாழ்விழந்து போயிருந்தன. அப்புறச்சமயங்களின் கொள்கைகளும் கோட்பாடுகளும், பழக்கவழக்கங்களும் வாழ்க்கை முறைகளும் நம்முடைய பண்பாட்டுக் கொதிகலனில் இடப்பட்டு உருக்கப்படும் ஒரு நெருக்கடியான நிலை உண்டாயிற்று. அந்நிலையில் ''நாம் யார்? நம் பண்பாடு எத்தகையது? நம் பண்பாட்டு மரபு வழி யாது?" என்பன போன்றவற்றையெல்லாம் அறிவதற்கு நம் முன்னோர்கள் முயன்றனர். அந்நிலையில்

நம் அறிஞர்களும். சான்றோர்களும் தொன்மைநலம் வாய்ந்த நம்முடைய உயர்ந்த பண்பாட்டின் கருத்துகளை இன்றைய புதிய உலகப்போக்கிற்கேற்பவும், இன்றைய புதுமைநிறைந்த வாழ்க்கைக்குப் பயன் தரத்தக்க வகையிலும் பொருத்திக்காட்டிப் பழைமைக்கும் 'புதுமெருகு' கொடுத்து, தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு அடிகோலினர். இப்பணியின் ஒரு பகுதியாகத் திருக்குறள் போன்ற பழம்பெரும் நூல்களுக்குப் புத்தம்புதிய உரைகள் பல எழுதப்பட்டன; இன்றும் பல எழுதப்படுகின்றன.

மூன்றாவதாகப்பழையஇலக்கியக்கல்விஅருகிப்போகின்ற பொழுதும், அதனால் அறியாமை பெருகுகின்ற பொழுதும் பழைய இலக்கியங்களின் கருத்துகளும் நடையும் மக்களுக்குப் புரியாமல் போய்விடும். அப்பொழுது, பழைய நூல்களில் சிறந்த புலமையுடைய பெரியோர்கள் அவற்றிற்கு எளிய, இனிய நடையில் தெளிவாகப் புரியும் முறையில் உரைவிளக்கங்கள் வரைவர்.இம்முறையில் எழுதப்படும் உரைகள் நாட்டு மக்களுக்குப் பழைய இலக்கியங்களை அறிமுகப்படுத்தி வைக்கும் பணியோடு, அமைகின்றன. அண்மைக்காலத்தில் சங்க இலக்கியங்களுக்கு எழுதப்பட்டுள்ள 'எளிய உரைகள்', 'தெளிவுரைகள்', 'விருந்துகள்', 'விளக்கவுரைகள்" இம்முறையில் எழுந்தன வாகும். இதனால் பழைய இலக்கியக் கல்வி புத்துயிர் பெறலாயிற்று.

உரைகள் தோன்றுவதற்குரிய காரணங்கள்

இலக்கிய ஆராய்ச்சியில் அறிஞர்கள் கருத்தைச் செலுத்துகின்றபொழுதும், குறிப்பிட்ட இலக்கியங்களை மதிப்பீடு செய்கின்ற பொழுதும் புதிய உரைகள் தோன்றுகின்றன. இதனை,

> இடைக்காலத்தில் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்ட புலவர், சிறந்து விளங்கிய பண்டைக்கால நூல்களுக்கு உரைகள் எழுதுவதன் மூலமே தங்கள் ஆராய்ச்சிக்கு உருவம்

கொடுத்தனர்...உரை எழுதுவதை அரிய இலக்கிய ஆக்க முயற்சியாகவே கருதித் தமிழ்ப்புலவர்கள் அதைக் கையாண்டனர்[1]

என்பதனால் அறியலாம்.

நம்முடைய முன்னோர்கள் உரை இயற்றுவதற்குரிய நெறிமுறைகளை நன்கு வரையறுத்துள்ளனர்:

கருத்துரை கண்ணழிவு பொழிப்புத் திரட்டல்
அகலங் கூறலென நால்வகைத்தே
புகலும் சூத்திரப் பொருளுரை யென

என்பது உரையாசிரியர்கள் அடிக்கடி மேற்கோளாகக் காட்டும் ஒரு நூற்பாவாகும்.

உரை எழுதுவதற்குரிய நால்வகை முறைகளும், நூலின் கருத்தைப் படிப்பவருக்கு எளிதில் புலப்படுமாறு செய்வதற்கு நம் முன்னோர்கள் கையாண்ட இலக்கியத் திறனாய்வு முறைகளாகும். 'கருத்துரை' என்பது குறிப்பிட்ட ஒரு செய்யுளின் அல்லது நூலின் உயிர்நாடியாக உள்ள பொருளைச் சுருக்கமாகச் சொல்லுவதாகும். 'கண்ணழித்தல்' என்பது சொல்லுக்குச் சொல் பொருள்கூறும் முறையாகும். ஒரு செய்யுளின் திரண்ட பொருளைத் திரட்டித் தருவது 'பொழிப்புத்திரட்டல்" எனப்படும். 'அகலங்கூறல்' என்பது பதப்பொருளோடு சொல்நயம், பொருள்நயம், இன்றியமையாத இலக்கணக் குறிப்பு ஆகியவற்றைப் பல மேற்கோள்களுடன் தந்துரைப்பதாகும். இதனைத் திறனாய்வு முறையில் நூல்நயம் பாராட்டுதல் என இக்காலத்தில் நாம் கூறுகிறோம்.

கலைநயத்தை இலைமறை காய்போல் நம் இலக்கியப் படைப்பில் அமைக்கும் கலைஞனே சிறந்த கலைத்திறனுடையவன் என்றும், அதனை மீண்டும் கண்டு, மக்களுக்கு வெளிப்படுத்திக் காட்டும் முயற்சியில்

---

1 சுப்பிரமணிய ஐயர் A.V. தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, பக்.240.

ஈடுபடுபவனே, திறனாய்வாளன் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

நம்முடைய உரையாசிரியர்களுள் பெரும்பாலோர் இப்பணியைச் சிறப்பாகச் செய்துள்ளனர்.

> கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
> என்ன பயனும் இல (குறள். 1100)

இக்குறட்பாவிற்குப் பரிமேலழகர் வரைந்துள்ள உரை விளக்கத்தை இங்குக் காணலாம்.

> காமத்திற்கு உரிய இருவருள், ஒருவர் கண்களோடு மற்றொருவர் கண்கள் நோக்கால் ஒக்குமாயின், அவர் வாய்மை தோன்றச் சொல்லுகின்ற வாய்ச் சொற்கள் ஒருபயனும் உடைய அல்ல.
>
> நோக்கால் ஒத்தல் (நோக்கொக்கல்), காதல் நோக்கின ஆதல். வாய்ச்சொற்கள் மனத்தின் கணின்றி வாயளவில் தோன்றுகின்ற சொற்கள். இருவர் சொல்லும் கேட்டு உலகியல்மேல் வைத்துக் கூறியவாறு. இருவர் சொல்லுமாவன அவள் புனங்காவல் மேலும், அவன் வேட்டத்தின் மேலும் சொல்லுவன, பயனில் சொற்களாகலின் இவை கொள்ளப்படா என்பதாம். இவை புணர்தல் நிமித்தம்.[2]

அகலவுரை கூறுகின்றபொழுது பரிமேலழகர். நோக்கொக்கின்' என்பதற்கும், 'வாய்ச்சொற்கள்' என்பதற்கும் உரைவிளக்கம் கற்பவர் உள்ளத்தைக் கழிபேருவகை அடையச் செய்கிறது. இங்கு நாம் உரையாசிரியரின் நுண்மாண் நுழைபுலத்தையும்,கலையுணர்வையும் வியந்து பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும், சிறந்த இலக்கியங்களில் பொருள் புரியாத பாடல்களை நல்ல விளக்கவுரையின் மூலம், மக்களுக்கு அறிமுகப்படுத்துவதற்குத் தொன்றுதொட்டு உரைகள்

---

2. திருக்குறள் பரிமேலழகர் உரை.

எழுதப்படும் வழக்கம் இருந்துவருகிறது. திருக்குறளுக்கு உரைகள் பல ஏன் தோன்றின? அவை எப்பொழுது தோன்றின? என்னும் வினாக்களை மேற்கண்ட முன்னுரையோடு நாம் தொடர்புபடுத்திப் பார்க்கவேண்டும். அப்பொழுதுதான் அவ்வுரைகளின் சிறப்பை நாம் உணரமுடியும்.

தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர் தமது திருக்குறளை ஆக்கிய முறையையும், அதன் பொருண்மையையும், குறட்பாக்களின் திட்பம் செறிந்த அழகுகளையும் சிந்தனை செய்து பார்த்தால், இந்த நூலுக்கு அதன் கருத்துகளை விளக்கி, முன்னுக்குப் பின்னுள்ள வைகளைப் பொருத்தமாக்கித் தெளிந்த உரை செய்வது என்பது எளிய செயலன்று [3]

என்பதனை நாம் மறந்துவிடலாகாது.

மாண்புமிக்க எழுத்தாளன் அவன் காலத்திற்குக் கட்டுப்பட்ட படைப்பாளனாக இருப்பதைப் போன்றே, அக்காலத்தின் கைப்பாவையாகவும் இருக்கின்றான். அக்காலம் அவனுக்கு வழங்கியது என்னவென்பதை அறிவதில் நாம் ஆர்வம் காட்டுவதைப்போன்றே, அவன் வாழ்ந்த காலத்திடமிருந்து அவன்பெற்ற உதவிகளுக்கு மாற்றாக, அவன் திருப்பிக் கொடுத்தது என்னவென்பதையும் நாம் கண்டறிதல் வேண்டும்.[4] இவ்வடிப்படையில் நாம் உரையாசிரியர்களின் உரைகளை நோக்குவோமானால், பல உண்மைகள் நமக்குப் புலனாகும்.

மூன்றாவதாக மூல நூலாசிரியர்களைப் போலவே, உரையாசிரியர்களும் மனிதர்கள் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்களுடைய அனுபவமும் தற்சார்புடையது தற்சார்பற்றது என இருவகைப்படும்.

---

3 A. V. சுப்பிரமணிய ஐயர், தமிழ் ஆராய்ச்சியின் 4. 318

4 Hudson. W. H., An Introduction to the Study Literature P. 41

தற்சார்புடைய அனுபவத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். "உண்மையை" எடுத்துரைப்பதை இலட்சியமாகக் கொள்ளாமல். தங்கள் அறிவாற்றலை வெளிப்படுத்தும் வகையிலும், தங்கள் விருப்பு வெறுப்புகளைப் புலப்படுத்தும் வகையிலும் உரையெழுத முற்படுவர். தற்சார்பற்ற அனுபவத்தைப் போற்றி வாழும் உரையாசிரியர்கள் "உண்மைக்கு" விளக்கம் தருவதிலேயே கருத்தைச் செலுத்துவர். இவர்கள் மூலநூலாசிரியரின் உள்ளத்தை– உள்ளக்கிடக்கையைப் பகுத்துப் பகுத்து விளக்க முயலுவர். இத்தகைய இயல்புடையவர்களே, மூலநூலாசிரியர்களைப் போன்று எக்காலத்தும் சிறப்புடையவர்களாகப் போற்றப்படுவர்.

இம்மூவகைக் கருத்துகளையும் கருத்திலிருத்தி, திருக்குறளையும், அதற்குரிய உரைகளையும் நோக்குவோமானால், அவை வேண்டுமா? அல்லது வேண்டாவா? என்பதைப் பற்றி உறுதியான ஒரு முடிவிற்கு நாம் வர இயலும்,

திருக்குறளின் உரை நலன்

வள்ளுவருடைய உள்ளத்தின் ஆழத்தையும், அறிவின் ஆற்றலையும், ஞானத்தின் தெளிவையும் நம்மால் எளிதில் உணர்ந்துகொள்ள இயலவில்லை. எனவே, திருவள்ளுவரின் உள்ளக் கருத்தினைப் புரிந்துகொள்ளுவதற்கு வழிகாட்டிகளாக உள்ளவர்கள் நம் 'உரையாசிரியர்கள்' என்று நாம் கூறினால். அது தவறாகாது.

'யான்' என்னும் அகப்பற்றையும், 'எனது' என்னும் புறப்பற்றையும் நீத்த பெரியவர்களுடைய பெருமையைப் பற்றிப் பேசும் பகுதியில்,

> ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
> இந்திரனே சாலுங் கரி (குறள். 25.)

என்னும் குறட்பா. இடம்பெற்றுள்ளது. இதற்கு 'ஐந்து புலன்களால் உண்டாகும் ஆசைகளை ஒழித்துவிட்ட துறவியினுடைய

ஆற்றலுக்கு, வானுலகத்தாரின் தலைவனாகிய இந்திரனே போதுமான சான்று ஆவான்' என்பது பொருளாகும்.

இதில் 'இந்திரனே போதுமான சான்று' என்பது எதனால் என்னும் கேள்வியை எழுப்பினால், அதற்கு விடைகள் பல வகையாகச் சொல்லப்படும். முதலில் பழைய உரையாசிரியர் களுள் பரிமேலழகர் கூறுவதைப் பார்ப்போம்.

"தான் ஐந்தவியாது சாபமெய்தி நின்று, ஆற்றல் உணர்த்தினனாகலின் 'இந்திரனே சாலுங்கரி என்றார்[5] என்பது பரிமேலழகருடைய கருத்தாகும். இதிலிருந்து கௌதமரின் மனைவியாகிய அகலிகையிடத்துக் கொண்ட தொடர்புக்காக, ஐம்புலன்களை வென்ற அவருடைய கணவரான கௌதமரிடத்துச் சாபம் எய்தியவன் இந்திரன் என்பது பெறப்படுகிறது.

> இனி, மணக்குடவர் என்னும் உரையாசிரியர்,
> நுகர்ச்சியாகிய ஐந்தினையும் துறந்தானது வலிக்கு அகன்ற விசும்பிலுள்ளார்க்கு நாயகனாகிய இந்திரனே யமையுஞ் சான்று.
> இந்திரன் சான்று என்றது இவ்வுலகின்கண் மிக்க தவஞ் செய்வார் உளரானால், அவன் தன்பதம் இழக்கின்றானாக நடுங்குமாதலான், இது தேவரினும் வலியன் என்றவாறு[6]

என்று குறிப்பிடுகிறார். காளிங்கர் என்னும் உரையாசிரியர் இக்கருத்தை விரிவுபடுத்திக் காட்டுகிறார்.

> ஈண்டுத் தன்பதங் கருதித் தவஞ்செய்யும் நீத்தார் மாட்டுத் திலோத்தமை முதலிய தெய்வ மகளிரை விடுத்து, மற்று அத்தவமழித்துந் தவம் அழியாமை தலைநிற்கையாலும், தனது பதம் விரும்பாமையாலும் தானே சான்றாய் அமையும்[7]

---

5 திருக்குறன். பரிமேலழகர் உரை: பக். 12

6 திருக்குறள் உரை வளம். அறத்துப்பால் பக். 50

7 " " " " பக்.51

என்று விளக்குகிறார். இவ்விரண்டு உரைகளும் 'இந்திரபதவி யென்பது பெறற்கரிய பேறு. அதை அடைவதற்கு அரிய பல தவங்களைச் செய்திருக்க வேண்டும். அரிய பல தவங்களைச் செய்து, இந்திரன் வானவர் தலைவனாகி இருக்கின்றான்" என்ற கருத்தினை எடுத்துரைக்கின்றன.

நாம் நடுநிலையோடு நின்று குறளின் கருத்தினை ஆராய்வோமானால் "இந்திரனை வள்ளுவர் சிறப்பித்துப் பேசுகிறாரா? அல்லது இழித்துப் பேசுகிறாரா?' என்பது எளிதில் புலனாகும். 'குறளை ஊன்றி நோக்குவோமானால், 'ஐந்தவித்தவனும்', அதனால் ஆற்றல்' பெற்றவனுமாகிய துறவி வேறு; ' விசும்புளார் கோமானாகிய இந்திரன் வேறு' என்னும் உண்மை புலப்படும். எனவே, நாம், இக்குறளில், வள்ளுவர் குறிப்பிடும் இருவரும் ஒருவரல்லர் என உறுதியாகக் கூறலாம். ' ஐந்தவித்தவனாகிய முனிவனுடைய ஆற்றலுக்கு, அவனிடம் சாபம் பெற்ற இந்திரனே போதிய சான்றாவான்' என்பதே வள்ளுவர் உள்ளக் கருத்தாக இருக்க வேண்டும்.

'நீத்தார் பெருமை' என்னும் அதிகாரத்தில், பொய்யில் புலவர் முற்றத்துறந்த முனிவர்களுடைய ஆன்மிக ஆற்றலைத்தான் சிறப்பித்துப் பேசுகிறார். தேவர் கோமானாகிய இந்திரன் நூறு யாகங்கள் செய்து இந்திர பதவியை அடைந்திருக்கலாம். அதனால், அவன் 'ஐந்தவித்தானாகி'விட முடியாது. ஐந்தவித்தானாகியிருந்தால், அவன் பிறன் மனைவியை நாடிச் சென்றிருக்க மாட்டான். மேலும், யாகம் செய்தலும், ஐந்தவித்தலும் ஒன்றாகா. வேள்வியைச் செய்து முடிக்கின்றவரை சில விதிமுறைகளுக்குக் சுட்டுப்பட்டு நெறியோடு இருப்பவர்கள், வேள்வியை முடித்துவிட்ட பிறகு பழைய பழக்கவழக்கங்களுக்கு அடிமைகளாகிவிடுவர். ஆனால், ஐம்பொறிகளின் மேல் செல்லும் ஆசைகளை அடக்கியவர்கள், அவ்வைம்பொறிகளின் குறும்புகளை வென்ற மாவீரர்களாவர்; யோகிகளாவர். எனவே, ஐந்தவித்தவனையும், இந்திரனையும் ஒன்றென மயங்குதல் மூலநூலாசிரியரின் கருத்துக்கு முரணானதாகும்.

அவ்வாறானால், மணக்குடவரும் காளிங்கரும் ஏன் இவ்வாறு பொருள் கொண்டனர்? இங்கு, நாம் அவர்களுடைய தற்சார்புப் பண்பினைக் காணுகின்றோம். அவர்களிருவரும் சமண சமயத்தவராவர். சமணசமயத்தில் இந்திரனுக்கு முக்கியமான இடமும், சிறப்பும் தரப்பட்டிருக்கிறது. கடவுளின் இருப்பைப் பற்றிக் கவலைப்படாத சமணர்கள், தேவர் கோமானாகிய இந்திரனுக்குக் கடவுளுக்குரிய உயர்ந்த நிலையைச் சில சமயங்களில் கொடுத்துள்ளனர். ஆகவே, வள்ளுவர் இத்திரனை இழித்துப் பேசுவதாகப்பொருள் கொள்ள அவர்களுடைய உள்ளம் இடம் தரவில்லை. எனவே. அவர்கள் வள்ளுவருடைய உள்ளக்கருத்திற்கு மாறாகப் பொருள் கொண்டனர்.

வேறு பல இடங்களில் தம்முடைய விருப்பு. வெறுப்பிற்குப் பலியாகிவிட்ட பரிமேலழகர். இவ்விடத்தில் நடுநிலையோடு நின்று பொருள் கூற முன்வந்திருக்கிறார். இந்திரனை வேதகாலத்தில் முதற்பெரும் தெய்வமாகப் போற்றிய வைதிக சமயத்தினர், பிற்காலத்தில் பரம்பொருளின் மூவேறு தோற்றங்களான திருமால் சிவபெருமான், பிரமன் ஆகியோருக்கு அத்தனிப் பெரும் தலைமையை அளித்தனர். இந்தகைய கருத்து, நன்கு வேருன்றிவிட்ட காலத்தில் தோன்றியவர் பரிமேலழகர். எனவே, அவருக்கு வள்ளுவர் கருத்தில் எத்தகைய குறையும் இருப்பதாகத் தோன்றவில்லை, அதனால், அவர் வள்ளுவர் வழிநின்று. 'முற்றும் துறந்த முனிவர்களுடைய பெருமைக்குக் கௌதமரிடத்துச் சாபம் எய்திய இந்திரனே சான்றாவான்' என்று உரை எழுத முன்வந்தார்.

"இங்கு, மூல நூலாசிரியர் 'அகலிகை' கதையைத் தான் குறிக்கிறார் என்று நாம் எப்படிக் கூறுவது" என்று நம்மில் பலர் நினைக்கலாம். நாட்டு மக்களுக்கு ஓரளவு தெரிந்துள்ள கதையை வள்ளுவர் எடுத்துப் பயன்படுத்தியுள்ளார் எனக்

கூறினால், அது தவறாகாது. சங்கக்காலத் தமிழ் மக்கள் இராமாயண, பாரதக் கதைகளை ஓரளவிற்கு நன்றாக அறிந்திருந்தனர் என்பதற்குச் சங்க இலக்கியத்திலேயே சான்றுகள் சில உள்ளன. இதை ஏற்றுக் கொள்ள இயலாது என்றால்,'ஐந்தவித்தானாகியஒருபெரியவருடையஆற்றலுக்கு இந்திரன் சான்றாக நிற்கிறான் என்பதை மட்டும் யாரும் மறுக்கமுடியாது எனக் கூறலாம். அதற்கு வேண்டுமானால் வேறு எத்தனையோ கதைகள் உள்ளன. அவற்றுள் ஒன்றை அவரவர்கள் விருப்பத்திற்கேற்பக் காட்டலாம். நம்முடைய நோக்கம் எல்லாம், உரை என்பது மூலநூலாசிரியருடைய உள்ளக் கருத்தைத் திரித்துக் கூறக்கூடாதென்பதே யாகும்.

இவ்விளக்கத்திலிருந்து உரையாசிரியர்களின் மனநிலைகள் மாறுபட்டுள்ளதையும், அதே சமயத்தில் மூலநூலாசிரியருடைய கருத்து வேறுபட்டிருப்பதோடு, பல்வேறு பொருள்களையும் தருவதற்கு இடம்தருதலையும் நாம் உணரமுடிகிறது.

இனி, மற்றொரு குறளைப் பார்ப்போம்!

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (குறள். 55.)

இதற்கு, வேறு தெய்வத்தைத் தொழாதவளாய்த் தன்னுடைய கணவனையே தெய்வமாகக் கொண்டு தொழுது துயிலெழுகின்றவள், "பெய்" என்றால் பெய்யும் மழை! என்பது பொருள்.

இப்பொருளையே, பண்டை உரையாசிரியர் எல்லாரும் எடுத்துரைத்துள்ளனர். ஆனால், இன்றைய 'அறிவு உலகம்" இதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. "ஒரு பெண் மழையே நீ பெய்வாயாக! என்றால் மழை பெய்துவிடுமா?" என்று

வள்ளுவர் கருத்தில் ஐயுறவு கொண்ட அறிஞர்கள், அதற்கு வேறுவகையாக விளக்கம் தந்துள்ளனர்.

"பிற தெய்வங்களை எண்ணாது, தன் கணவனையே தெய்வம் போல் எண்ணி, உள்ளத்தே எழுச்சிகொண்டு செயலாற்றும் பெண்ணால், அவளுடைய கணவனுக்கும் குடும்பத்திற்கும் அவள் வாழுகின்ற சமுதாயத்திற்கும் 'பெய்யெனப்பெய்யும்மழை'போலப்பெரும்பயனும்பெருமையும் உண்டாகும்" என்று ஒரு சாரார் விளக்கம் தருகின்றனர்.

மற்றும் சிலர், 'மனைவி கணவனுக்கு இன்பம் தருவதில் மக்கள் பெய் என்னும் பருவகாலத்தே பெய்யும் மழை போல்வாள்' என்று உரை எழுதியுள்ளனர். இவ்வுரைகளின் மூலம், வள்ளுவரை மூடநம்பிக்கை அற்றவர் என நிலைநாட்ட முயலுகின்றனர்.

இங்கு நாம் ஓர் உண்மையைப் புரிந்துகொள்ள கொள்ளவேண்டும். மூடநம்பிக்கை என்பது என்ன? அது காலத்திற்கும், இடத்திற்கும், மக்கள் மனப்பாங்கிற்கும் ஏற்ப மாறக்கூடியது, நேற்றுவரை நல்ல நம்பிக்கையாக இருந்த ஒன்று, இன்று மூடநம்பிக்கையாகக் கருதப்படலாம். இன்று மூடநம்பிக்கை என்று சொல்லப்படுவது, வருங்கால மக்களுக்குநல்ல நம்பிக்கையாகவும் தோன்றலாம். எனவே இவைதாம், மூடநம்பிக்கை என்று நாம் வரையறுத்துக் கூற இயலாது. மக்களுடைய அறிவு வளர்ச்சிக்கும், சிந்தனைத் திறனுக்கும் ஏற்ப அது மாறக்கூடியது.

சங்கக் காலத் தமிழ் மக்களிடத்தில் மூடநம்பிக்கைகள் பல இருந்தன. இதை, நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அவற்றுள் ஒன்றுதான் இது. சங்கக் காலச் சான்றோர்களுள் மிகக் குறைந்த அளவு மூடநம்பிக்கையுடையவராக வாழ்ந்தவர் வள்ளுவர். 'ஒரு மாபெரும் அறிஞரிடத்தில் மூடநம்பிக்கை இருக்கலாமா? அது அவருக்கு இழுக்கல்லவா? என்று யாராகிலும் ஒருவர் வினவலாம்.

முதலில் 'மூடநம்பிக்கையென்றால் என்ன?' என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். "ஒருவன் வாழுகின்ற சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சிக்குப் பொருந்தாத. பொருளற்ற நம்பிக்கைகளையும், சடங்குகளையும் போற்றுவதையே பொதுவாக மூடநம்பிக்கை"[8] என்பர். இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால், வள்ளுவர் தம்முடைய காலத்திய தமிழ்ச் சமுதாயத்தின் நம்பிக்கைக்கு முரண்படாதவகையில் தம்முடைய கருத்தை விளக்கியுள்ளார் என்றே நாம் கூறலாம்.

உளவியல் அறிஞர்கள் "மூடநம்பிக்கை யென்பது மனிதனது மனநலத்திற்கும், சமுதாயத்தின்கட்டுக்கோப்பிற்கும் இன்றியமையாது தேவைப்படுகின்ற ஒன்று[9] என்று கூறுகின்றனர். எனவே, வள்ளுவர், தாம் வாழ்ந்த காலத்திய மக்கள் சமுதாயத்தில் வேரூன்றிக் கிடந்த ஒரு நம்பிக்கையை, அப்படியே எடுத்துத் தம் குறளில் கையாண்டுள்ளார் என நாம் கூறலாம்.

கற்புடைப் பெண்டிர் பெய்யென்றால் மழை பெய்யும்" என்ற நம்பிக்கை வள்ளுவருக்கு இருந்தது. இது அவருடைய குறையன்று: அவர் வாழ்ந்த காலத்தின் குறையென்றே நாம் கூறவேண்டும். ஏனெனில், அவர்மட்டும் அல்லாமல், வேறு புலவர்களும் அக்காலத்தில் இத்தகைய நம்பிக்கையுடையவர்களாக இருந்திருக்கின்றனர். சான்றாகச் சிலவற்றைக் காண்போம்:

வறனோடின் வையகத்து வான்தரு கற்பினாள்
(கலித்தொகை 16.)

அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையளே
(கலி. 39)

குறவர் மடமகளிர் தாம்பிழையார்
கேள்வர்த் தொழுதெழலால் (கலி. 29.)

---

8 Frazer, J. G. Golden Bough, Part, I, P. 48.

9 Young, K., Social Psychology. P. 389.

வான்தரு கற்பின் மனையுறை மகளிர்

(மணிமேகலை, ஆதிரை, 77)

மற்றும், இடைக்காலப் புலவர்கள் பலரும் இக்கருத்தைப் பொன்னே போல் போற்றியுள்ளனர்.

இன்று, நம்மில் சிலர் கருதுவதைப் போன்று. அன்று வள்ளுவர் கருதியிருக்க இயலாது. இதற்கு. அவருடைய காலச் குழல் அவ்வாறு இருந்தமையே காரணமாகும். அவற்றை அவர் உடன்படுவதால், சமுதாயத்திற்குக் கேடு உண்டாகியிருக்க முடியாது. அவற்றால் கேடு உண்டாகும் என்பதை அவர் அறிந்திருந்தால். புலால் உண்ணுதலையும் கள்ளுண்டலையும், பரத்தையரையும் சூதினையும் கடிந்துரைத்ததைப் போன்று, அவற்றையும் எதிர்த்து அவர் போர்முரசு கொட்டியிருப்பார்.

எனவே, திருவள்ளுவர், இக்கருத்தை உடன்பட்டே பாடியிருக்கிறார் எனத்தான் நாம் கூறவேண்டும். அதே சமயம் அவருடைய காலத்தில் அவர் ஒரு சிறந்த பகுத்தறிவுவாதியாக' விளங்கியவர் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. ஏனெனில், அவருடைய நூலில், அறிவியத் (Rationalism) திற்கே சிறப்பிடம் தரப்பட்டுள்ளதை யாரும் மறுக்க இயலாது. எனவே, நாம் திருக்குறளின் பொருளைப் புரிந்து கொள்ள முயலுகின்ற பொழுது, அந்நூலாசிரியரின்காலச்சூழலையும் ஓரளவிற்கு அறிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் அவருடைய உள்ளத்தைத் தெளிவாக ஓரளவிற்கேனும் புரிந்துகொள்ள இயலும்.

இத்தகைய தவறுகளைப் பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களும் செய்துள்ளனர். தம் காலத்திய கருத்தினையும், நம்பிக்கையையும் மூல நூலாசிரியருடைய கருத்தாகத் திணிக்க முயன்றதை, 'கேட்டதாய்', 'அறிவறிந்த மக்கள்" என்னும் தொடர்களுக்குப் பரிமேலழகர் வரைந்துள்ள உரைகள் எடுத்துரைக்கின்றன.

இம்முறை போற்றத் தக்கதும் அன்று; பின்பற்றத் தக்கதும் அன்று. மூலநூல் ஆசிரியரின் கருத்தினை மறைப்பதற்குச்

செய்யப்படும் இருட்டடிப்பு வேலை ஈதாகும். இத்தகைய உரைகளினால், மூலநூலின் உண்மைச் சிறப்புப்புலனாகாமல் போய்விடும். இத்தகைய உரைகளைப் புரிந்து கொள்ளுவதில் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

அடுத்து இன்னுமொரு வினாவிற்கு நாம் விடைகாண வேண்டும். 'திருக்குறளுக்கு ஓர் உரை இருந்தால் போதாதா? பல உரைகள் தேவையா?' எனச் சிலர் கேட்கின்றனர். இது ஒரு நல்ல கேள்வி; நன்றாகச் சிந்தித்து விடை காணவேண்டிய கேள்வி,

மூலநூலாசிரியருடைய கருத்தை அறிவதற்குப் பயன் படுவன உரைகள் என்று நாம் முன்னர்க் கண்டோம். 'மூல நூலாசிரியர் கருத்தை அறிவதற்கு ஓர் உரை போதாதா?" என்பது, இப்பொழுது கேட்கப்படும் கேள்வி. ஒவ்வொரு 'மனிதனும் சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினோனாக' உள்ளான். அவன் தன்னுடைய அறிவையும், அனுபவத்தையும் கொண்டே உலகைப் புரிந்துகொள்ள முயலுகிறான். இதற்கு உரையாசிரியர்கள் விதிவிலக்கல்லர். ஒவ்வொருவரும். ஒவ்வொரு கோணத்தில் நூலாசிரியரைப் புரிந்துகொள்ள முயலுகின்றனர். ஒரேயோர் உரைமட்டும் இருக்குமானால், குறிப்பிட்ட ஒருவருடைய 'வரம்புக்குட்பட்ட' அறிவையும், அனுபவத்தையும் வழிகாட்டியாகக் கொண்டு, நாம் மூலநூலைப் பார்க்கநேரிடும்.

அப்பொழுது அவ்வுரையாசிரியரின் விருப்பு வெறுப்புகள் என்னும் வண்ணம் பூசப்பட்ட கண்ணாடியின் மூலம், மூல நூலாசிரியரை நாம் பார்ப்பதாக முடியும். இக் குறையைப் போக்குவதற்கு உரிய வழி, பல்வேறு வகையான உரைகளின் மூலம், மூல நூலாசிரியரின் உள்ளத்தைப் புரிந்துகொள்ள முயலுவதாகும். ஓர் ஆசிரியர், குறிப்பிட்ட ஒரு பகுதிக்கு மூல நூலாசிரியரின் கருத்தை மாற்றியோ, திருத்தியோ, திரித்தோ உரை எழுதியிருந்தாலும், பல உரைகளைப் படிக்கின்றபொழுது, அவற்றுள் எதைத்தான் மூலநூலாசிரியர் கூறியிருப்பார் என்பதை நம்மால் ஒருவாறு உய்த்துணர

முடியும். இவ்வகையில், திருக்குறளுக்கு எழுதப்பட்டுள்ள உரைகள் பல நமக்குக் கைகொடுத்து உதவுகின்றன.

திருவள்ளுவருக்கு இறைவனுடைய இருப்பில் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. அவர் இறைவனைப் பழிப்பதாகச் சொல்லுவதும், இறைவனைக் குறைகூறுவதாகக் காட்டுவதும், நாம் அவருக்குக் களங்கம் கற்பிப்பதாகும்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (குறள். 1062)

என்னும் குறட்பாவிற்கு, "உலகத்தைப் படைத்தவன் உலகில் சிலர் இரந்தும் உயிர் வாழுமாறு படைத்திருப்பானானால், அவன் இரப்பவரைப் போன்று எங்கும் அலைந்து கெடுக[10] என்பது பொருளாகும்.

'உலகத்தைப் படைத்தவன்' என்பது முழுமுதற் பொருளாகிய இறைவனைக் குறிப்பதாகச் சிலரும், உலகத்தைப் படைக்கும் கடவுளாகிய பிரமனைக் குறிக்கிறது என்று வேறு சிலரும். உலக நடையை மக்களுக்கு வழங்கும் மன்னனைக்[11] குறிக்கிறது. என்று மற்றும் சிலரும் உரைவிளக்கம் தந்துள்ளனர். இவற்றுள் முதலிரு உரைகளும், வள்ளுவருடைய கொள்கையை விளக்குவதாக அமையவில்லை. மெய்ப்பொருள் கண்ட மெய்யறிவாளராகிய வள்ளுவர், கடவுளைக் குறை கூறுவதாகக் கூறுவது நம்முடைய அறியாமையைப் புலப்படுத்துமேயொழிய, மூலநூலாசிரியரின் உள்ளத்தைப் பிரதிபலிக்காது. மேற்கண்ட மூன்றாவது கருத்து ஓரளவிற்குப் பொருந்தக் கூடியது. இதைவிட, இதற்கு நல்லதோர் அமைதியை நாம் கூறலாம்.

வள்ளுவர், அரிய கருத்துகள் சிலவற்றை நாடகப் பான்மையில் எடுத்துரைக்கின்றார். ஒரு நாடக மாந்தனைப்

---

10 திருக்குறள் பரிமே. உரை. பக். 398.

11 நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே' (புறம். 312) என்பது இதற்குச் சான்றாகக் காட்டப்படும்.

படைத்து, அம்மாந்தன் பேசுவதாகக் கூறும் 'இலக்கியத் திறனை'ச் சில இடங்களில் அவர் கையாண்டுள்ளார். 'படைச் செருக்கு' என்னும் அதிகாரத்தில், போர்க்களக் காட்சியொன்றைச் சொற்சித்திரமாக வள்ளுவர் தீட்டிக் காட்டுகிறார். ஒரு வீரன், தன் பகைவர் படையைச் சேர்ந்த மற்றொரு வீரனைப் பார்த்துத், தன் தலைவனுடைய பேராற்றலையும், மாவீரத்தையும் எடுத்துரைக்கின்ற காட்சி, நம்மை வியப்பில் ஆழ்த்துவ தாகும். வீரன் பேசுகின்றான்:

> பகைவரே! என்னுடைய தலைவன்முன் எதிர்த்து நிற்காதீர்கள்! என்னுடைய தலைவன்முன் எதிர்த்து நின்று மடிந்து (வீரக்) கல்வடிவாய் நின்றவர் பலர்,

என்னும் கருத்தமைய,

> என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர் பலர்என்னை
> முன்நின்று கல்நின் றவர் (குறள்.771)

என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

இங்கு வள்ளுவர் பேசவில்லை. அவர் படைத்த, நாடக மாந்தனாகிய வீரன் பேசுகிறான். இதைப் போன்றே 'இரவச்சம்' என்னும் அதிகாரத்தில், அன்றாட வயிற்றுப் பிழைப்பிற்கு அல்லற்பட்டு, ஆற்றாது. அழுது, கண்ணீர் வடிக்கும் பிச்சைக்காரன் ஒருவன், வாழ்க்கையில் வெறுப்புற்று, மனம் நொந்து, 'இதுவும் ஒரு வாழ்வா? இப்படித்தான் நான் வாழ வேண்டுமா? இப்படித் துன்பப்படுமாறு என்னைப் படைத்தவன் எவ்வளவு ஈவு இரக்கம் அற்றவனாக இருக்கவேண்டும்? அவன் ஒருநாளைக்கு இப்படி அல்லற்பட்டால் தெரியும் அவனுக்கு" என்று எண்ணுகின்றான்; மனக்கொதிப்புறுகிறான். உடனே அவன், கடவுளுக்கே சாபம் கொடுக்கின்றான். இவ்வாறு அவன் சாபம் கொடுப்பதாக இக்குறளை நாம் கொண்டால். திருவள்ளுவருடைய கலையுணர்வும், திருக்குறளின் இலக்கியப் பண்பும் நமக்கு இனிது புலனாகும். அதே சமயத்தில், மூல நூலாசிரியருடைய உள்ள உணர்ச்சிகளை நாம் மதித்துப் போற்றியவர்களாவோம்.

உரைகள் பல திருக்குறளுக்கு எழுதப்பட்டுள்ளமை யால்தான், நாம் திருவள்ளுவருடைய உள்ளத்தை எவ்வகை யிலேனும் ஆராய்ந்து அறிவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதற்கு மேற்கண்ட விளக்கம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நல்ல காலமாகத் திருக்குறளில் பாட வேறுபாடுகள் அதிகம் இல்லை. பரிமேலழகர் உரையில் மட்டும் நாற்பத்தைந்து பாடவேறுபாடுகள் காட்டப்படுகின்றன. அவற்றுள் பொருத்தமானவை எவையென்பதை நாம் ஆராய்ந்தறிய வேண்டியவர்களாக இருக்கின்றோம். உரைகள் பல ஒரு நூலுக்கு இருக்குமானால், சிறந்த 'பாடங்கள்' நமக்குக் கிடைக்கும். உரைகள் இல்லையானால், 'சரியோ தவறோ' என்ற ஆராய்ச்சிக்கு இடமில்லாமல், 'மாடுகளும் வழக்கத்தால் செக்கைச் சுற்றும்' என்ற முறையில், கிடைத்துள்ள ஒரு பாடம் தவறாகத் தோன்றினாலும், நாம் அதையே இறுகப் பிடித்துக் கொண்டு, உண்மையை அறிய வேறு வழியில்லாமல் மனநிறைவு அடைவோம்.

திருக்குறளுக்கு எழுதப்பட்டுள்ள பழைய உரைகளுள் பரிமேலழகர் உரைக்கு அடுத்த நிலையில் சிறப்புடையதாகக் கொள்ளத்தக்கது காளிங்கருடைய உரையாகும். அதில், சில குறட்பாக்களின் மூலபாடங்கள் பழைமையானவையாக இருப்பதோடு சிறப்புடையனவாகவும் உள்ளன. அவற்றுள் இரண்டொன்றை இங்குக் குறிப்பிடுதல் வள்ளுவருடைய உள்ளத்தைப் புரிந்துகொள்ள உதவுமென நம்புகின்றேன்.

"வெருவந்த செய்யாமை" அதிகாரத்தில் 'கடி தோச்சி மெல்ல வெறிக' என்ற பாடமே பரிமேலழகர் கொண்டது. காளிங்கர் கண்ட பாடம் 'கடிதோக்கி மெல்ல வெறிக' என்பது ஆகும். எறிதல், வீசுதல் என்னும் பொருளதாகிய 'ஓச்சுதல்' என்பதிலும், 'உயர்த்தல், ஓங்குவித்தல்' என்ற பொருளதாகிய 'ஓக்குதல்' என்பது பொருட் சிறப்புடையதாதலோடு, பின்வரும் சீராகிய 'நெடிதாக்கம்' என்பதனோடு ஒரூஉ வெதுகைத் தொடை சிறப்புடையதாய்ப் பாடற்கு ஓசை நயமூட்டுதல் தேர்ந்து கொள்ளுக. "உழவு" என்ற அதிகாரத்தில் 'பலகுடை

நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்' என்று பாடங் கொன்டுள்ளார் பரிமேலழகர். காளிங்கர் கண்ட பாடம் பலகுடை நீழலுந் தங்கொடைக் கீழ்க் காண்பர்' என்று பாடங் கொண்டுள்ளளார் பரிமேலழகர். காளிங்கர் கண்ட பாடம் பலருடைய நீழலுந் தங்கொடைக் கீழ்க் காண்பர்" என்பது, உழுதுண்டு உலகு ஊட்டும் வேளாண் மாந்தர்க்கு இலக்கண வகையால் தமக்கெனக் குடையின்மை கண்ட பரிமேலழகர் 'தங்குடை' என்பதற்குத் 'தமது வேந்தன் குடை ' என ஆகு பெயர்ப் பொருள் கண்டு பொருத்தினர். ஆயின், காளிங்கர், வள்ளுவனார் தெள்ளிய வாய்மொழி 'தங்கொடை' என்றே கொண்டு இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைக்கும் பழ விறலோர் கொடைத்திறனைக் குறித்ததாகக் கூறினர்.[12]

இப்பகுதி பரிமேலழகர் கொண்ட பாடத்தினும் காளிங்கர் கொண்டபாடமே சிறப்புடையது என்பதைத் தெளிவுறுத்துகிறது. இதைப் போன்றே, சிலவிடங்களில் மணக்குடவர் கொண்ட பாடத்திலும் பரிமேலழகர் கொண்டுள்ள பாடம் பொருத்தமும் கருத்தாழமும் உடையதாக இருப்பதைக் காணுகின்றோம்.

எனவே, திருக்குறள் போன்ற பழம்பெரும் நூல்களுக்கு உரைகள் பல எழுதப்படுவது போற்றி வரவேற்கத்தக்க முயற்சியாகும். அவ்வுரைகள் ஆசிரியரின் உள்ளத்தைக் காண்பதற்குப் பயன்படுத்தப்படும் தொலை நோக்கியாக இருக்க வேண்டுமேயொழிய, ஆசிரியருடைய உள்ளத்தை மூடி மறைத்திடும் உரையாக அமையக்கூடாது. இதனைக் கருத்தில் கொண்டு, காலத்திற்கேற்ற – உகந்த–தேவை யான–புத்துரைகளை முப்பாலிற்கு வழங்க அறிஞர்கள் முன்வருவார்களாக!

---

12 பழனியப்பபிள்ளை.T.P..திருக்குறன்பொருட்பால்.காளிங்கருரை, பரிப்பெருமாளுரை, முகவுரை பக்.3–4

8. தேசிய இலக்கியம்

"தனிப்பட்ட மனிதர்களால் உருவாக்கப்பட்ட சில படைப்புகள், மக்களின் சில நுட்பமான உணர்ச்சிகள், உள்ளக் கிடக்கைகள், விளைவுகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதில் வியத்தகு ஆழமும் வலிமையும் பெற்றுள்ளன. அவை அனைத்தும் மக்களின் படைப்பாக மாறிவிடுகின்றன. அத்தகையபடைப்புகளில்ஒன்றுதான்திருக்குறள்...திருக்குறள் தொலைதூரத்தில் உள்ள ஒரு நாட்டின் நினைவுச்சின்னம் மட்டும்அன்று!அதுஉயிர்த்துடிப்புவாய்ந்தநூலாகும்.பண்டைய இந்திய மனிதாபிமான இலக்கியமான திருக்குறள், தமிழ் மக்களின் சிந்தனை முதிர்ச்சியின் சிறப்பையும், இந்தியாவின் தேசியப் பண்புகளையும் பெரிதும் எதிரொலிக்கிறது" என்பது அண்மைக் காலத்தில், ருஷிய மொழியில் திருக்குறளைச் செய்யுள் வடிவத்தில் மொழிபெயர்த்துள்ள இப்ராகிமோல் எனும் அறிஞரின் பாராட்டுரையாகும். இவ்வறிஞர் தந்துள்ள ஒளியினைக் கொண்டு 'திருக்குறள் தேசிய இலக்கியமாக' விளங்கும் திறத்தைக் காண்போம்.

தேசிய இனம்

தமிழ் மக்களை, மொழிவழித் தோன்றிய தேசிய இனத்தவராகவும், இந்திய மக்களை நாட்டின் அடிப்படையில் ஒன்றாக வாழும் ஒரு தேசிய இனத்தினராக (Nation) வும் கூறுவது இக்காலத்திய வழக்கமாக இருந்துவருகிறது. தேசியம் என்னும் சொல்லின் பொருள் நெகிழ்ச்சிமிக்கது; எளிதில் ஒரு வரையறைக்கு உட்படுத்த இயலாதது. எனவே, தேசிய

இனம் என்னும் தொடரின் பொருளைத் தெளிவுறுத்துவது எளிய செயலன்று. இத்தொடருக்குரிய நேரான பொருள் உரிமையுடன் ஒன்றாகப் பிறந்தவர்களின் திரட்சி" என்ப தாகும். இதிலிருந்து. குறிப்பிட்ட ஓர் இடத்தில் ஒன்றாகப் பிறந்து. விருப்பு வெறுப்புகளிலும். இன்ப துன்பங்களிலும், வெற்றி தோல்விகளிலும் பங்கு கொண்டு வாழ்வோரின் கூட்டத்தைச் சுட்டுவதற்கே. முதன் முதல் இத்தொடர் பயன்படுத்தப்பட்டது என்பது புலனாகின்றது.[1] தேசிய இனத்தை உருவாக்கும் பண்புகளை நாம் இருவகையாகப் பாகுபடுத்தலாம்.

முதல் வகையினைத் தற்சார்பற்ற பண்புகள் (Objective Characteristics)எனவும்,இரண்டாம்வகையினைத்தற்சார்புடைய பண்புகள் (Subjective Charac– teristics) எனவும் கூறலாம். முதல் வகையில் குறிப்பிட்ட மக்கள் வாழுகின்ற நாட்டின் நிலவியல் அமைப்பு. நாட்டின் வரலாறு. அவர்களுடைய சமுதாயத்தின் பொருளாதார அமைப்புப் போன்றன அடங்கும். இத்தகைய தனிமனிதப் பண்புகளும், சமுதாய இயல்புகளும் பின்னிப் பிணைந்தும் கலந்தும் உறவாடும் பொழுதே. இது ஒரு தேசிய இனம் எனச் சுட்டிக் காட்டத்தக்க வகையில், மனித இனம் பல்வேறுகிளைகளாகப் பிரிந்து வளருகிறது. எனவே. 'தேசிய இனம் என்பது ஒரு நாட்டையோ, அதில் வாழும் மக்களையோ, (பொதுவான உணர்வுகளால் ஒருங்கு இணைக்கப்பட்ட) மக்கள் குழுக்களையோ குறிப்பதாகும். அம்மக்கள் குழு, தங்கள் – குழுவிற்கே முதன்மையான பற்றுறுதியுடையதாக இருக்க வேண்டும்.[2]

தேசிய இனம் என்பதைக் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் ஆன்மா எனலாம். அல்லது ஓர் ஆன்மிகக் கொள்கையாகக் கூறலாம். இக்கொள்கையை உருவாக்குவன இருவகை உணர்வுகளாகும். உண்மையில் அவை இரண்டும் ஒரே

---

1 Kohn H. The idea of Nationalism, P. B

2 Kohn H., the Idea of Nationalism P. 12.13

கருத்தின் இரு பகுதிகள் எனலாம். வளமிக்க பாரம்பரிய நினைவுகளைப் பொதுவான உடைமையாக ஒரு சமுதாயம் கொண்டிருப்பது முதல்வகை உணர்வாகும். ஒன்றாகச் சேர்ந்து வாழ விரும்பும் விருப்பமும், மரபுரிமையாகப் பெற்ற பேற்றினைக் கூட்டாக அனுபவிப்பதில் ஒன்றுபட்ட உள்ள உணர்வும், அதன்வழி நாளடைவில் சிறக்கும் இணக்கமும் இரண்டாவது உணர்வாகும்[3] என்னும் விளக்கம் இங்குக் கருதத்தக்கது. வளமிக்க பாரம்பரிய நினைவுகளை ஒரு சமுதாயம் பட்ட துன்பங்களும், செய்துள்ள தியாகங்களும் சாதித்த சாதனைகளும், பெற்ற பெரும்புகழும் பற்றிய நினைவுகள் அனைத்தும் கலந்த ஒன்றையே. 'வளம் மிக்க பாரம்பரிய நினைவுகள்' எனக் கருதலாம். தனி மனிதர்கள் ஒன்றாகக் கூடி வாழ்வதற்கு விரும்புவதும், தாங்கள் பெற்ற மரபுவழிப் பண்பாட்டுச் செல்வத்தை மகிழ்வுடன் அனுபவிப்பதும், அதைப் போற்றி வளர்த்து, அடுத்து வரும் தலைமுறையினருக்கு வழங்கிச் செல்லுவதில் காட்டும் ஆர்வமும் ஒரு தேசிய இனத்தை உருவாக்குகின்றன.

இத் தேசியப் பண்புகள் ஒரு நாட்டின் இலக்கியத்தில் எதிரொலிப்பதைக் காணலாம். ஏனெனில், சமுதாயத்திற்கும் இலக்கியத்திற்கும் இடையே உள்ள தொடர்பு இருவழிப் பரிமாற்றம் உடையதாகும். சமுதாய உந்துதல்களின் விளைவாக மட்டும் இலக்கியம் தோன்றுவதில்லை; சமுதாய விளைவுகளுக்குரிய காரணமாகவும் இலக்கியம் விளங்கி வருகிறது. ஆகவே, ஒரு தேசிய இனத்தின் இயல்புகள், அவ்வினம் படைக்கும் இலக்கியத்தில் எதிரொலிப்பதில் வியப்பு இல்லை.

தேசிய இலக்கியம்

ஒரு தேசிய இனத்தின் உள்ளார்ந்த உணர்வுகளையும் தனிச்சிறப்பு வாய்ந்த பண்புகளையும் வெளிப்படுத்துவதில் இலக்கியக் கலை ஒப்புயர்வற்றதாகும். தேசிய

---

3 Barker, Ernast, National Character and the Factor in the Formation–P. 42.

இலக்கியம்அவ்வினத்தின் வரலாறு, சிந்தனை வளர்ச்சி, நம்பிக்கைகள், புராணக் கதைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும். மற்றும் அத்தேசிய இனத்தின் முழுமையான கருத்தைக் கவருவதாகவும் அவ்விலக்கியம் விளங்கும்.

கி.மு.ஆறாம் நூற்றண்டில், சீனாவில் சிறப்புற்று விளங்கியவர் கன்பூசியசு என்னும் பேரறிஞராவார். அவருடைய முதுமொழிகள் (Aphorisms) அண்மைக்காலம் வரையில் சீனாவின் தேசிய இலக்கியமாகப் போற்றப்பட்டு வந்தது– மாண்புமிகு கிரேக்கத்தின் மூத்த கவிஞர் ஹோமர் அவருடைய ஈலியத்து (Iliad)ம் ஒதீசியமும் (Odyssey) கிரேக்க நாட்டின் தேசிய இலக்கியங்களாகும். விர்ஜிலின் ஏனியத்தை (Aeneid) ரோமாபுரியின் தேசிய இலக்கியமாகப் போற்றினர். இந்தியாவில் தேசிய இலக்கியங்களாக இராமாயணமும் பாரதமும் பாராட்டப்படுவதை நாம் அறிவோம். இவற்றைப் போன்றே,ஜான்பனியனின் புனிதப் பயணியின் முன்னேற்றமும் (Pilgrims Progress), மில்டனின் துறக்க நீக்கமும் (Paradise Lost) இங்கிலாந்தின் தேசிய இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. வால்ட் விட்மனின் புல்லின் இதழ்களை (Leaves of grass) அமெரிக்காவின் தேசியஇலக்கியமாக அறிஞர்கள் போற்றுகின்றனர்.

தேசிய இலக்கியம் என்பது ஒரு தேசிய இனத்தின் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாகும். மேலே குறிப்பிடப்பட்ட இலக்கியங்கள் அனைத்தும் அந்தந்தத் தேசிய இனத்தின் பண்பாட்டைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவற்றைப் போன்றே,திருக்குறளும்தமிழரின்பாண்பாட்டைச்சிறப்பாகவும் இந்தியப் பண்பாட்டைப் பொதுவாகவும் உலகிற்கு உணர்த்தும் சிறப்பு உடையதாகும்.

திருக்குறள் தேசிய இலக்கியமாகுமா?

திருவள்ளுவரின் திருக்குறள், அனைத்துலக மனிதனைப் (universal Man)பாடுகிறது. அதில், 'தமிழ் தமிழர், தமிழ்நாடு' என்னும் குறிப்புகளோ, 'நாவலந்தீவு, பாரத தேசம் எனும் குறிப்புகளோ யாண்டும் காணப்படவில்லை. "இந்நிலையில் சாதி, சமய, இன, மொழி, நாடு முதலிய வேற்றுமைகளைக் கடந்த ஒரு நூலினை, பொதுமை அறத்தை அறிவுறுத்தும் பொதுமறையைத் 'தேசியம்' எனும் குறுகிய எல்லைக்குள் அடக்கி, 'தேசிய இலக்கியம்' எனக் கூறலாமா?" என்னும் ஐயம் நமக்கு எழலாம்.

'தேசியம் என்பது என்ன?' என்பதை ஓர் அளவிற்குப் புரிந்து கொண்டவர்கள்கூட, அனைத்துலகத் தேசியப் (internationalism) பண்பாடு என்பது, யாதாகிலும் ஒரு தேசியத்தில் தோன்றி உலகளாவி நிற்பது என்பதை நன்கு அறிவர். 'தேசியம் சாராத பண்பாடு' என ஒன்று உலகில் இருப்பதாகக் கூற இயலாது. இதைப் போன்றதுதான், 'உலகப் பொதுமறையாகிய திருக்குறள் தேசியப் பண்பு உடையதாக இருக்க இயலாது' எனக் கூறுவதுமாகும். அனைத்துலகப் பண்பாட்டின் கருத்துகள் ஒரு நாட்டு மக்களின் கருத்தைக் கவர வேண்டுமானால், அந்நாட்டுமக்கள் பேசும் மொழியில், அவர்களுடைய வாழ்க்கைச் சூழலுக்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற வகையில் அக்கருத்துகள் எடுத்துரைக்கப்பட வேண்டும்.

திருக்குறள் இயற்றப்பட்டதன் முதன்மையான நோக்கம், தமிழ் மக்களுக்கு அறத்தின் மாட்சியை அறிவுறுத்துவதே யாகும். எந்நாட்டு மக்களும் தங்களுடைய தேசியப் பண்பாட்டின் சூழ்நிலையையும், தங்கள் வாழ்க்கையில் அதன் தாக்கத்தையும் புறக்கணித்துவிட்டு, அந்நாட்டில் வாழ்ந்துவிட இயலாது. ஏனெனில், அதன் மூலமாகத்தான் அனைத்துலகத் தேசியப் பண்பாட்டின் இயல்புகளையும், கொள்கைகளையும் அவர்கள் உணர்ந்து போற்றக் கூடியவர்களாக உள்ளனர்.

இவ்வாறே, தமிழ் மொழியினையும் அம்மொழி வளர்த்துள்ள பண்பாட்டினையும் புறக்கணித்துவிட்டு, அனைத்துலகக் கோட்பாட்டை மட்டும் திருக்குறள் அறிவுறுத்தவில்லை! இந்த மண்ணிற்கேயுரிய எண்ணங்களையும், நெறிகளையும், நம்பிக்கைகளையும் திருக்குறளில் நாம் காணுகின்றோம்! அவை தமிழர்க்கு மட்டும் அன்றி, இந்தியருக்கும் இயைந்து வருவனவாக உள்ளன. சான்றாக ஒன்றைக் காண்போம்.

அறவினை யாதெனில் கொல்லாமை (குறள் 321)
ஒன்றாக நல்லது கொல்லாமை (குறள் 323)
நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி (குறள் 324)
அருளல்லது யாதெனில் கொல்லாமை (குறள் 254)
அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று (குறள் 259)
கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும் (குறள் 260)
கொல்லா நலத்தது நோன்மை (குறள் 984)

என்னும் குறட்பாக்களில் கொல்லாமையைத் திருவள்ளுவர் தலைசிறந்த அறமாகப் போற்றுகின்றார். இது சமண சமயத்திற்கே முழுமையாகவும், பௌத்த சமயத்திற்குப் பேரளவும் உரித்தான கொள்கையாகும். இக்காலத்திய சைவ, வைணவ சமயங்களுக்கும் இது அடுத்தபடியாகப் பொருந்துவதாகும். கிறித்துவ, இசுலாமிய நெறிக்கும் இது பொதுவகையில் பொருந்தும். ஆயினும், அப்பொருத்தம் தொலைப்பொருத்தமேயாகும். இவ்வகையில் நோக்குகின்ற பொழுது, திருக்குறள் உணர்த்தும் கொல்லாமையும் புலால் மறுத்தலும் இந்தியத் தேசியப் பண்பாக விளங்குவது புலனாகின்றது. இன்று, இப்பண்பு அனைத்துலகத் தேசியத்தின் சிறப்புமிக்க இலட்சியங்களுள் ஒன்றாகப் போற்றப்படுவதைப் பார்க்கின்றோம். எனவே, திருக்குறளை ஒரு தேசிய இலக்கியமாகக் கொள்ளுவதில் தவறில்லை.

இந்தியத் தேசிய இலக்கியம்

திருக்குறள் குடும்ப வாழ்க்கையை வானளாவப் புகழ்ந்து பேசுகிறது.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை (குறள் 49)

என்பது வள்ளுவர் வாய்மொழி, அன்பு மனைவியும் ஆருயிர்க் கணவனும் இல்லறத்தை நல்லறமாக நடத்துவதன் மூலம், மனித வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோளான தன்னைத்தான் உணர்தலை–ஆன்மிக விடுதலையை–அடைய முடியும் என்பது தம் முன்னோர்களின் நம்பிக்கை. இதையே,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (குறள் 50)

என வள்ளுவர் அறிவிக்கின்றார். இன்றும் நம் தேசியப் பண்பாட்டில் தலைகிறந்து விளங்கும் பண்பு, அன்பான குடும்ப வாழ்க்கையேயாகும். அந்த இல்வாழ்க்கையின் கடமைகளுள் ஒன்றாக 'விருந்தோம்பல்' போற்றப்பட்டு வருகிறது.

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமானால், மனிதப் பண்புகள் நிறைந்த மனிதனாக வாழக் கற்க வேண்டும். அறிவில் 'அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கள்பண்பு இல்லாதவர்' என்பது வள்ளுவர் துணிவாகும். மனிதப் பண்பு என்பது யாது? பிறர் துன்பத்தைக் கண்டு உள்ளம் உருகுவதும். அத்துன்பத்தைத் தன் துன்பமாக உணர்ந்து, அதை நீக்க முயல்வதுமே மனிதப் பண்பு. இம் மனிதப் பண்பின் அடித்தளம் அன்பாகும்.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (குறள் 60)

என்பது வள்ளுவர் வாக்கு. அவ்வன்பின் வழியில் 'பகுத்து உண்டு பல்லுயிர் ஓம்புதல்' சிறந்த அறமாகும். உலகில் உள்ள எல்லா உயிர்களையும் மதித்துப்போற்றுதல் (Reverence for life) வள்ளுவத்தின் உயிர்நாடியாகும்.

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை (குறள். 315)
இன்னா எனத்தான் உணர்ந்தமை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல் (குறள் 316)

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை (குறள் 317)
தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல் (குறள் 318)

இக்குறட்பாக்கள் உணர்த்தும் நெறியை, இக்காலத்தில் 'அகிம்சை' நெறி எனப் போற்றுகிறோம். இன்றைய இந்தியப் பண்பாட்டிலும் இப்பண்பு சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

ஊழ்வினையில் நம்பிக்கை நம்மிடையே நெடுங்காலமாக இருந்துவருகிறது.வள்ளுவரும்ஆற்றல்மிகுந்ததுஊழ்வினை என்பதை ஒப்புக் கொள்ளுகின்றார்.

ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும் (குறள் 380)

என்பது அவர் வாக்கு. ஆனால், அதன் வேகத்தால் உண்டாகும் விளைவுகளைக் கட்டுப்படுத்தவும் குறைக்கவும் முயலுமாறு அவர் தூண்டுகிறார். இந்நம்பிக்கை இந்திய மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒன்று.

இவை யாவற்றையும்விட 'வேற்றுமையிலே ஒற்றுமை காண்பது' சிறப்புமிக்க நம் தேசியப் பண்பாகும்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (குறள் 972)

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் (குறள் 505)

என வேற்றுமையிலே ஒற்றுமை காணுமாறு' வள்ளுவர் அறிவுறுத்துகின்றார். சாதியால், தொழிலால், செல்வத்தால் பிளவுபட்டு, பல்குழுவாகப் பிரிந்து பாழ்செய்யும் உட்பகையை

வளர்த்து அல்லல்படும் மக்களுக்கு, ஒன்றுபட்டு வாழ அவர் வழிகாட்டுகின்றார்.

நம்முடைய இந்திய அரசியல் அமைப்பு (Indian Constitution) ஒவ்வொரு குடிமகனுக்கும் சிந்திக்கும் உரிமையையும் பேச்சு உரிமையையும் அளிக்கின்றது.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் 358)

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் 423)

என்னும் பாக்களில் திருவள்ளுவர் சிந்திக்கும் உரிமையையும் பேச்சுரிமையையும் போற்றுவதைக் காணலாம்.

இந்தியக்குடியரசுசமயச்சார்பற்றது(SecularState).அஃதாவது குறிப்பிட்ட எந்தச் சமயமும் அரசின் சமயமாகாது. திருக்குறளில் பல்வேறு சமயக் கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு சமயத்தையோ தெய்வத்தையோ, திருவள்ளுவர் சுட்டவில்லை! எல்லாருக்கும் பொருந்தி வரக்கூடிய பொய்தீர் ஒழுக்க நெறியையே திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். இவ்வகையிலும் திருக்குறள் நம் தேசியப் பண்பினைப் பிரதிபலிக்கின்றது.

இவ்வாறு நம் தேசியப் பண்புகளை முன்னைப் பழைமைக்குப் பழைமையான தாகவும், பின்னைப் புதுமைக்குப் பெயர்த்தும் அப் புதுமையானதாகவும் உணர்த்துகின்ற இந்திய இலக்கியம் திருக்குறள் ஒன்றேயாகும். எனவே, நாம் மயிலைத் தேசியப் பறவையாகவும் புலியினைத் தேசிய விலங்காகவும் போற்றுவதைப்போன்று,திருக்குறளைத்தேசியஇலக்கியமாகப் போற்ற வேண்டும். தனி மனிதர்களாகிய நாம் போற்றினால் போதாது. நம்முடைய இந்திய அரசு ஏற்றுப் போற்ற முன்வர வேண்டும். அதற்கு நிறுவன அமைப்புகள் வாயிலாக நாம் முயல்வோமாக!

9. ஒளிவிளக்கு

மனித வாழ்க்கையைப் பயன்மதிப்பு உடையதாக எல்லா நாட்டினரும் போற்றி வருகின்றனர். மனித வாழ்க்கையின் பயன்மதிப்பைப் பெருக்குவதற்கும் மிகுதிப்படுத்துவதற்கும் வழிகாட்டுவதையே. அறம்பாட வந்த அறவோர்கள், தம் குறிக்கோளாகக் கொண்டனர். இவ்வடிப்படையிலேயே. உலகின் பல பகுதிகளிலும் அறவியல் சிந்தனை வளர்ச்சி யுற்றிருப்பதைக் காணுகின்றோம். அறவியல் சிந்தனையின் வளர்ச்சியில் மூவகைப் படி நிலைகள் முனைப்புடன் தோன்றுகின்றன.[1] அவை, உலக அறவியல் சிந்தனையின் நோக்கையும் போக்கையும் புரிந்துகொள்ளப் பேருதவியாக உள்ளன.

ஒரு சமுதாயத்தில் வாழுகின்ற மக்களுள் பெரும் பாலோருக்கு தன்மையை உண்டாக்கும் பழக்கவழக்கங்களை, ஒழுகலாற்று நெறிமுறைகளாகப் போற்றுவது அறவியலின் அரிச்சுவடியாகும். இதனை, வழக்காற்று ஒழுக்கநெறி (Customary morality) என்பர். இது மனித சமுதாயத்தில் நாகரிகம் அரும்பத் தொடங்கியதன் விளைவாகப் போற்றப் படும் ஒழுக்க நெறியாகும். வழக்காற்று ஒழுக்க நெறிகளை அறிவுறுத்தும் அறநூல்கள் உலகில் பல உள. நம்முடைய ஆத்திகுடி, கொன்றை வேய்ந்தோன். நல்வழி முதலிய நீதி நூல்கள் இத்தகைய பண்புடையனவாகும். சமுதாயத்தின் நல்வாழ்விற்கும் கட்டுக்கோப்பிற்கும் தேவையான

---

1 T. A. Huxley & Julian Huxley, Evolution and Ethics PP. 180. 199.

நீதிகளையே வழக்காற்று ஒழுக்க நெறிச் சார்புடைய நூல்கள் போதிக்கின்றன. எனவே காலத்திற்கும், இடத்திற்கும், மக்கள் வாழ்க்கை முறைகளுக்கும் ஏற்ப இவ்வொழுக்க விதிகள் மாற்றமுறுந் தன்மையுடையன.

மனித இனம் எண்ணத் தெரிந்து, 'நல்லதன் நலனையும் தீயதன் தீமையையும்' பாகுபடுத்தியுணரும் சிந்தனைத் திறத்தைப் பெற்றபொழுது, வழக்காற்று ஒழுக்க நெறியின் ஆதிக்கம் குலையவாயிற்று. உள்ளத்து உணர்ச்சியால், 'நல்லது எது? தீயது எது?' என அறிஞர்கள் ஆராயத் தொடங்கினர். அதன் விளைவாகத் தோன்றியது உணர்ச்சிநிலை ஒழுக்கநெறி (Conscious Morality). நம் சிவப்பிரகாசரின் நன்னெறி, குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம், மற்றும் பல்வேறு சதகங்கள் இவ்வகையைச் சேர்ந்தனவாகும். அறவியல் வளர்ச்சியில் இது இரண்டாவது படிநிலையாகும்.

அறவியல் வளர்ச்சியின் மூன்றாவது நிலை அறநலங்கனிந்த ஒழுக்கநெறி (Rational Morality)க் காலமாகும். இக்காலத்தில் மனித இனத்தின் அறிவு மலர்ச்சியுறலாயிற்று! இதன் பயனாக 'அறம் என்பது யாது? அறநெறியில் மனிதன் ஏன் ஒழுக வேண்டும்?' என்பன போன்ற எண்ணங்களின் எழுச்சியால், மனிதனுடைய சிந்தனை விரிந்தது. இதனால், எதையும் அவன் ஆழ்ந்து நோக்கத் தொடங்கினான். அக்காலத்தில், மனித வாழ்க்கையை மாண்புடையதாக்க. அறிஞர்கள் பல அறநூல்களை இயற்றினர். நம் நாட்டில் இத்தகைய முறையில் சிந்தனை வளர்ச்சியுற்ற காலத்திலேயே, திருவள்ளுவர் திருக்குறளை இயற்றியதாகத் தெரிகிறது.

பிறநாடுகளில் (கிரீஸ் நீங்கலாக) எல்லாம், அறிவுநலங் கனிந்த ஒழுக்கநெறிக் கோட்பாடு மிக அண்மைக் காலத்திலே (முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே)யே தோன்றி வளர்ந்துள்ளதைக் காண்கிறோம். நம் நாட்டில் ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிவுநலங் கனிந்த ஒழுக்க

தெறிக் கோட்பாட்டைத் திருவள்ளுவர் வகுத்துள்ளமை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

திருவள்ளுவரின் அறநெறிக் கொள்கை

வள்ளுவர் வகுத்துள்ள அறநெறிக்கோட்பாடு. இடத்தையும், காலத்தையும் கடந்தது;எந்நிலையில், எவ்வகையில் வாழுகின்ற மக்களுக்கும் பயன்படத்தக்கது. மனித வாழ்க்கையின் மூவேறு நிலைகளே அறம், பொருள், இன்பம் என்பனவாகும். அவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. வாழ்க்கை நெறியின் உடலாகப் பொருளையும், உயிராக அறத்தையும், உணர்வாக இன்பத்தையும் வள்ளுவர் கொண்டுள்ளார். அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும் விளக்கியுள்ளார். மனித இனநலக் கோட்பாட்டாளரின் பரிவோடு வள்ளுவர், மனிதனிடம்–அனைத்துலக மனிதனிடம் பேசுகின்றார். பிற சிந்தனையாளரின் கொள்கையை ஒவ்வொன்றாக மறுத்து ஒதுக்கித், தம்முடைய கொள்கையை நிலைநாட்ட வள்ளுவர் முயலவில்லை!நம் காலத்திய முரண்பட்ட சித்தாந்தங்களுக்கு இடையே காணப்படும் பொதுமைப் பண்புகளையும் முதன்மைப் பண்புகளையும் தொகுத்து, அவற்றிடையே, தம்முடைய கருத்தினைக் கலந்து ஓர் ஒருமைப் பாட்டைக் காண அவர் முயன்றுள்ளார்.

ஒழுக்கமே உயிரினும் சிறந்தது; அன்பு வழிப்பட்ட அறவாழ்வே அனைத்துயிரையும் வாழ்விக்கும்; இன்னா செய்தார்க்கும் இனிய செய்யத் தூண்டும்; பிறர் செய்த தீமையை மறந்து நன்மை செய்வதே சிறந்த பண்பாடாகும். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும். கல்வி அனைவருக்கும் கண் போன்றது. கற்பு இருபாலாருக்கும் பொது, எப்படி யாகிலும் குறிக்கோளை அடைய முயல்வது தவறு: குறிக்கோளை அடைவதற்குரிய வழியும் தூய்மையாக இருக்க வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்கே; வளமாகவும் நலமாகவும் சிறப்பாகவும் வாழ்வதற்கே! மனத்தின் தூய்மையே அறத்தின் நிலைக்களம்

உற்ற நோய் நோற்றலும் உயிர்க்கு உறுகண் செய்யாமையுமே தவவொழுக்கமாகும். அறத்தின் வடிவமாக விளங்குபவன் இறைவன். இறைவனுடைய திருவடிகளைப் போற்றி வணங்குவதே கற்கும் கல்வியினால் ஒருவன் பெறக்கூடிய பயனாகும். இறைவனுடைய திருவடி சேர்தலே மனித வாழ்க்கையின் முடிந்த பயனாகும் என்னும் கருந்துகளே திருவள்ளுவருடைய அறவியல் கொள்கையின் சாரமாகும். இவ்வறவியல் கொள்கை இன்றும் உலகிற்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்குகிறது.

புத்தரும் திருவள்ளுவரும்

இந்தியச் சிந்தனையாளர்களுள் அறவியல் ஆய்வில் சிறப்பு மிக்கவர் புத்தர் பெருமான். 'ஆசியாவின் சோதி! அணையாத திருவிளக்கு! உலகிற்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு!' என அறிஞர்கள் அவரைப் போற்றுகின்றனர். அவருடைய போதனைகளின் சிறப்புமிகு திரட்டாக நம்பப்படுவது தம்மபதம்; 'தம்மம்' எனப்படும் தருமத்தை அனைத்து உலகிற்கும் எளிய முறையில் எடுத்துரைக்கும் அறநூல்; இது பாலிமொழியில் இயற்றப்பட்டது! "உலக இலக்கியத்துள் அதற்குத் தனி இடம் உண்டு. புத்தசமயப் போதனைகளோடு அனைத்துலகிற்கும் தேவையான அறநெறிக் கருத்துகளை அறிவுறுத்துவதால், பௌத்த சமயிகள் மட்டும் அல்லாமல், பிற சமயத்தவரும் அதைச் சிறப்புமிகு அறநூலாகப் போற்றுகின்றனர்."[2]

அந்நூலில் மூவகைத் தருமங்கள் – அறங்கள் பேசப் படுகின்றன. அவை (!) புத்தர் திருவாய் மலர்ந்தருளிய உண்மை அல்லது சட்டம் (த.ப. 1–5; 6–11), (2) பொருள் அல்லது வடிவம் (த.ப.20–7), (3) வாழ்க்கை நெறி (த.ப.13–1) என்பன.[3] இவற்றுள் முதலாவதான புத்தரின் வாய்மொழிகளும், மூன்றாவதான

---

2 Bapat, P. V. (Ed): 2500 years of Buddhism, P. 138.

3 Radhakrishnan, S., Dhammapada, PP. 60.92.

வாழ்க்கை நெறிபற்றிய கருத்துகளுமே அறவியல் அமைப்புடையன.

திருக்குறளைப் போன்று இரு எல்லைகளுக்கும் போகாமல் நடுவழியை–நடை முறைக்குகந்த அறநெறிக் கருத்துகளையே தம்மபதம் விளக்குகிறது. 'மனித மனமே அறத்தின் ஊற்று; – நற்பண்புகளின் வளர்ப்புப் பண்ணை!' என்பதைத் தெரிவிக்கிறது: சடங்கு நெறிகளைச் சாடுகிறது; சாதி, இன வேறுபாடற்ற நிலையில், மனிதனை மனிதனாக வாழத் தூண்டுகிறது. திருக்குறளிலும் தம்மபதத்திலும் ஒத்த அறநெறிக் கருத்துகள் பல உள. எனினும், இவற்றிற்கு இடையே காணப்படும் வேற்றுமைகள் மிகப் பல. தம்மபதம் ஒரு தொகை நூல். ஆசிரியர் யார் என்பது ஐயப்பாட்டிற்குரியது. திருக்குறள் இல்லறத்தையே மிகச் சிறந்ததாகப் போற்றுகிறது. தம்மபதமோ துறவறமே தலைசிறந்தது என அறிவிக்கிறது. திருவள்ளுவர் 'மகிழ்வு நலநோக்கொடு' அறநெறிகளை அறிவுறுத்துகிறார். புத்தரோ, 'துன்ப உணர்வுடன்' மனித வாழ்க்கையையும் உலகையும் நோக்குகிறார். இதனால் 'வாழ்க்கைவாழ்வதற்கே!'எனும்வள்ளுவர்கோட்பாட்டிலிருந்து வேறுபட்ட 'துறவு பூணுவதற்கே வாழ்க்கை' எனும் வாழ்க்கை மறுப்புக் கோட்பாட்டைத் தம்மபதம் போதிக்கிறது.

மற்றும் 'ஒன்றாக நல்லது கொல்லாமை' (குறள் 323) என அறிவுறுத்தும் திருவள்ளுவர், 'தினற் பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும் விலைப்பொருட்டால் ஊன் தருவாரில்' (குறள் 256) எனத் தெரிவிக்கின்றார். தம்மபதம் கொல்லாமையைப் போற்றுகிறதே ஒழிய, புலால் உண்ணாமையை வற்புறுத்தவில்லை. திருவள்ளுவர் ஆன்மாவின் இருப்பையும், அதன் அழிவின்மையையும் பல இடங்களில் தெளிவுறுத்துகின்றார்.

மன்னுயிர்	(குறள் 244)
உயிர் உண்ணும் கூற்று	(குறள் 326)
உயிர் ஈறும் வாள்	(குறள் 334)

குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு (குறள் 338)
புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு (குறள் 340)

என்பன போதிய சான்றாகும்.

தம்மபதமோ, ஆன்மாவின் இருப்பிலேயே அவநம்பிக்கை கொள்ளுவதைப் பார்க்கிறோம். இவை யாவற்றையும்விட இறைவனின் இருப்பில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் வள்ளுவர். இறைவனுடைய திருவடிகளை அடைவதையே வீடுபேறாக அவர் கருதுகிறார். தம்மபதம் காட்டும் நிருவாண நிலை அந்தமில் இன்பத்து அழிவில்' வீடுபேற்றைக் குறிப்பது அன்று! திருவள்ளுவர் அறம்பாட வந்த அறவோர். எந்தச் சமயத்தின் பிடியிலும் அவரோ, அவருடைய அறநெறிக் கொள்கையோ சிக்கிக் கொள்ளவில்லை! சமயச் சார்பற்ற அறநெறிகளையே அவர் போதிக்கின்றார். அவருடைய அறநெறி மனித குலத்தை ஒன்றுபடுத்தும் ஒழுக்க நெறி ! தம்மபதம் அடிப்படையில் ஒரு சமய சாத்திரம்! மற்றும், அறிவுநலங் கனிந்த முறையில் ஒழுக்க நெறியை முழுமையாக எடுத்துரைக்கும் பக்குவத்தைத் தம்மபதம் அடையவில்லை!

மனுவும் திருவள்ளுவரும்

இந்திய தரும சாத்திரங்களுள் தலைசிறந்தது மனுதரும சாத்திரம். "மானவ தரும சாத்திரம்' எனப் போற்றப்படுவது. இந்நூல், நீட்சே என்ற ஜெர்மானியப் பாழியல் தத்துவ ஞானியின் (Nihilist) உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது! இது அறநூல் மட்டும் அன்று! சட்ட நூலாகவும் வாழ்வு பெற்றது! மனுவின் கருத்து மனித இனத்திற்கு மாமருந்து' என்பது பழமொழி கி.மு.மூன்றாம் நூற்றாண்டிற்கும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடையில் இந்நூல் இயற்றப்பட்டது.

முப்பத்திரண்டு அதிகாரங்களையும் 2694 சமஸ்கிருதச் செய்யுள்களையும் கொண்டது இந்நூல்! உலகப் படைப்பு

முதல் நுணுக்கமான சட்ட இயல்புகள் ஈறாகப் பலதிறப்பட்ட அறங்களையும் பழக்கவழக்கங்களையும் எடுத்துரைப்பது. ஆனால், மனு தரும சாத்திரம் உணர்த்தும் அறநெறிக் கருத்துகள் குறிப்பிட்ட ஒரு காலத்தில், குறிப்பிட்ட ஓர் இடத்தில் வாழ்ந்த குறிப்பிட்ட ஒரு சாதி மக்களுக்கே பெரிதும் பயன்படுவனவாக உள்ளன. அத்திபூத்தாற்போல் அவருடைய கருத்துகளில் சில அனைத்துலகப் பண்புடையனவாக உள்ளன. கங்கைக் கரையில் ஆரியர் வாழ்ந்த காலத்திய பழக்க வழக்கங்களையே மேல்வரிச் சட்டமாகக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டுள்ளது! அப்பழக்க வழக்கங்களையே அது வானளாவப் பேசுகிறது என்பர்.[4]

சாதிப்பாகுபாட்டு அடிப்படையில் அமைந்த சடங்கு நெறிகளுக்குரிய ஒழுக்கமுறைகளை மனு 'எடுத்துரைக்கின்றார்; பெண்ணடிமை,தீண்டாமை போன்றவற்றிற்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளார். திருக்குறளுக்கும் மனுதரும சாத்திரத்திற்கும் இடையே ஒத்த கருத்துகள் சில உள்ளன. ஆயினும், அவற்றிடையே முரண்பட்ட கொள்கைகள் காணப்படுகின்றன. திருவள்ளுவரின் அறநெறிக் கொள்கை சாதிசமய. இன, இடவேற்றுமைகளைக் கடந்த நிலையில், அனைத்துலக மனிதன் மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிகாட்டுகிறது. இதனால்தான் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை,

வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந் தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக் கொருநீதி?

(மனோன். தமிழ்.11)

என்று பாடினார்.

மனு போற்றும் வேதவேள்விகளைத் திருவள்ளுவர் 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமைநன்று(குறள்259)எனக்கண்டிக்கின்றார்

4 Radha Krishnan. S: Indian Philosophy. Vol I, P. 259

வள்ளுவர் போற்றும் உழவுத் தொழிலை மனு, பழிப்புக்குரிய தொழிவாகக் குறிப்பிடுகிறார்.[5]

இவ்வகையில் திருவள்ளுவர் புத்துலகச் சித்தனையாளராகத் தோன்றுகிறார். சாதி, சமய, இன, மொழி வேறுபாடற்ற நிலையில் மனிதரின் வாழ்க்கைக்குப் பயன்படத்தக்க அறநெறிக் கொள்கைகளையே உலகிற்கு உணர்த்துவதில் திருவள்ளுவர் முன்னணியில் நிற்கிறார்.[6] இக்குறைபாட்டுக்குக் காரணம் மனுவின் தரும சாத்திரம் அறவியல் வளர்ச்சியின் மூவகைப் படி நிலைகளில் முதல் நிலையாகிய 'வழக்காற்று ஒழுக்கநெறிக்குரிய அறக்கருத்துகளையே பெரிதும் போற்றுவதாகும்.

கன்பூசியசும் திருவள்ளுவரும்

குவங்கு – பூ. ட்ஸு எனும் கன்பூசியசு (கி. மு. 551– கி. மு. 478) சீனாவின் சிறப்புமிக்க சிந்தனையாளராவார். திருவள்ளுவரைப் போல அறவியல் அறிவும், உலகியல் உணர்வும் அரசியல் தெளிவும், மெய்ப்பொருள்கண்ட மெய்யுணர்வும் வாய்க்கப் பெற்றவர். தம் மாணவரோடு அவர் மேற்கண்ட அறிவுத்துறைகளைப் பற்றி எல்லாம் கலந்து உரையாடினார். அவ்வுரையாடல்களை, அவருடைய மாணவர்கள் நான்கு நூல்களாகத் தொகுத்துள்ளனர், அவை

(1) முதுமொழிகள்
(2) சிறப்புமிக்க கல்வி
(3) நடுவழிக் கோட்பாடு
(4) மென்சியஸ்

என்பன.

அவருடைய முதுமொழிகள் சிறப்புமிக்க அறநூலாகும். 'ஒழுக்க நெறியின் விதிகள் மனிதனுடைய பண்பு நலனை உருவாக்குகிறது' (முது.8:8) என்பர். 'அமைதியுடைய நடத்தை

---

5 Buhler, H, The Institutes of Manu, P. 10: 84

6 Rev. Drew. Tirukkural, Introduction P. iii

தாராள மனப்பான்மை, நேர்மை முனைப்பார்வம். அன்புடைமை ஆகிய ஐந்தும் அறத்தின் நிலைக்களன்களாகும். (17 : 6).

'நடுவழிக் கோட்பாடு' எனும் நூல், எதிலும் அளவாக – மிதமாக – இருப்பதே தலைசிறந்த அறம் என அறிவுறுத்துகிறது. பெரிதும் வழக்காற்று ஒழுக்க நெறியின் அடிப்படையில், மனிதனின் கடமைகளும் உரிமைகளும் இந்நூலில் விளக்கப் படுகின்றன.[7]

அடிப்படையில் அறநெறிக் கொள்கைகளாகத் தோன்றும் கன்பூசிய தத்துவத்தைச், சீனமக்கள் சமயக் கோட்பாடுகளாகப் போற்றினர்; கன்பூசியசை ஒரு சமயத்தின் தலைவராக்கி விட்டனர். கன்பூசியசின் அறவியல், வழக்காற்று ஒழுக்கநெறி யைச் சேர்ந்தது; அவருடைய கொள்கைகள் பல சார்புநிலை அறத்தன்மை (Relative Ethics) யுடையன: அக்காலத்திய சீன மக்களுக்கு மட்டுமே பயன்படத்தக்கன. கன்பூசியசு உள்ளுணர்விற்கே (Intution) முதன்மையிடம் கொடுத்தார். கன்பூசியசு மக்களிடையே ஏற்றத்தாழ்வு இருப்பது இயல்பு என்று கருதினார். அவர் முன்னோர் வழிபாட்டினையே முதன்மையான தெய்வவழிபாடாகப் போற்றினார் (முது –20:3).

கன்பூசியசு காண விரும்பிய இலட்சியக் குடிமகன் சுங்–ஸு என்பவனாவான். அவன் போதும் என்ற மனமும், எளிமையில் நாட்டமும், அன்பும் உடைய மனிதன்; வழக்காற்று ஒழுக்க நெறியைப் பெரிதும் கடைப்பிடித்து வாழும் சாமானியக் குடிமகனாவான்.

சாக்ரடிசும் திருவள்ளுவரும்

மாண்புமிகு கிரேக்கத்தின் பொன்றாப் புகழ்வாய்ந்த பேரறிஞன் சாக்ரடிசு (கி.மு. 470–399). அறிவு முதற்கொள்கையின் ஒளியிலே, அறவியல் கருத்துகளை அவர் ஆராய்ந்துள்ளார். 'நான் பேசுவதைக் கேட்பவர்கள்

---

7 விளக்கத்தைத் 'திருக்குறள் நீதி இலக்கியம்' எனும் நூலில் பக். 233 – 284 காண்க.

என்னை அறிஞன் எனப் பாராட்டுகின்றனர். மற்றவர்களிடம் காணாத ஏதோ ஒரு வகை அறிவு என்னிடம் இருப்பதாகக் கருதுகிறார்கள். ஆனால் என்னுடைய அறியாமை எத்தகையது என்பதை நான் நன்கு அறிவேன் என்று சாக்ரடிசு தன்னடக்கத்தோடு மனிதப் பண்புகளை ஆராயமுற்பட்டார். கடவுள் ஒருவரே எல்லாம் அறிந்தவர்; மக்களுடைய அறிவு குறுகிய வரம்புக்குட்பட்டது; குறைபாடுடையது என்பது அவருடைய நம்பிக்கை. எனவே தன் அறியாமையை அறிந்து கொள்ளும் மனிதனே அறிவாளி என்பது அவர் கொள்கை.

'உன்னையே நீ அறிவாய்!' என்பது அவரது வாக்கு! இத்தகைய அறிவுமுதல் வாதத்தினைத் திருக்குறளில் காணுகின்றோம்.

அறிதோறு அறியாமை கண்டற்றால் (1110)

எனும் குறட்பா, அறியுந்தோறும் அறியுந்தோறும் அறியாமையையே அறிஞன் காணுகின்றான் எனும் கருத்தை உணர்த்துவதாகும். அவர் இறைவனையே 'வாலறிவன்' எனச் சுட்டுகிறார். மற்றும்,

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் 355)
எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் 423)

என்னும் குறட்பாக்கள் மெய்ப்பொருளை அறிய உதவுவன அறிவு என்பதைத் தெரிவிக்கின்றன. இருவரும் 'அறத்தான் வருவதே இன்பம்" எனும் கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளனர். ஐம்புலன்கள் வாயிலாக நுகரும் இன்பத்திற்கு அப்பாற்பட்டது – உயர்ந்தது – சிறந்தது. அறத்தான் வரும் இன்பம் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதனைச் சாக்ரடிஸ் நன்மை (Goodness) என்பர்,[8] திருவள்ளுவர் மனநலம் என்பர்.

---

8 Jowett, B. (Ed). The Dialogues of Piato, PP. 270.2

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் (குறள் 457)
மனநலத்தி னாகும் மறுமை (குறள் 459)

இவ்விருவரும் சமயவாதிகள் அல்லர்; இல்லறத்தில் ஈடுபட்டோராவர்; அன்பும் அறமும் நிறைந்த வாழ்க்கைதான் முழுநிறைவான இன்பவாழ்க்கை என்பதை வள்ளுவர் உலகிற்கு உணர்த்தியுள்ளார்.

'நன்மையின்' நன்மையைப்பற்றி நன்கு அறிவதைச் சிறந்த வாழ்க்கைக்குரிய இன்றியமையாப் பண்பாக சாக்ரடிஸ் கருதினார். இக்கருத்தை 'நல்லொழுக்கமே அறிவு' (Virtue is Knowledge') எனும் கோட்பாட்டின் மூலம் அவர் விளக்கியுள்ளார். ஆனால், இக்கருத்து குறைபாடுடையது. அறத்தின் இயல்பை, ஆற்றலை, மாட்சியை அறிவதற்கு உதவும் ஒரு கருவியே அறிவு. இதனைத் திருவள்ளுவர்,

அறிவு அற்றம் காக்கும் கருவி
சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ (குறள் 421)
நன்றின்பால் உய்ப்பது அறிவு (422)

எனத் தெளிவுறுத்தியுள்ளார். இதனால், அறிவின் பயனாக மனிதன் பெறக்கூடிய தெளிவே அறம்பற்றிய எண்ணமாகும் என்பது இதனால் பெறப்படுகிறது. எனவே எந்நிலையிலும் வழியும் பயனும், கருவியும் அக்கருவியால் அடையும் பயனும், ஒன்றாகா. மற்றும் அறவொழுக்கம் வெறும் மரபு காரணமாக ஏற்பட்டது அன்று; அது மனித இயல்பை அடிப்படையாகக் கொண்டது. இதை உணர்த்தும் வகையில் அவருடைய இக்கோட்பாடு அமையவில்லை! மனிதனைப் பார்த்து 'உன்னையே நீ அறிவாய்!' என அவர் அறிவுறுத்திய அறவுரையில் வேண்டுமானால், இக்கருத்து தொக்கி நிற்கிறது எனக் கூறலாம்.

அரசியலில் கலந்து தொண்டாற்றுவோர் நல்லறத் தொண்டர்களாக இருக்க இயலாது என்பது சாக்ரடிசின் நம்பிக்கை, ஆனால், திருவள்ளுவர் சமுதாயத்தைத் திருத்தி

அமைக்க அரசியல் அறநெறிப்பட்டதாக–அறநெறிப்பட்டதே அரசு' எனத்தக்கதாக–அமையவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

அறத்திற்கும் இன்பத்திற்கும் இடையில் நடுநாயகமாகப் பொருட்பாலைத் திருவள்ளுவர் அமைத்துள்ளார். அறத்தின் மலர்ச்சிக்கும் இன்பத்தின் நுகர்ச்சிக்கும் பொருள் தேவை என்கிறார் திருவள்ளுவர். அருட்செல்வம் மறுமை இன்பத்திற்கு– வீடுபேற்றிற்கு எத்துணை இன்றியமையாதது. அத்துணை இன்றியமையாதது. இந்த உலக வாழ்விற்குப் பொருட்செல்வம் என்பதைத் திருவள்ளுவர் நன்கு தெளிவுறுத்தியுள்ளார். 'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் இந்தப் பொருள், அறவழியில் தேடப்பட்டதாக இருக்க வேண்டும்' என்பது திருவள்ளுவரின் துணிவாகும்.

பொருளை ஈட்டுவதற்குரிய தொழில்களுள், உழவுத் தொழிலையே தலையாய தொழிலாகத் திருவள்ளுவர் போற்றுகிறார். சாக்ரடிஸ் வழிவந்த கிரேக்க அறிவியல் அறிஞர், 'உழவுத் தொழிலை அடிமைகளின்' தொழிலாகக் கருதினார். திருவள்ளுவர் ஒழுக்கத்தை மறக்கும் அல்லது மறைக்கும் பொருளாதாரத்தை ஏற்றுக் கொள்ளவில்லை சாக்ரடிஸ் சுரண்டல் மிகுந்த வாணிகப் பொருளாதார நாகரித்தை மதிப்பு மிக்கதாக ஒப்புக்கொண்டுள்ளார். மற்றும் சாக்ரடிஸ் எதையும் எழுதிவைக்கவில்லை. அவருடைய மாணவர் பிளேட்டோ, ஸெனோபன் போன்றோரின் எழுத்துரைகளினாலேயே, நாம் சாக்ரடிசினுடைய கருத்துகளை அறிகிறோம்.[9]

பிளேட்டோவும் திருவள்ளுவரும்

திருவள்ளுவரைப் போன்றே அறிவியல், அரசியல், சமூக இயல், மெய்ப்பாருளியல் சிந்தனையாளராகப் பிளேட்டோ விளங்குகிறார். ஆனால், அறவியல் பற்றித் தனிநூல் ஒன்றும்

---

9 Narman Gulley, Tthe Philosophy of Ssocrates PP.83. 96

பிளேட்டோ இயற்றியதாகத் தெரியவில்லை. அவருடைய புரோதாகரஸ் (Protogoras). மெனா (Mano), ஜார்ஜியாஸ் (Gorglas). குடியரசு (Republic). பிலிபசு (Philebus) எனும் ஐந்து நூல்களில் மட்டும் அவருடைய அறவியல் சிந்தனை முனைப்பாகக் காணப்படுகிறது. பெரிதும் அப்பாலைத் தந்துவத்தை (Metaphysics) அடிப்படையாகக் கொண்டவை அவருடைய நூல்கள், அவை யாவும் உரைநடையில் இயற்றப்பட்டவை. திருக்குறளோ அறவுணர்வை – அறவியல் ஆய்வை அடிப்படையாகக் கொண்டது: குறட்பாக்களால் இயற்றப்பட்டது.

சாக்ரடிஸ் கூறிய 'அறிவென்பது அடிப்படைத் தத்துவங்களைப் பற்றிய அறிவு' என்பது பிளேட்டோவின் கருத்து. 'புலன்கள்' வழியாக அறியும் உலகம் உண்மையான உலகம் அல்லவென்பதும், அதற்கும் அப்பால் விளங்கும் உலகே உண்மையான உலகு என்பதும் இவ்வறிவினாலேயே தெரிய வரும். மேலும், இந்த உண்மையான உலகத்தை 'நிறைவு பெற்ற எண்ணங்களைக் (Ideas) கொண்ட உலகம்' எனக் கூறலாம். இவ்வுண்மையான உலகில் இருக்கும் நிறைவு பெற்ற எண்ணங்கள், காட்சிப் பொருளாய் விளங்கும் உலகத்தில் அரைகுறையான நிலையில் தென்படுகின்றன. நிறைவுள்ள எண்ணங்களால் ஆன உலகத்தின் அடிப்படையாக விளங்குவது நன்மையைப்பற்றிய கருத்தாகும். 'இப்பேரண்டத்தின் அடிப்படையே நன்மைதான்; இந்த நன்மையை இயல்பான ஒன்றாகக் கொள்ளவேண்டும்' என்பதையே பிளேட்டோ வலியுறுத்தினார்.[10]

அவர் ஒழுக்கத்தை நால்வகை அடிப்படை ஒழுக்கங் களாகப் பாகுபடுத்தினார். அவை (1) நீதி (Justice). (2) அனு பவ அறிவு (Wisdom). (3) துணிவு அல்லது உள்ளவுரம் (Courage). (4) தன்னடக்கம் (Temperance)என்பனவாகும்.[11]

---

10 Jowett, B. (Ed.). Dialogues of Plato, PP. 378.379. 11. Ibid, PP. 330.342.
11 Ibid, PP. 330–342

திருவள்ளுவர் இப்படிப்பட்ட ஒழுக்கங்களைப் (Cardinal Virtues) பரவலாக எடுத்துரைத்துள்ளார். கிரேக்க அறிஞன் கூறும் நீதி என்பது நேர்மை, ஒழுக்கம் எனும் பொருள் பயப்பதாகும். இதனை வள்ளுவர் அறம் எனும் சொல்லாலும் முறை எனும் சொல்லாலும், ஒழுக்கம் எனும் சொல்லாலும் உணர்த்துகின்றார்.[12] அனுபவ அறிவைக் கேள்வி (அதி. 42), அறிவுடைமை (அதி. 43) எனும் இரு அதிகாரங்களில் அவர் தெளிவுறுத்தியுள்ளார். உள்ளவுரத்தை ஊக்கம் உடைமை (அகி. 60), ஆள்வினை உடைமை (அதி.62), இடுக்கண் அழியாமை (அதி. 63) எனும் மூன்று அதிகாரங்களில் வள்ளுவர் விளக்கியுள்ளார். தன்னடக்கத்தை அடக்கமுடைமை (அதி.13), பிறனில் விழையாமை (அசி. 15) பொறையுடைமை (அதி. 16), அழுக்காறாமை (அதி .17), வெஃகாமை (அதி.18), புறங்கூறாமை (அதி. 19) போன்ற அதிகாரங்களில் அவர் விரித்துரைத்துள்ளார்.

பிளேட்டோ அறவியலின் ஒரு பகுதியாக– வளர்ச்சி யாகவே அரசியலைக் கருதுகிறார். அரசின் மூலம்தான் குடிமக்களிடம் அறவியல் உணர்வை ஊட்டமுடியும்; ஒழுக்கத்தைப் போற்றி வளர்க்க இயலும் என்பது அவருடைய நம்பிக்கை. பிளேட்டோ மக்களைக் காவலர், படைவீரர், தொழிலாளர் என்று பாகுபடுத்தி, முறையே அவர்கள் பொன், வெள்ளி, இரும்பு ஆகிய உலோகங்களின் இயல்புகளை உடையவராவர் என விளக்குவர். இம்மூவகைப் பிரிவினருக்கும் தனித் தனியாக வெவ்வேறு வகையான அறங்களை அவர் வகுத்துக் காட்டுகிறார். 'காவலர் வகுப்பைச் சேர்ந்தவரே வாழப் பிறந்தவர்கள்' எனும் கருத்தை நிலைநாட்ட முயல்கிறார்.[13]

---

12 அறம் – நீதி, காண்க, குறள் 141 முறை – நீதி; காண்க; குறள் 388, 432, 547, 548, 553, 558, 559.
ஒழுக்கம் நீதி; காண்க. அதி. 14, ஒழுக்கம் உடைமை. இதன் விளக்கத்தைத் திருக்குறள் நீதி இலக்கியம் எனும் நூலில் பக்,18–22ஐக் காண்க.

13 Jowett, B., of cit, PP, 320.326

காவலர்களுக்குக் குடும்ப வாழ்க்கை வேண்டாத ஒன்றாம், மகப்பேற்றுக்காக– நல்ல ஆட்சியாளர்களைப் பெறுவதற்காக மட்டும் காவலர்களுக்குப் பொதுவான மனைவியர் அவர்களுக்குப் பொதுவுடைமையாக்கப் படல் வேண்டும் என்பது அவருடைய கருத்து[14] இதன் மூலம் அன்பும் பண்பும் நிறைந்த அறவழிப்பட்ட இல்வாழ்க்கையையும், அதனால் வரும் இன்பத்தையும் எளிதில் அவர் புறக்கணித்துவிடுகிறார்.

மற்றும், அரசிற்கு ஏவல்புரிவதும், பணிசெய்வதும், அரசிற்காக நன்மக்களைப் பெறுவதுமே குடிமக்களின் குறிக்கோளாக இருக்கவேண்டும் எனப் பிளேட்டோ அறிவிக்கிறார். அவர், மனிதனைக் குடிமகனாகவே (citizen) காண்கிறர். எனவே, அவர்களுக்குத் தனிவாழ்க்கை என ஒன்று இருப்ப தாகவே அவர் நினைக்கவில்லை!

திருவள்ளுவர். மக்களைத் தனி மனிதர்களாகவே காணு கிறார் அம்மனிதர்களின் தனி வாழ்க்கைக்கு முதன்மையிடம் கொடுக்கிறார். பின்னர்ப் பொதுவாழ்க்கையில் தனி மனிதன் ஒழுகுவதற்குத் தேவையான சமுதாய அறங்களை அவர் அறிவுறுத்துகிறார்.

பிளேட்டோவின் இரும்பு வகுப்பைச் சேர்ந்த மக்கள் தொழிலாளர்களாவர். அவர்கள் சமுதாயத்தில் இழிந்தவர் களாகக் கருதப்படுகின்றனர்; அவர்களுக்குக் குடியுரிமை கிடையாது. அவர்கள் எல்லாருமே அன்றைய கிரேக்கத்தில் அடிமைகளாக இருந்தனர். அவர்களுக்குக் கல்வி கற்கும் உரிமை கிடையாது என்பது பிளேட்டோவின் கருத்து,[15]

இவ்வகையில் திருவள்ளுவர் வேறுபட்டு விளங்குகிறார். பிறப்பால் சாதிவேற்றுமையோ, தொழிலால் வகுப்பு வேற்றுமையோ, வளத்தால் உயர்வுதாழ்வுப் பாகுபாடோ அற்ற சமுதாயத்தை அவர் காண விரும்பினார். அதற்கான ஒழுக்க நெறிகளையே அவர் வகுத்துள்ளார்.

---

14 Ibid, PP. 3733–78

15 Ibid: pp. 320–340

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (குறள் 972)
மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர் (குறள் 973)

என்னும் குறட்பாக்களின் கருத்துகள் சிந்திக்கத்தக்கன.

திருவள்ளுவர் குடிப்பண்பைப் போற்றுகிறார். ஆம் அவ்வடிப்படையில் கல்வி கற்றலையோ, உயர் பதவிகளைப் பெறுதலையோ. ஒழுக்கமாக வாழ்தலையோ, குறிப்பிட்ட ஒரு சாராருக்கு மட்டும் உரியவை எனக் கூறவும் இல்லை; மற்றவர் களுக்கு அவ்வுரிமையை அவர் மறுக்கவும் இல்லை!

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு (குறள் 392)

எனும் குறட்பாவில் 'கல்வி கற்கும் உரிமையை அனைத்துயிர்க்கும்' வழங்கியுள்ளதைக் காணுகின்றோம் வகுப்பு வேற்றுமைகளைக் கடந்து, மக்கள் மேன்மேலும் முன்னேற்றம் அடைதல் இயலும். அவர்களுடைய குடிமரபுவழிப் பண்புகள் சில அவர்களிடம் இயல்பாக வந்தடைந்தாலும்,மக்கள்தம்முயற்சியால்,அத்தீய பண்புகளைப் புறக்கணித்து, நற்பண்புகளை வளர்த்து முன்னேற இயலும் என்பது திருவள்ளுவரின் திடமான நம்பிக்கை உலகளாவிய அனைத்துலக வாழ்வியல் நெறியைத் திருவள்ளுவர் வற்புறுத்துகிறார். இதனை,

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு (குறள் 397)

என்னும் குறட்பாவால் உணரலாம். இங்கே,

யாதும் ஊரே யாவரும் கேளிர் (புறம். 192)

எனும் அனைத்துலகக் குடிமகக் கோட்பாட்டையே திருவள்ளுவர் அறிவுறுத்துகின்றார். இதனைக் கிரேக்கத்தின் அறிவுலக மும்மூர்த்திகளான சாக்ரடிசு, பிளேட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோர் அறியாதவராவர்.

அரிஸ்டாட்டிலும் திருவள்ளுவரும்

உலகப் பேரறிஞராகப் போற்றப்படும் அரிஸ்டாட்டில், அறவியல் சிந்தனையாளராகவும் சிறந்து விளங்குகிறார். அவருடைய (கி. மு. 384–322) அறவியல் கோட்பாடு ஓர் அளவிற்குப் பிளேட்டோவின் – அவருடைய குருநாதரின் – நோக்கிலிருந்து வேறுபட்டது. உருவற்ற கருத்துகளை – (Abstract Ideas) அடிப்படையாகக் கொள்வதைவிட. அற – வாழ்வில் உணரக்கூடிய உண்மைகளையே பெரிதும் அவர் விளக்கினார். இதனால் நிறைவுபெற்ற சமுதாயத்தைப் பிளேட்டோ, தம் குடியரசில் (Republic) விளக்கியதைப் போல, இலட்சியமாக அமையக்கூடிய சமுதாயத்தை அரிஸ்டாட்டில், தம் அறநூலில் (Ethics) தீட்டிக் காட்டவில்லை. கிரேக்க நகர–அரசுகளில் விளங்கிய அறவாழ்வைத்தான். தம் ஆராய்ச்சிக்குரிய பொருளாக அரிஸ்டாட்டில் எடுத்துக் கொண்டார்.

அரிஸ்டாட்டிலின் அறவியல் கோட்பாடு 'நன்மை– தீமை களைப்பற்றிய விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. நன்மையின் நிலைக்களனாக விளங்குவது ஒழுக்கம். அதனை அறவொழுக்கம் (Moral Virtue), அறிவுவொழுக்கம் (Intellectual Vitue) எனப் பாகுபடுத்துவர். அறவொழுக்கம் பழக்க வழக்கத்தால் அமைவது. அறிவுவொழுக்கம் கல்வியால் வளர்வது. அறவொழுக்கம் வெறும் பழக்கம் அன்று; அது மனிதனுடைய தேர்ந்திடும் பழக்கம் (selecting habit)[16] என்பர். இக்கருத்து வழக்காற்று ஒழுக்க நெறியின் இயல்புகளை நினைவுபடுத்துகிறது.

அறிவைப் பயன்படுத்தும் உயர்ந்த மக்களின் ஒழுக்கமும், அவர்கள் கடைப்பிடித்தொழுகும் நற்பண்புகளும் செயல்களும்தாம் ஒழுக்கத்திற்கு மேல்வரிச் சட்டமாக– அடிப்படை ஆதாரமாக அமைய வேண்டும் என்பர்

16 Warnington, John (Ed. & Tr.), Aristotle's Ethics B. 3; 19,

அரிஸ்டாட்டில்.[17] இதே கருத்தினைத் திருவள்ளுவர்.

துளக்கற்ற காட்சியவர்	(குறள் 5 699)
உலகத்தார்	(குறள் 850)
உரவோர்	(குறள் 135)
மாசற்றார்	(குறள் 106,311,312,646,800)
அறிந்தார்	(குறள் 399)
நீரவர்	(குறள் 782)
சான்றோர்	(குறள் 197,656, 657)
நல்லவர்	(குறள் 823)
தூய்மையவர்	(குறள் 711,721)
மேலாயவர்	(குறள் 1016)

எனப்பட்ட சான்றோர்களின் நூல்களும், செயல்களுமே ஒழுக்கத்திற்கு மேல்வரிசைச் சட்டங்களை – அறத்தின் அடிப்படையை அமைத்துத் தருவன என்று தெளிவுறுத்தி யுள்ளார்.

தனிமனிதன் ஒருவனுடைய வாழ்க்கைச் சூழலுக்கும், அவன் காலத்திய அரசியலுக்கும் ஏற்ப, தன்னுடைய ஒழுக்கத்தை அவன் உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்று சார்புநிலை அறநெறியை (Relative Ethics) அரிஸ்டாட்டில் போற்றுகிறார். இக்கருத்தினால் காலத்திற்கும். இடத்திற்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்றவாறு அறத்தின் இயல்பு மாற்றமுறும்; வேறுபடும் என்பது புலனாகின்றது. அறம் என்பது உயர்ந்தது; சிறந்தது; எங்கும் எப்பொழுதும் மாற்றமுறாதது. ஆனால், பழக்க வழக்கங்களின் அடிப்படையில் அமையும் வழக்க ஒழுக்க நெறியே மேற்கண்டவாறு மாற்றமும் திரிபும் அடையக் கூடிய இயல்புடையது. இதனால், அறநிலை வளர்ச்சியின் இரண்டாவது படிநிலையாகிய வழக்காற்று ஒழுக்கநெறியையே அரிஸ்டாட்டிலின் அறவியல் கோட்பாடு அடிப்படையாகக் கொண்டுள்ளது.இக்கோட்பாட்டில் மனிதன்

17 காண்க 'Sources of Aram, in The Treatment of Ethics n Ancient Tamil Literature by K. D. Thirunavukkarasu, Anna. malai university, 1962

ஒழுக்கத்தில் மேன்மையும் முன்னேற்றமும் அடைவதற்கு வாய்ப்பு இல்லை ஒழுக்கசீலன் எனச் சிறப்புறுவதற்கும் இடம் இல்லை. நம் திருவள்ளுவர் இத்தகைய சார்புநிலை அறநெறியைப் போற்றவில்லை. எங்கும், என்றும், யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய முதன்மையான ஒழுக்கக் கருத்துகளைஅடிப்படையாகக் கொண்டதே திருவள்ளுவரின் அறவியல் கோட்பாடாகும்.

அறத்தின் முடிவை, அரிஸ்டாட்டில் 'யூடை மோனியா' (Eudaimonia) எனக் கூறுவர். இதற்கு மகிழ்வு (Happiness) என்பது பொருள். மனிதன், தன் ஆன்மாவை அறவொழுக்கத்தின் வழியே செலுத்துவதனால் பெறும் பயனே மகிழ்வு! அறவொழுக்கத்தை ஓர் ஒழுங்கு முறையாய் அமைத்த காரணம் எனக் கொண்டால், அதன் விளைவை மகிழ்வாகக் கொள்ளலாம்,[18] இதனால் அரிஸ்டாட்டலின் கருத்துப்படி மகிழ்வே. ஒழுக்கத்தின் நோக்கம் என்பது பெறப்படுகிறது. மக்கள் பகுத்தறிவால் அடையும் மகிழ்வை– இன்பத்தைத் திருவள்ளுவரும் அறத்தின் நோக்கமாகக் கூறுகிறார், அவர் அறச் செயல்கள் இன்பம் பயப்பன; இனிமை ஊட்டுவன; உவகை அளிப்பன' என்பர்.

அறத்தான் வருவதே இன்பம் (குறள் 39)
ஈத்துவக்கும் இன்பம்(குறள் 228)
தாமின் புறுவது உலகின்புறக் கண்டு (குறள் 399)
காமுறுவர் கற்றறிந் தார்
உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் (குறள் 394)
இருள் நீங்கி இன்பம் பயக்கும் (குறள் 352)
இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின் (குறள் 854)

இங்கே திருவள்ளுவர் குறிப்பிடும் இன்பம், வெறும் புலன் நுகர்ச்சியால் பெறும் இன்பம் அன்று! மனத்தால் பெறும் இன்பமாகும். இதனை அவர் மன நலம் எனச் சுட்டுவதை நாம்

18 Warnington, John, Op cit 1, vii, 8.

முன்னரே கண்டோம். ஆனால், இதற்கும் மேலாகப் பலபடி களைக் கடந்து, மனிதன் அறவாழ்வின் முடிவான பயனாகத் தன்னை உணர்தலை (Self–Realisation) இலட்சியமாகக் கொள்ள வேண்டும் என்பது திருவள்ளுவரின் துணிபாகும். தன்னை அறிதல் என்பது மனிதன் ஆர்வத்தோடு அடையத் துடிக்கும் ஆன்ம நிறைவைக் குறிப்பதாகும்; தன்னை உணர்தலில், தனி மனிதனே முக்கியத்துவம் வாய்ந்தவனாகத் தோன்றுகின்றாள் என்பதையும் இங்கு நாம் நினைவுகூர்தல் வேண்டும்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் (குறள் 6)

யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும் (குறள் 346)

இருள் நீங்கி இன்பம் பயக்கும் (குறள் 352)

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி (குறள் 356)

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும் (குறள் 370)

என்பன திருவள்ளுவரின் தலைசிறந்த கொள்கையைத் தெரிவிக்கின்றன .

இனி, இருஎல்லைகளுக்கும் போகாமல், எதிரெதிரான பண்புகளுக்கு இடையே நடுவுநிலையில் நிற்கும் தன்மையே அறம் என்று அரிஸ்டாட்டில் விளக்குவர்.[19] ஒழுக்கம் இருதீமைகளுக்கு– நடுவே நிலைபெற்றிருப்பதாக அவர் கருதுகிறார். துணிவு அல்லது உள்ளவுரம் என்பதை எடுத்துக்கொண்டால் இது முன் இல்லாத முரட்டுத்

19 Ibid II, Vi. 15.

துணிச்சலுக்கும், கோழைத் தனத்துக்கும் இடையே அமைவதாக அவர் கூறுவர். இரண்டு தீமைகளின் எல்லைகளுக்கும் இடையே விளங்கும் நடுவுநிலை என்பது, ஒரு மனிதனின் சூழ்நிலையைப் பொறுத்து அமைவதாகும். ஓர் அரசியல் வாதியைவிட, ஒரு போர் வீரன் முரட்டுத்தனமான துணிச்சல் உடையவனாக இருக்கவேண்டும். வீரனுடைய முரட்டுத் துணிச்சல் குற்றமாகாது; ஏனெனில் அவன் நாட்டைக் காக்க வீரமுடன் போரிட வேண்டியிருக்கிறது என்பர். இவ்வாறே ஈகையின் இரு எல்லைகளாக ஊதாரித்தனத்தையும் உலோபத்தன்மையையும், கல்வியின் இரு எல்லைகளாக அறிவின்மையையும் கல்லாமையையும் அவர் குறிப்பிடுவர்.

ஒரு வழியைக் கடைப்பிடிக்கும் முறையை மொத்த மனித இயல்புடன் தொடர்புபடுத்துவதை விட்டு, இரு தீமை களிடையே நல்லொழுக்கம் அமைவதாக அவர் காட்ட முயன்றார். இதனால் மீமிகுதிக்குக் (Maximum)கும். மீகுறைவிற்கும் (Minimum) இடையே அவர் அறத்தை நிறுத்திக் காட்ட நேர்ந்தது. இதன் விளைவாக, அறத்தின் உயர்நிலையை அவர் குறைத்து மதிப்பிட்டுவிட்டார். உவமை என்பது 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' (தொல்.1224) என்று தொல்காப்பியர் கூறுவதைப் போன்று, அறம் என்பது குறிப்பிட்ட பண்பின் உயர்ந்த நிலையாகவே எப்பொழுதும் இருத்தல் வேண்டும். இதற்கு மாறாக, அரிஸ்டாட்டில் அறத்திற்கும் மறத்திற்கும் சிறிதளவு வேற்றுமையே காட்டியுள்ளார். திருவள்ளுவர் அறப்பண்பிற்கு எல்லை வகுக்கவில்லை.ஆனால், அறந்தைச் செயலின் நிறைவாகவும் மீவுயர்நிலையாகவும் அவர் போற்றுவதைக் காணலாம்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் (குறள் 71)
உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் (குறள். 226)
மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று (குறள் 222)

ஒப்புரவினால் வருங் கேடெனின் அஃது ஒருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து (குறள். 220)

என்னும் குறட்பாக்கள் போதிய சான்றாகும்.

அரிஸ்ட்டாட்டில் நாட்டின் நல்வாழ்விற்காக அடிமைகள் இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.[20] அவர்களே தொழிலாளர்கள் ஆவர். அவர்கள் கல்வி கற்கக் கூடாது; அவர்களுக்குத் தேர்தலில் வாக்குரிமை கிடையாது என்பர் அரிஸ்டாட்டில். திருவள்ளுவருடைய அறவியலில் மனிதனாகப் பிறந்த அனைவரும் சமமாகக் கருதப்படுகின்றனர். எனவே, அவர்கள் ஒழுக்கத்தோடு வாழவும், கல்வி கற்கவும் தடை யாதும் விதிக்கப்படவில்லை!

அரிஸ்டாட்டில் காணவிரும்பிய இலட்சிய மனிதன் பெருந்தகையாளன் (Magnanimous Man) எனப்படுபவனாவான். 'அவன் சிறப்புமிக்க சிந்தனையாளன்; அறிவின் கொழுந்து ஆற்றலில் அசுரன்! ஒழுக்கத்தில் உயர்ந்தோன்! மகிழ்ச்சிமிகு மனிதன்!' என அவர் தீட்டிக் காட்டுகிறார். திருவள்ளுவருடைய இலட்சிய மனிதன் சான்றோன் என்பதை நாம் முன்னரே கண்டோம்.

அறிவுப் பிழம்பாகிய அரிஸ்டாட்டிலின் அறவியலில் ஒவ்வோர் நற்பண்பாகிய அறப்பண்பும், மீமிகுதிக்கும் மீகுறைவிற்கும் இடைப்பட்ட ஒன்றாகக் காட்டப்படுவது, அறத்தின் மாட்சிக்கும் ஆற்றலுக்கும் ஊறுவிளைப்பதாக அமைகிறது. மனிதரிடையே ஏற்றத்தாழ்வைக் கற்பிப்பதும், அடிமை முறை வேண்டும் எனச் சொல்லுவதும் திருவள்ளுவர் கனவிலும் கருதாதவை. மனித இனத்தின் துன்பத்தைக் கண்டு அரிஸ்டாட்டில் உள்ளம் உருகவில்லை. நோயாளிகள், உடல் ஊனமுற்றோர், வறுமையால் வாடுவோர், பிச்சை எடுப்போர் முதலியவர்களின் அல்லலை அகற்றுவதற்கும்,

---

20 Ibid; 111 1144a.

துன்பங்களைத் துடைப்பதற்கும் அவர் வழிகாட்டவே இல்லை! ஆனால், அம்மக்களைச் 'சமுதாயத்தின் தீமை* (Social Evils) யாக அரிஸ்டாட்டில் வெறுக்கிறார். அன்போ, அருளுணர்வோ, ஒப்புரவோ,தொண்டுணர்வோ அவரால் போற்றப்படவில்லை! மனித உணர்ச்சிகளுக்கு அவர் மதிப்பு அளிக்கவில்லை என்பது புலனாகின்றது. அவர் ஓர் அறிவுமுதற் கொள்கைவாதி பாக, உலகளாவிய மனிதஇனத்தை நோக்காமல், குறுகிய கிரேக்க நகர–அரசுகளில் வாழும் ஆளும் வர்க்கத்தினரின்–உரிமைக் குடிமக்களின் நல்வாழ்வையே கருத்தில் கொள்ளுகிறார். திருவள்ளுவர் அறிவு முதல்வாதியாக மட்டும் உலகை நோக்காமல், மனித நலனை நாடும் மனிதநலக் கோட்பாட்டினராக (Humanitarian) அனைத்துலகையும் நோக்குகிறார். இதனால் அவருடைய நூலில் 'தமிழ், தமிழர், தமிழ்நாடு' எனும் எண்ணமோ, முடியுடை மூவேந்தரைப் பற்றிய குறிப்புகளோ காணப்படவில்லை! எனவேதான், அனைத்துலக மனிதனைப் பாடிய மன்பதைப் பாவலன் (The Bard of Universal Man) என ஜி.யூ. போப்பு பாமாலை பாடி, வள்ளுவருக்குப் புகழ்மாலை சூட்டியுள்ளார்.

அரிஸ்டாட்டில் காண விரும்பிய இலட்சியக் குடிமகன் அன்பு, இரக்கம், உதவும் இயல்பு போன்ற அருட்பண்புகளற்ற செயல் வீரனாகவே காணப்படுகிறான். அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவனாக இருந்தால் மட்டும் போதுமா? மனிதப் பண்புடைய வனாக இருக்க வேண்டும் அல்லவா?

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர் (குறள் 997)

என்பது வள்ளுவர் வாய்மொழி!

எனவே, அரிஸ்டாட்டிலின் அறவியல், பெர்ட்ராண்ட் ஸ்ஸல் கூறுவதைப்போன்று 'உணர்ச்சிப் பஞ்சம்' (Emotional Poverty) நிறைந்ததாகவே தோன்றுகிறது.[21] மனிதனை

21 Russell, Bertrand. A History of Western Philosophy, P.184

மாண்புமிகு மனிதனாக்குவது அருளுணர்வு. அப்பண்பில்லா மனிதன், அறநெறியில் வாழ்வதால் என்ன பயன்?

செனாக்காவும் திருவள்ளுவரும்

ரோமானியப் பேரரசன் நீரோவின் ஆசிரியன் செருக்கா, நீரோவால் தற்கொலைத் தண்டனை அளிக்கப்பட்டவன். அறிஞன் செனாக்கா (கி.மு.4 முதல் கி.பி. 65 வரை), ஸ்டாயிக்கு (Stoic) தத்துவ ஞானியாக செனாக்கா விளங்கினான். ஸ்டாயிக்கு மெய்யுணர்வாளர் வள்ளுவரைப் போன்று 'மனத்தூய்மையையே அறம்' எனப் போற்றினர். பற்றற்ற வாழ்வே அவர்களுடைய குறிக்கோள். அவர்கள் மன்னுயிரைத் தம்முயிர்போலப் போற்றினர். விருப்பு வெறுப்பற்ற நடுவுநிலைப்பண்பு ஸ்டாயிக் தத்துவத்தின் அடிப்படை! 'நல்லொழுக்கத்தால் மனிதன் முன்னேறுகிறான்; அதன் விளைவாக மனித சமுதாயம் முன்னேற்றம் அடைகிறது. என்பர். உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் ஒத்த இயல்புடையன; ஒற்றுமையுடையன. எனவே, மனித குலத்திடையே சமத்துவத்தை, 'ஒரே குலத்தவர்' என்ற உணர்வை அவர்கள் வளர்த்தனர். இதனைச் செனாக்கா,

> ஒவ்வொருவனையும், அவன் எத்தகைய பண்புடையவனாயினும், அவன் மனிதன். ஆதலால் நாம் அவனை மதித்துப் போற்ற வேண்டும். எல்லா மக்களின் நாடுகளும் என் தாய்நாடு என்றும், என் நாடு எல்லா மக்களுக்கும் தாய்நாடு என்றும் நாம் கருதுதல் வேண்டும்.[22]

என்று எடுத்துரைத்துள்ளார்.

அவர் கண்ணோட்டம், ஒப்புரவு, நடுவுநிலைமை, வெகுளி, உள்ளவுரம், மானம், இன்பவாழ்க்கை எனும் அறநூல்களை இயற்றியுள்ளார். இவற்றில் காணப்படும் அறநெறிக் கருத்துகளில் திருவள்ளுவர் உலகிற்கு உணர்த்திய உண்மைகளின் எதிரொலியைக் கேட்கின்றோம்.

---

22 Moral Reflections of Seneca P. 48.

> உலகம் நம் அனைவருக்கும் தாய். நாம் உயர் குலத்தில் பிறந்திருந்தாலும், தாழ்ந்த குலத்தில் பிறந்திருந்தாலும், நம் உலகத் தாயே நம் அனைவர்க்கும் பிறப்பிடம், அறம் அனைவருக்கும் பொதுவானது; யாருக்கும் விலக்கப்பட்டது அன்று. அது அனைவரையும் "அறஞ் செய்ய வருக!" என் அழைக்கின்றது; குடிமக்கள், அடிமைகள், அரசர். நாடுகடத்தப்பட்டவர் முதலிய அனைவரையும் வரவேற்கின்றது. பிறப்பையும் செல்வத்தையும் நோக்குவது அன்று அறம். எத்தன்மையராயினும் அறநெறியில் நின்று ஒழுகலாம்; அறஞ்செய்யலாம்என்பதேசான்றோர்களின்துணிவாகும்.[23]

என்பது செனாக்காவினுடைய அறநெறிக் கோட்பாட்டின் சாரமாகும். புலன் உணர்வைத் தவிர்ப்பதும், தம் கடமையைக் கைக்கொள்ளப் பகுத்தறிவை நாடுவதும் நல்வாழ்விற்கு வழிவகுக்கும் என்பதும் செனாக்காவின் கொள்கைகளுள் முக்கியமானவையாகும். இவ்வகையில் திருவள்ளுவரின் அறவியல் கருத்துகளோடு செனாக்காவின் அறவுரைகள் ஒத்துள்ளன.

எனினும், செனாக்கா ஒரு கொள்கை விளக்க அறிஞரே ஒழிய, உண்மைகளைத் தாமே உணர்ந்து கண்டவர் அல்லர். ஸ்டாயிக் மெய்யுணர்வாளர்களின் கொள்கைகளை இலத்தீன் மொழியில் கவர்ச்சிமிகு நடையில் அவர் எடுத்துரைத்தார் எனும் சிறப்பையுடையவர். தம்முடைய கொள்கைகளில் சிலவற்றைக்கூட அவர், தம் வாழ்க்கையில் பின்பற்றவில்லை என்பர்.

> ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
> பேதையின் பேதையார் இல் (குறள் 834)

எனும் குறட்பாவிற்கு அவர் இலக்கியமாகத் திகழ்பவர். அவர் அறவோர் அன்று: ஒரு காரியவாதி; பொருளுக்கும் இன்பத்துக்கும் அடிமையான போகி.

---

23 Ibid PP. 60–66

அறவியல் சிந்தனையாளரிடையே !

திருவள்ளுவரின் அறவியல் கோட்பாடு முரண்பட்ட எண்ணப் போக்குகளின் எல்லைக்குச் செல்லவில்லை என்பது மேற்கண்ட ஆய்வினால் தெளிவாகிறது. உணர்ச்சிப் பஞ்சம் வாய்ந்ததும் நடைமுறைக்கு ஒவ்வாததுமான உயர் கொள்கையையோ, வெறும் புலன் நுகர் இன்பநாட்டத்தையோ பெரிதுபடுத்தும் மகிழ்வுக் கொள்கையை (Hedonistic)யோ அவர் வகுத்துரைக்கவில்லை! அறவியல் கொள்கைக்குரிய தெரிபொருளைப் புலன்களும், புலன்நுகர் இன்பங்களும் வழங்குகின்றன என்பதைத் திருவள்ளுவர் மறுக்கவில்லை. வெறும் பகுத்தறிவு முழக்கத்திற்கும், உரிமைக் கூக்குரல் களுக்கும் நேர்மாறான, உண்மையான ஒழுக்கப் பண்பை விளக்குவதே அறவியல் எனும் கருத்துடையவர் வள்ளுவர்.

அறிவிற்கும் மனவெழுச்சிக்கும் இடையே உண்டாகும் மோதலைத் தவிர்ப்பதே – தீர்ப்பதே அறக்கொள்கை எனும் எண்ணம் திருக்குறள் முழுவதிலும் இழையோடிச் செல்லுகிறது. மனிதனின் ஆன்மா தனிப் பெருந்தலைமைப் பண்புடையது என்பதையும், அறநெறி வாழ்க்கையில் அதற்குரிய இடத்தையும் அவர் தெளிவுறுத்தியுள்ளார். மனிதனுடைய நடத்தையில் உண்டாகும் சிக்கல்பற்றிய ஆய்வு முறையில், பிற சிந்தனையாளர்களின் நோக்கிலிருந்து வள்ளுவர் வேறுபடுகிறார். அவர் தொகுப்பு முறையின் மூலம், மனித உணர்ச்சிகளுக்கும் பயன் மதிப்புகளுக்கும் இடையே ஓர் இணக்கத்தைக் காண முயல்கிறார். தன்னைத்தான் அறிதலில் சென்று முடியும் படிப்படியான ஆன்மிக வளர்ச்சியின் பல்வேறு நிலைகளாகவே திருவள்ளுவர் அறவாழ்வினைக் காணுகின்றார். அதற்கேற்பப் 'பலநிலை அறங்களை'[24]ச் செயல்நிலை அறங்களாக அவர் வகுத்துள்ளார். 'அறவாழி அந்தணனா'க விளங்கும் இறைவனிடமே

---

24 மாணிக்கம்.வ.சுப.வள்ளுவம். பக். 32–66.

நற்பண்புகள் அனைத்தும் முழுநிறைவைப் பெறுகின்றன. முழுநிலையை அடைகின்றன என்பதைத் திருவள்ளுவர் தெளிவுறுத்துகின்றார்.

இவ்வாய்வால் பண்டையுலக அறவியல் சிந்தனையாளர் இடையேதிருவள்ளுவர் தனிப்பெருத் தலைவராக விளங்குவது புலனாகும். அவருடைய அறவியல் வெறும் வழக்காற்று ஒழுக்க நெறியைப் போதிப்பது அன்று! அல்லது உணர்ச்சி நிலை ஒழுக்கநெறியை மட்டும் உணர்த்துவது அன்று! அறிவு முதற் கொள்கையின் அடிப்படையில் புத்தர் பெருமான், பிளேட்டோ ஆகியோரின் சார்பில்லா அறவியல் (Absolute Ethics) அல்லது இலட்சிய அறவியல் கொள்கைகளையும்,அரிஸ்டாட்டிலின் சார்பு நிலை அறவியல் (Reiative Ethics, கொள்கையை ஓரளவிற்கும். கன்பூசியசின் செயல்முறை அறவியல் (Casuistry) கொள்கையையும், ஸ்டாயிக்கு அறவியலாரின் அனைத்துலக நோக்கையும் ஒருங்கே நாம் திருவள்ளுவரின் அறவியலில் காணுகின் றோம். வள்ளுவர் வகுத்துள்ள அறவியல் கொள்கை புத்துலகச் சிந்தனையாளர்களின் மனித நலக் கோட்பாட்டை (Humanism) அடிப்படையாகக் கொண்டது! கற்பனையுலகில் வாழும் சிலருக்கு மட்டுமே வள்ளுவரின் அறவியல் பயன்படுவது அன்று! அனைத்துலக மனிதனுக்கு என்றும், எப்பொழுதும், எவ்விடத்தும் வழிகாட்டும் ஒளி விளக்காகும். இக்காரணங்களால் உலக அறவியல் சிந்தனையாளரிடையே திருவள்ளுவர் முதன்மையான இடத்தை, ஏன் தலைமையான இடத்தைப் பெறுகின்றார்.

> ஒழுக்கமே மனிதனுடைய உயர்ந்த இலட்சியமாக இருக்க வேண்டும் என்பதை மிகுந்த துணிச்சலோடு வள்ளுவர் கூறியிருக்கிறார். ஒவ்வொருவனும் தனக்குத்தானே செய்துகொள்ள வேண்டிய கடமைகள் யாவை? மற்றவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் யாவை? என்பனவற்றைப்பற்றி எல்லாம் சிறந்த பண்பாட்டோடும்,

மதிநுட்பத்தோடும் வள்ளுவர் பேசுகிறார். உலக இலக்கியத்தில் இத்தகைய மாண்புமிக்க மெய்யறிவு வேறு எந்நூலிலும் இல்லை எனச்சொல்லலாம்,[25]

என்னும் ஆல்பர்ட் சுவைட்சரின் துணிவு, இவ்வாய்வின் முடிவிற்குச் சிறந்த அரணாக அமைகிறது.

****

25 Schweitzer, Albert, Indian Thought and its Devrlopment, P.199.

நூலாசிரியரின் நூல்கள்

தமிழ் இணையக் கல்விக்கழக மின்நூலகம் – தமிழிணையம் – இணையத் தளத்தில் [https://www.tamil/digitallibrary.in] புத்தகங்களைக் காணலாம்.

(அ) வரலாற்று நூல்கள்:

1. சிந்துவெளிதரும் ஒளி,வள்ளுவர் பதிப்பகம்,புதுக்கோட்டை, 1959.
2. வரலாறும் வாழ்வும், மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
3. தமிழர் நாகரிக வரலாறு முதல் பகுதி –"விடி வெள்ளி" தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962.
4. முதலாம் இராசராசன், தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
5. இனமரபு வரலாறு (தொல் பழங்கால வரலாறு) தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1975,
6. வரலாற்று வஞ்சி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1976.
7. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
8. சிந்துவெளி எழுத்து வடிவங்கள், மணியகம், சென்னை, 1981.
9. குறுநில மன்னர் வரலாறு – தமிழ்நாட்டு வரலாறு. சங்கக் காலம், பண்டைய அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1983.

10. Rajaraja, the Great, Madras Publications, 1984.
11. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.
12. Chieftains of the Sangam Age, 2001.
13. தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1994.
14. தமிழ்நாட்டு வரலாறு சங்கக்காலம்–வாழ்வியல் (நாகரிகமும், பண்பாடும்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.
15. History of Tamilnadu (A Birds Eye View) Authors Guild of India, 1986.

(ஆ) ஓரங்க நாடகம் :

16. அடிமை விலங்கு (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1979.
17. பொற்கொடி (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1981.

(இ) திறனாய்வும் ஆராய்ச்சியும்:

18. திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக் கழகம், 1971 (சாகித்திய அகாதெமி பரிசினை 1974–இல் பெற்ற நூல்)
19. திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.
20. வாழ்வும் இலக்கியமும், மணியகம், சென்னை, 1978.
21. திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.
22. அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.
23. சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979.
24. ஒளிவிளக்கு (திருக்குறள் ஆய்வு)) பாரி நிலையம், சென்னை, 1979.
25. தமிழ் நிலவு, மணியகம், சென்னை, 1981.

26. மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம், பாரி நிலையம்,1984.
27. தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம், தமிழ்க் கடல் பதிப்பகம், சென்னை, 1984.
28. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னை பல்கலைகழகம், 2001.
29. திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, மணியகம், சென்னை, 1982.

(ஈ) உரையும் பதிப்பும்:

30. தனிப்பாடல் திரட்டு (உரையுடன்), மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
31. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
32. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–3, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.
33. Historical Heritage of the Tamils, Vol. I. International Institute of Tamil Studies, Madras, 1983.
34. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி–1 (பதினெண் கீழ்க்கணக்கு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
35. திறனாய்வு அணுகுமுறைகள் (க.த.திருநாவுக்கரசு மற்றும் கு.பகவதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

(உ) தொகுப்பும் பதிப்பும்:

36. தொல்காப்பிய நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1971.
37. திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக் கழகம், 1972.
38. Tributes and Translations of Tirukkural, 1986.
39. Historical Heritag of the Tamils
    Dr.S.V. Subramaniyan & Dr.K.D. Thirunavukkarasu IITS, Tharamani, 1985

(ஊ) தமிழாக்க நூல்கள்:

40. ஜி.எம். டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1965,
41. வின்செண்ட் ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு– 3, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.
42. இலட்சுமிநாத பெஸ்பரூவா, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
43. இராசாராம் மோகன்ராய், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.
44. ஜீவனானந்த தாஸ், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1970.

(எ) இலக்கணம்

45. எட்டாம் வகுப்பு தமிழ் இலக்கணம், பாடநூல் நிறுவனம், 1978.

தமிழில் வெளியிட்ட கட்டுரைகள்

1950 – 51

1. பனைமர நிழலில், விவேகா, சென்னை, 1950.
2. பசிப்பிணி, விவேகா, சென்னை, 1951.

1952 – 53

இலக்கியம் காட்டும் எழிலோவியம்:–

3. முல்லை சிரித்தது
4. பெண்ணா? பேயா?
5. மின்னிகரிடையான்
6. கள்வன் மகன்
7. உயிரும் உடலும் கலைமன்றம், சென்னை, 1952–53.
8. ஆன்ம நேயம்
9. மருந்து
10. பெரும்பிணி
11. பொய்யும் மெய்யும்
12. வெண்ணிலவு

1953 – 1954

13. தமிழ்நெறி, விந்தியா, பூனா, 1953
14. வள்ளைப்பாட்டு, கலைக்கதிர், கோவை, 1954.
15. போரும் காதல் வாழ்வும், விந்தியா, 1954.

16. பாரதிகண்ட தமிழ்ச் சமுதாயம், விந்தியா, பம்பாய், 1954

17. ஓங்குக நல்லது எது? திருவள்ளுவர், திருச்சி, 1954.

18. வள்ளுவர் கண்ட மகளிர், திருவள்ளுவர், திருச்சி 1954

19. திருக்குறளின் ஆசிரியர் ஒருவரா? பலரா? திருவள்ளுவர், திருச்சி, 1954.

1955 – 56

20. தமிழக வரலாற்றில் சில புதிர்கள், குருகுலம், வாலாஜாபாத், 1955.

21. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவையும், குமரி மலர், சென்னை, 1955

22. புரட்சிக் கவிஞரின் "புரட்சிக் கவி" – ஒரு திறனாய்வு, குமரி மலர், 1956

23. தமிழ்த் தென்றல், விந்தியா, பூனா, 1956.

24. வீரகாப்பியமும் கலைக் காப்பியமும், கம்பன் மலர், காரைக்குடி, 1956

1957

25. முதியோர் கல்வியும் சோசலிச சமுதாயமும், ஆதாரக் கல்வி, 1957.

26. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் யவனரா? (மூன்றுக் கட்டுரைகள்), எழில், காரைக்குடி, 1957.

27. திருக்கோவையாரின் திறம், ஞானசம்பந்தம், தருமை, 1957.

28. தமிழ் நிலவு, தமிழ்நாடு, மதுரை, 1957.

1958

29. இசுலாமியர் வளர்த்த தமிழ், சீதக்காதி தமிழ்ச் சங்க மலர், கீழக்கரை, 1958.

30. தமிழகதத்தில் ஒரு ஹோமர், கம்பன்மலர், காரைக்குடி, 1958.

31. ரோமானியர் கண்ட தமிழகம், எழில், காரைக்குடி, 1958 (5 கட்டுரைகள்)

32. மருதனாரின் காப்பியநெறி, எழில், காரைக்குடி, 1958.

1959

33. புதுக்கோட்டை தொண்டைமான்களின் தோற்றம், அரசர் கல்லூரி மலர், புதுக்கோட்டை, 1959.

34. மனிதனும், மனச்சான்றும், எழில், காரைக்குடி, 1959

35. அறம்பிறழ்ந்த ஆட்சியாளன், கலைக்கதிர், கோவை, 1959

36. கிரேக்க நாகரிகமும் தமிழ் நாகரிகமும் (6 கட்டுரைகள்), கலைஞன் 1959.

37. தமிழகத்தின் மண்ணியல் அமைப்பு, அண்ணல் சுப்பிரமணியனார் மணி மலர், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை 1959.

1960

38. மனிதன் – அன்றும் இன்றும், தருமச் சக்கரம், சென்னை, 1960.

39. சங்கக் காலத்தில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர், எழில், 1960.

40. சான்றோர் யார்?, நண்பன், திருச்சி, 1960.

41. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (10 கட்டுரைகள்) தமிழ்ச்செல்வி, புதுவை, 1960.

42. மனிதம், புதுமை, திருச்சி, 1960.

43. தமிழகத்தில் விடிவெள்ளி, குருகுலம், வாலாஜாபாத் 1960.

44. கவிஞனின் மூன்று குரல்கள், குருகுலம், வாலாஜாபாத், 1960.

1961

45. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், காளிதாசரின் குமார சம்பவமும், குமர குருபரன், சீவைகுண்டம், 1961

46. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, திருவள்ளுவர், திருச்சி, 1961.

47. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (1960 வரை) தமிழ்ச்செல்வி, சிலம்பு 1, முத்து 8 முதல் 12 வரை 1961.

1962

48. பிளேட்டோ கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

49. அரிஸ்டாட்டில் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

50. கன்பூசியசு கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை 1962.

51. தமிழன் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

1963

52. வள்ளலார் காட்டிய வழி, குருகுலம், வாலாஜாபாத், 1963.

53. இலக்கியமும் வாழ்க்கையும், முக்கனி, சென்னை 1963.

54. முருகனும், முத்தமிழும், முக்கனி, சென்னை, 1963.

55. அடிகளின் அறைகூவல், குருகுலம், வாலாஜாபாத், 1963.

56. பிள்ளைத்தமிழின் அமைப்பும் அழகும், குமரகுருபரன், சீவைகுண்டம், 1963.

57. தென்னிந்தியாவும் இலங்கையும், கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1963. (நான்கு கட்டுரைகள்)

1964

58. நாகரிகமும் பண்பாடும் (5 கட்டுரைகள்), புதுமை, திருச்சி, 1964.

59. தென்னிந்தியாவும் இலங்கையும் (தொடர்ச்சி –5 கட்டுரைகள்), கலைச்செல்வி, யாழ்ப்பானம், 1964.

60. உலக நாகரிகத்தில் தமிழ்ப்பண்பாடு, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964. (3 கட்டுரைகள்)

61. பொய்தீர் ஒழுக்கநெறி, சென்னை மாநகரத் தமிழாசிரியர் கழக மாநாட்டு மலர், சென்னை, 1964.

1965

62. தன்னுணர்ச்சிப் பாட்டு, அறுவடை, காஞ்சி, 1965.

63. நெடுநல்வாடை – திறனாய்வு: தமிழ்ச்செல்வி, புதுவை, 1965.

64. தாய்மொழியும் பிறமொழி ஆதிக்கமும், காஞ்சி, 1965.

65. சோழர் காலத்திய சமுதாயநிலை, கல்வெட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னை, 1965.

1966

66. திருநெறி, சுத்த சன்மார்க்கம், வேலூர், 1966.

67. மெய்யுணர்வுக்காதல் நெறி, சத்தியஞானசபை, நூற்றாண்டு விழா மலர், வேலூர், 1966.

68. இன்பம், கல்வி, சென்னை, 1966.

69. தமிழ்மொழியின் நெடுங்கணக்கு, நக்கீரர் கழக ஆண்டு மலர், சென்னை, 1966.

70. திருக்குறளின் மொழியியல்புகள், பச்சையப்பன் கல்லூரி 125 ஆவது விழா மலர், சென்னை, 1966.

1967

71. தமிழக வரலாற்றின் படிப்பினைகள், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

72. சிந்தாதிரிப்பேட்டை,கல்யாணம்மகளிர்உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.

73. பரணியின் பல்சுவை – இன்பச்சுவை, கலைஞன், திருச்சி, 1967.

74. மும்மணிகள், கலைஞன், திருச்சி, 1967.

1968

75. அச்சுப்புத்தகத்தின் தோற்றம், ஆரம்பக்கல்வி, சென்னை, 1968.

76. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழக அரசின் வெளியீடு, சென்னை, 1968.

77. இளங்கோ கண்ட இயற்கை, தமிழகம், சென்னை, 1968.

78. வால்ட்விட்மனும் புதிய கவிமரபும், கவிதை, சென்னை, 1968.

79. இன்றைய தமிழ்க் கவிதைகளும், புதுமைப் போக்குகளும், கவிதை, சென்னை 1968.

80. கவிஞர் தமிழ் ஒளியின் புரட்சிப் படைப்பு, கவிதை, சென்னை, 1968.

81. ஆராய்ச்சி அறிஞர் சிவராசபிள்ளை, குமரிநாடு, நாகர்கோயில், 1968.

82. எல்லிஸ் கலைக்களஞ்சியம் தொகுதி 10, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, 1968

83. கல்வெட்டுகளால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு, கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை – 1, 1968.

1969

84. உலகில் தோன்றிய முதல் நாவல், குமுதம், சென்னை, 1969.

85. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் நாகரிகம், மதுரை வரலாற்றுப் பேரவை மலர், மதுரை, 1969.

86. தமிழகத்தின் இசைக் கருவிகள்,குழந்தை வீணை காயத்ரி பாராட்டுவிழா மலர், சென்னை, 1969.

87. வரலாற்று வஞ்சி, மறைமலையடிகள் நினைவுமலர், நாகப்பட்டினம், 1969.

88. திருக்குறளின் தனிச்சிறப்புகள், Annals of Oriental Research சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1969.

89. நிலமும், நீரும், தமிழ் உறவு மகளிர், சென்னை, 1969.

90. திருக்குறளின் மாட்சி, மன்றம், சென்னை, 1969.

91. மன்னரை அணுகும் முறை, குறள் மலர், திருச்சி, 1969.

92. அவையும் அறிஞனும், குறள்மலர், திருச்சி, 1969.

93. திருவள்ளுவர் ஆண்டு ஈராயிரம், திருவள்ளுவர் சபை, சிந்தாரிப்பேட்டை, 1969.

94. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழா மலர், சென்னை, 1969.

95. திருக்குறளும் சங்க இலக்கியங்களும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969 (மலர்)

96. குறளோவியம், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா மலர், புதுக்கோட்டை, 1969.

97. அடிகள் கண்ட அம்பலவாணர், அருட்பெருஞ் சோதி, சென்னை, 1969.

98. சீவகசிந்தாமணி கு. மதுரை முதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர், மாருதி பிரஸ், இராயப்பேட்டை, 1969.

1970

99. திருக்குறளும் சமண ஆகமங்களும், நல்லறம், சென்னை, 1970.

100. இந்திய நாடகக் கலையின் தந்தை டி.கே. சண்முகம் மணிவிழா மலர், சென்னை, 1970.

101. வள்ளுவர் காட்டும் பொருளியியல், இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற மலர் 1970.

102. சமணமும் தமிழும், தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தில்லி, 1970.

103. பண்டைத் தமிழ் மகளிரும் கச்சணிதலும், இரண்டாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருச்சி 1970.

104. நான்கு நாணல்கள் ஒரு மதிப்பீடு – திறனாய்வு, தமிழுறவு மலர், சென்னை, 1970.

105. தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, நண்பர் வட்ட மலர், சென்னை, 1970.

106. நெஞ்சுக்கு நீதி (குறள் விளக்கம்), நல்லறம், சென்னை, 1970.

107. திறந்த புத்தகம், காந்தியடிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970.

108. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா? (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

109. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள், (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.

110. புண்ணும் வடுவும் (குறளாய்வு), ஆரம்பக் கல்வி, சென்னை, 1970.

111. சங்க இலக்கியங்களில் திருக்குறள், கழகப் பொன்விழா மலர், கழகம் சென்னை –1, 1970

112. நாவலர் நற்றமிழின் காவலர், நாவலர் நெடுஞ்செழியன் பொன்விழா மலர், சென்னை –7, 1970.

1971

113. பண்டைத் தமிழ்ச் சமுதாயமும், நல்லறமும், சென்னை

1971

114. தமிழகத்தின் ஆண்டுக் கணக்குமறை, மூன்றாவது இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1971.

115. வரலாற்றின் எச்சரிக்கை விசய்நகர பாமினி அரசுகள், தமிழரசு, சென்னை, 1971.

116. தாய்மொழிவழிக் கல்வியே தாயகத்திற்குத் தேவை, முரசொலி, சென்னை, 08.01.1971

117. தமிழறிஞர் வி. கனகசபை பிள்ளை, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1971.

118. பழமொழிகள் உணர்த்தும் கடவுட்கொள்கை, சிதம்பரம் சிவகாசி அம்மை கும்பாபிஷேக மலர், சிதம்பரம், 1971.

119. பழமொழிகள் காட்டும் மகளிர் இயல்பு, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சென்னை, 1971.

1972

120. வள்ளுவர் கண்ட மனிதன் – 1, தமிழியல்(JOTS) சென்னை, 1972.

121. திருக்குறளும் தம்மபதமும், தருமச்சக்கரம், சென்னை, 1972.

122. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருவனந்தபுரம், 1972.

123. முப்பாலுள் முதுமொழிகள், கி.ஆ.பெ.வி. மலர், கோவை, 1972.

124. இலக்கியம் உணர்த்தும் வரலாறு, தமிழுறவு, சென்னை, 1972.

125. அறங்கூறும் அவையம், தமிழ்ப்பணி, சென்னை 1972.

126. பழமொழிகளில் பழந்தொழில், நிலவளம், சென்னை, 1972.

127. பைந்தமிழ்ப் பாவலர்: கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், 1972.

128. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் கொள்கை, திருக்கும்பாபிஷேக மலர், சபாநாயகர் கோயில், சிதம்பரம் 1972.

129. தமிழர் திருநாள், சமயம், 1972.

1973

130. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு, தமிழ்ப்பணி, சென்னை, 1973.

131. மூவகை மனிதர், கனகசபைப்பிள்ளை மணிவிழாமலர், சிதம்பரம், 1973.

132. மனிதனாக வாழ வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி, 1973.

133. வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி 1973.

134. சீவகசிந்தாமணி ஒரு காப்பியமாகுமா? திருக்கோயில், சென்னை, 1973.

135. ஊன்றுகோல் (குறள் வழிக்கதை), கரும்பு, திருச்சி, 1973

136. அழுக்காறு வேண்டாம் (குறளமுதம்), சி.ப. மலர், சென்னை, 1973.

137. பெண்வழிச் சேறல், கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை, 1973.

138. வள்ளுவர் கண்ட மனிதன் –2, தமிழியல், சென்னை, 1973.

139. பாரதியாரின் இலக்கியக் கொள்கை, ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், சென்னை, 1973.

140. திராவிட இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு), தமிழாய்வு தொகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு – 1973.

141. பாரதியின் இலக்கியக் கொள்கை, ஆய்வுக்கோவை தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு, 1973.

1974

142. சும்மா, மலைச்சாரல், சோளிங்க புரம், ஏப்ரல், 1974.

143. நூறாண்டு வாழ்க – திறனாய்வு, தமிழ்ப்பணி, 1974.

144. வாணிதாசரின் வளமார் தமிழ், தமிழ்ச்சாரல், 1974.

145. கணக்காயர், ஆசிரியர் நரசிம்மன் அவர்கள் நினைவுமலர், சென்னை, 1974.

146. தமிழ் வளர்த்த பெரியார்கள், மு.சு. பூரணலிங்கம் பிள்ளை, நூலகம், சென்னை, 1974.

147. தமிழ் வளர்த்த பெரியார்கள், திருமணம் செல்லக் கேசவராய முதலியார், நூலகம், சென்னை, 1974.

148. வரலாறும், பண்பாடும், பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்க மலர், சென்னை, 1974.

149. தாயா? தமக்கையா?, ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, புதுவை, 1974.

150. தமிழும் மலையாளமும், செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1974.

1975

151. எழிலோவியம் காணவாரீர்.

152. தமிழிற்கு ஓர் அறண்

153. அறிஞர் அறவாழி

154. சிலப்பதிகாரத்தின் மாண்பு

155. இராசராசன் கொலைகாரனா? புலமை தொகுதி 1 பகுதி 1, சென்னை – 18, 1975.

1977

156. டாக்டர் மு.வ.வின் புதிய உலகம் திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை –30, 1977.

1978

157. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 4, ஜனவரி 1978.

158. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 5, பிப்ரவரி 1978.

159. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 6, மார்ச் 1978.

160. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 7, ஏப்ரல்1978.

161. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 8, மே 1978

162. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 9, ஜூன் 1978

163. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 10, ஜூலை 1978

164. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 12, செப்டம்பா; 1978

165. கந்தபுராணம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 3, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – 20,1978.

166. நூல்அறிமுகம் – காளிதாசன் உவமைகள்,புலமைதொகுதி –4, பகுதி 3,4, சென்னை –18, 1978.

167. முக்காவல் நாடு, ஆய்வுக்கோவை தொகுதி 10, பகுதி 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு அண்ணாமலை நகர், 1978.

1979

168. கடவுள் நெறி, திருக்கோயில் மாலை 21, மணி 11, ஆண்டு 1979.

169. கல்லாடம் தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 4, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை 20, 1979

170. திருவள்ளுவரும் சர்வக்ஞரும், திருவள்ளுவர் 2010–ஆம் ஆண்டு மலர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், பெங்களூர் 42, 1979.

1980

171. வாணிதாசன் கவிதைகளில் படிமக் காட்சி, ஆய்வுக்கோவை12, தொகுதி1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், 1980.

172. பண்பாடு சமஸ்கிருத மயமாக்கப்படுதல்

173. வரலாற்றியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை – 17.

174. மறுமலர்ச்சி

175. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் அரசியல் உறவு.

176. தமிழ் உரைநடை

177. உவமை

178. பொற்காலம்

179. பாவியலில் கற்பனை

180. கம்பனுக்கும் ஒரு தாசன் விக்ரமன் பொன்விழா மலர் 17.3.1978.

181. கல்லணையைக் கட்டியது யார்?

182. பசி

183. பகை பிறந்தெறிதல்

184. நான்கண்ட அடியாருக்கு நல்லார்–தி.க.நாராயணசாமிநாயுடு 80–ஆம் ஆண்டு நினைவு விழா மலர்.

185. நன்னூல் உரை ஆசிரியர்கள்

186. சிறுநெறி

187. அறிவு என்பது என்ன?

188. மணிமேகலை காட்டும் கடவுள் நெறி

189. சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை

190. தமிழரின் கலைக்கோட்பாடு, உ.த.ஆ. நிறுவனம் 9.2.87

191. மறுமலர்ச்சிப் பாடல்களில் கவிதை இன்பம்

192. முடமோசியார் – யவனரா?

193. பழியும், பாவமும்

194. வினையின் பயன்

195. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் நெறி

196. இருட்டறை

197. மதுராந்தகம்

198. குறவஞ்சி

199. திருக்குறளை வேதமாகப் போற்றுவது பொருந்துமா?

200. வேளிர்

201. மனம்

202. திராவிட மொழிகளில் நீதி இலக்கியம்

203. தேசீயம்

204. வரலாற்றுக் காலம்

205. வள்ளலார் காட்டிய வழி

206. இலக்கியப் படிமங்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

207. வேதங்கள்

208. வீரயுகப் பாடல்கள்

1988

209. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, நவம்பர், 1988

210. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, டிசம்பர், 1988

211. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஜனவரி 1989

212. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, பிப்ரவரி 1989

213. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, மார்ச் 1989

214. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஏப்ரல் 1989

215. சீனாவில் சிறப்புற்ற காஞ்சி இளவரசர், தினமணி, 15.02.1989

216. மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிமுரசு

217. பதினெண் கீழ்கணக்கின் கற்பனைவளம்

218. பழந்தமிழ்க்குடிகள், "முதன்மொழி" உலகத் தமிழ்க் கழக மாதிகை சென்னை 16.

219. ஒன்றே தெய்வம் இராமலிங்க வள்ளலார் வானொலி, ஆல் இண்டியா ரேடியோ, சென்னை –4, நாள் 7.11.71

220. A Tamil Savant From the City of Madras (8.1.1901 to 27.8.1988)

221. மறுமலர்ச்சித் தமிழ் உரை நடை

222. சித்தர்களின் மெய்ஞ்ஞானம் – உ.த.க. நிறுவனம் 8.6.1977 83–ஆம் ஆய்வுமன்ற கருத்தரங்கு

223. குறவஞ்சி

224. சான்றோர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் மரபொழுங்கங்களும்

225. இந்திய நாடகக் கலையின் தந்தை

226. படிமங்கள்

.....

வாழ்க்கைக் குறிப்பு

1)	தோற்றம் – மறைவு	20.11.1931 - 05.05.1989
2)	பிறந்த ஊர்	கருங்குழி, மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்
3)	கல்வி	சிந்தாதரிப்பேட்டை ஆண்கள்
	பள்ளிக்கல்வி	உயர்நிலைப்பள்ளி, சென்னை
	புதுமுக வகுப்பு	விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர், சென்னை
	இளங்கலை	1951–1954
	(ஹானர்ஸ்)	பச்சையப்பன் கல்லூரி
	தமிழ்	சென்னைப் பல்கலைக்கழகம், முதல்
	பின்னர் முதுகலை	வகுப்பு, முதல்நிலை
	(தமிழ்)	
	முதுகலை வரலாறு	சென்னைப் பல்கலைக்கழகம் தனிநிலைப்படிப்பு (1956)
	முதுகலை இலக்கிய ஆராய்ச்சி	"பழந்தமிழ் இலக்கியத்தில் அறம்" (ஆங்கிலத்தில்) அண்ணாமலை பல்லைக்கழகம் (1963)

மொழியியல்	அண்ணாமலை பல்கலைக்கழகம்
பெருஞ்சான்று	(1963)
முனைவர்பட்டம்	பேராசிரியர் மு.வரதராசனாரின் படைப்பிலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் 1979.
ஆசிரியர் பணி	1. 6 ஆண்டுகள், பயிற்சி ஆசிரியர், அரசர் கல்லூரி, புதுக்கோட்டை 1954 – 1959.
	2. 7 ஆண்டுகள், துணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை 1962–1968
	3. 2 ஆண்டுகள், முதல்வர், மணலித் தமிழ்க் கல்லூரி சென்னை 1968–1969
	4. 3 ஆண்டுகள், திருக்குறள் ஆராய்ச்சித் துறைத் தலைவர் சென்னைப் பல்கலைக்கழகம்," 1962–1972.
	5. 19 ஆண்டுகள், இணைப் பேராசிரியர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சியியல்), உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
தெரிந்த பிறமொழிகள்	சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம்
விருதுகள்	1. சாகித்திய அக்காதெமி விருது (1974) திருக்குறள் நீதி இலக்கியம்
	2. தி.ரு.வி.க விருது 1985

.....

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

குறிப்புகள்

நூலாசிரியர், அவர் படைப்புகள்
பற்றிய இணையதளம்

இ-புத்தகத்தை வாசிக்க /
பதிவிறக்கம் செய்ய

நூலாசிரியர், அவர்
படைப்புகள் பற்றிய யூடியூப்

ISBN 978-93-48345-93-6
9 789348 345936